www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

ஜூன்.22–28,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 210

# அழித்தொழிக்க கட்டளை! புகுந்தது எப்படி?

## புதிய தகவல்கள்



## திரைக்கு வந்த குடும்பப் பெண்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## தப்பாத குறி

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

வன்னிச் சமர்
மாபெரும் மனித அவலங்களை
உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

சமர் தொடரும்
என்று அரசு சொல்கிறது.

அடுத்த பொதுத் தேர்தல்வரை
போர் ஓய்வதற்கான
அறிகுறிகள் தெரியவில்லை!

பொதுத் தேர்தலுக்காக
அரசு நம்பியிருக்கும்
அரசியல் மூலதனம்
யுத்த வெற்றிச் செய்திகள்தான்!

தாண்டிக்குளச் சமரில்
புலிகள் ஷெல்லடித்ததை
பிரதி பாதுகாப்பு அமைச்சர்
கண்டித்திருந்தார்.

பொதுமக்களின்
உயிரழிவுகள், உடமையழிவுகள்
என்பவற்றுக்கு
யார் காரணம் என்றாலும்
கண்டித்தேயாகவேண்டும்!

ஆனால்-அதே சமயம்
தாண்டிக்குளச் சமரில்
படையினர் வைத்திருந்த
எண்ணாயிரத்துக்கு மேற்பட்ட
ஆட்டிலெறி ஷெல்கள்
நாசமாகியுள்ளன என்று
தகவல்கள் கூறுகின்றன.

விநியோக தளத்தில்
இருந்தவை எண்ணாயிரமெனில்
விநியோகிக்கப்பட்டவை
எத்தனை எத்தனை ஆயிரங்கள்?!

குடியிருப்புக்களைக் கொண்ட
பிரதேசத்தில் நடைபெறும்
யுத்தமொன்றில்
ஆட்டிலெறிகளையும், பீரங்கிகளையும்
பிரதான படைக்கலங்களாக
அரசு பயன்படுத்துகிறது.

ஷெல்லடிகளால்
ஒருபோதும் புலிகளை
சேதமாக்க முடியாது!

யாழ் குடாநாட்டுப் போரில்
பொழியப்பட்ட ஷெல்கள்
போடப்பட்ட குண்டுகள்
எத்தனை எத்தனை ஆயிரம்?

கட்டிடங்களும்
பொதுமக்களின் குடியிருப்புக்களும்
உடைந்தன- உருக்குலைந்தன
எலும்புக் கூடுகளாக
இன்னும் காட்சி தருகின்றன!

ஆனால்-புலிகளோ
முன்பைவிட
பலமடங்கு பலத்துடன்
தம் பாய்ச்சல்களை
நடத்திக் கொண்டிருக்கிறார்கள்!

அப்படியானால்
இதுவரை பொழியப்பட்ட ஷெல்கள்
வீசப்பட்ட விமானக்குண்டுகள்
சாதித்தவை என்ன?

சமர் நடைபெறும் பகுதியில்
இருந்து 20 கிலோமீட்டர்
தூரத்தில் இருப்பது மாங்குளம்!

அத்தனை தூரத்துக்கு
ஏவப்பட்ட ஷெல்கள்
குடிமக்கள் உயிர் குடித்தன!

கிழக்கிலும்
கிடுகிடுக்க வைக்குமளவுக்கு
குடியிருப்புக்களை நோக்கி
ஷெல்மழை பொழியப்படுகிறது!

இவற்றையெல்லாம்
புலிகளுக்கு எதிரான
போர் நடவடிக்கை என்று
வியாக்கியானம் செய்யலாமா?

இந்நிலையில்
பிரதி பாதுகாப்பு அமைச்சர்
புலிகளை மட்டுமே கண்டித்திருப்பதும்
அவர் கூறியுள்ள கருத்துக்களும்
சுவரில் எறிந்த பந்தாக
திரும்பிச் செல்லக் கூடியதே!

புலிகள் ஷெல்லடிப்பது
ஈவிரக்கமற்ற செயல் என்று
அமைச்சர் கூறியிருக்கிறார்.
படையினர் ஷெல்லடிப்பதை
ஜீவகாருண்யம் என அவர்
நினையார்தான்!

அப்படியிருந்தும்
படையினரின்
எல்லையில்லாத எறிகணை வீச்சை
ஏன் கட்டுப்படுத்த முடியவில்லை?

யுத்தத் தேரில் இருந்தபடிதான்
இனப்பிரச்சனையையும்
அடுத்த பொதுத்தேர்தலையும்
சந்திக்க அரசு நினைப்பதால்
கடிவாளம்
படைத்தரப்பினரிடம்தான்
இருக்கிறதோ என்று
சந்தேகம் வருவது நியாயம்தானே!

எப்படியோ,
ஒரு விடயம் உறுதி,
படைத்தரப்பால்
ஏவப்படும் ஷெல்கள் ஒவ்வொன்றும்
'இந்த யுத்தம்
தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல'
என்ற அரசின் அறிவிப்பை
குறிவைத்துத் தகர்த்துக்
கொண்டிருக்கின்றன!
தப்பாத குறி அதுதான்!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஒப்புரவு

"இவர்களை எனக்குப் பிடிப்பதில்லை; இவர்களோடு பேசுவதற்கு விருப்பமில்லை; எனது நிம்மதியைக் கெடுத்தவர்கள்; எனது சந்தோசத்தைக் கெடுத்தவர்கள். இவர்களோடு உறவு வேண்டாம். இவர்களைப் பார்ப்பதைக் கூட அருவருக்கிறேன்," என்று கூறுகின்றவர்களை நாம் காணுகின்றோம்.

"நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து உன் பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில், பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்து விட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி; பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து." (மத்தேயு 5:23-24)

நாம் மற்றவர்களுக்கு துரோகிகளாகவும், தூஷிக்கின்றவர்களாகவும், எதிரிகளாகவும், ஏளனம் செய்கின்றவர்களாகவும், அன்றாடம் தொல்லை கொடுக்கின்றவர்களாகவும் செயற்பட்டு இருந்திருக்கலாம். மற்றவர்களின் மன நிலைகளை, உணர்வுகளை மதியாதவர்களாக, அன்பை, சகோதர உறவை உதாசீனம் செய்தவர்களாகவும் வாழ்ந்திருக்கலாம். மற்றவர்களின் கண்ணீருக்கு காரணமாக இருந்திருக்கலாம். ஆண்டவர் இயேசு யாரையும் கண்ணீர் சிந்த வைக்கவில்லை. கவலைப்படுத்தவுமில்லை, நம்முடைய பாவச் செயல்களின் மூலம் அவர் கண்ணீர் சிந்தினார் எனக் காண்கின்றோம். யாருடைய கண்ணீருக்கும் கவலைக்கும் உறவில் விரிசலுக்கும் நாம் காரணமாய் இருக்கிறோம் என்பதை உணர்ந்து ஆண்டவர் இயேசுவிடம் மன்னிப்புக் கேட்பதோடு மட்டுமன்றி, மனித உறவோடும் நாம் சரியான விதத்தில் இருக்க ஒப்புரவாகிக் கொள்ள முயலுவோமாக.

சகோ. எஸ். யேசுநாதன், தளவாய்-செங்கலடி.

## ஆன்மீகம்



## ஈருலகம் பற்றி இறைத் தூதர் கூறியது

இன்றைய மணப் பெண்கள் தம் கணவர்மாரிடம் அவர்கள் வருவாய்க்குமேல் பணம் கேட்டு வாழ்க்கைத் துணைவனை வம்புக்கு இழுக்கிறார்கள். இதற்குக் காரணம் அடுத்தவன் மனைவியின் பணக்கார படாடோப வாழ்க்கையே!

"இப்படியானவர்களுக்கு இறைதூதர் கூறிய உபதேசம்: உங்களைவிட தாழ்ந்த அந்தஸ்திலுள்ளவர்களையே கவனியுங்கள். உங்களைவிட உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்களை கவனிக்காதீர்கள்" என்று.

மேலும் அவர்கள் சொன்னார்கள்: "நரகத்தில் நான் அதிகளவு பெண்களைக் கண்டேன். அவர்கள் தான் (லஃனத்) சாபமிடுகின்றவர்கள் என்றும் தன் கணவர்மாரிடம் நன்றியில்லாமல் நடந்து கொள்பவர்கள்" என்றும் விபரித்தார்கள்.

ஆதாரம் (மிஸ்காத்)

"ஆகவே மணப் பெண்களே! அல்லாஹ்வால் உங்களுக்கு கொடுக்கப்பட்டவைகளை வைத்து திருப்தியடையுங்கள். இது ஈருலக இன்பத்துக்கும் வழிவகுக்கும்."

எம்.சி. கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல. 207



### பரிசுக்குரிய கவிதை

#### பரிணாம வளர்ச்சி

சாப்பாட்டுப் பொதி அன்று!
குண்டுப் பொதி அடுத்து!
தீர்வுப் பொதி நேற்று!
குழந்தைப் பொதி இன்று!

சோ. செல்வமலர்- குருமன்காடு, வவுனியா.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

#### மறந்தீரோ?

சின்னச் சின்னக் கூடுகளில்
சிறையிருக்கும் சிட்டுக்களே...!
சன்னம் மழையாய்ப் பொழிவதனால்,
புன்னகைக்க... மறந்தீரோ.!?

எஸ். ஸப்ரினா- அநுராதபுரம்.

#### அதுவரைக்கு இப்படியோ?

மலையகத்துப் பிள்ளைத் தொழுவம்
மறுசீராக்கப் படும் வரை
மழலைகளைப் பரணில்கட்டி
பாதுகாக்கும் காட்சியாமோ?

ச. மகாலிங்கம்-வெலிமடை குரூப், வெலிமடை.

#### பிறந்தே(ஏ)ன்?

ஐந்தில் நாலு
அவனியைப் பார்க்குது;
ஒன்று ஏனோ
வானத்தை நோக்குது!
குண்டு பொழியும் பாரினில்
பிறந்தே(ஏ)ன் என்றா..?

அ. சந்திரபோஸ்-வஞ்சியன்குளம், நானாட்டான்.

#### காணுமோ தொகை?

கருவறையில் ஒருமித்துக்
காட்சிப் பொருளானோம்!
கரை காணா யுத்தத்தில்,
கணக்கில்லா உயிரிழப்பை
காசினியில் ஈடுசெய்யக்
காணுமோ எங்கள் தொகை?

செல்வி மதுரா யோகேந்திரன்- திருக்கோவில்.

#### மாறுபாடு

வெறுப்போருக்கு
வேங்கைக் குட்டிகள்!
இரசிப் போருக்கு
கிளிக் குஞ்சுகள்!

இரா. இராமகிருஷ்ணன்- இராணிக்காடு, பொகவந்தலாவ.

#### பிஞ்சு

ஆட்களை எடைபோட
கற்றுக் கொடுக்காமல்,
மனங்களை எடைபோட
கற்றுக் கொடுங்கள்!

சுபா வரன்-கண்டி.

#### சோதனையில்...

விந்தை மிகு விஞ்ஞான வித்தையால்
சோதனைக் குழாய்களீன்ற
சுந்தரக் குழந்தைகள்!

அ. சந்தியாகோ- அசோகா வித்தியாலயம், கண்டி.

#### புதுத்தூளி

யுத்தம்
எமக்களித்த
புதுத்தூளி...!

அ. பரமேஸ்வரன்- கொழும்பு-13.

#### ஒளி விளக்குகள்!

வெளிச்சக் கூட்டிற்குள்
உயிருள்ள
ஒளிவிளக்குகள்!


வாஹிட் ஏ. குத்தாஸ்- கோட்டைமுனை.

#### கவனிக்குக!

தவழவிட வேண்டாம்!
தரையெல்லாம்
மிதிவெடிகள்

றெக்னா-சியோதயன், இராகமை.

## கவிதைப் போட்டி இல.210



கவனியுங்கள்! என்னத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 28.06.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.210
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.



## வாசக(ர்)சாலை

"என்னங்க பேயறைஞ்சவர் மாதிரி இருக்கீங்க?"

"பேயறைஞ்ச மாதிரி இல்ல. பாம்பு கடிச்ச மாதிரி ஆகிட்டேன்..."

"என்ன சொல்றீங்க?"

"கடந்த மூணு வாரமா தினமுரசுல அடுத்தடுத்து பாம்பையே பார்த்துப் பார்த்து இப்படுத்தா பாம்பெல்லாம் என்னோட 'டயட்' பாடுது. யார்கிட்டயாச்சும் மந்திரிச்சி நூல் கட்டினாத்தான் சரிவரும் போல இருக்கு...."

என்ன தினமுரசுக்கு இப்போது சந்தோஷம் தானே! அதுக்காக பாம்பை விட்டுடாதீங்க சுவாமி! தொடரட்டும் உங்கள் (பாம்பு) பணி!

திருமதி இந்திராணி பாலகிருஷ்ணன், அட்டன்.

● ○ ●

அன்பின் எனது உள்ளம் கனிந்த தினமுரசுக்கு! நான் யாழ்ப்பாணத்தில் நாவற்குழி எனும் ஊரில் வசித்து வருகின்றேன். நான் தினமுரசை ஒவ்வொரு கிழமையும் படிக்காட்டிலும், கொழும்பில் இருந்து வருகிறவர்கள் கொண்டுவரும்போது வேண்டி மிகுந்த ஆவலுடன் படிப்பேன். நான் மட்டும் ஆவலுடன் படிப்பது இல்லை. என் நண்பர்களும் யாரும் தினமுரசு கொழும்பில் இருந்து கொண்டு வந்தால் குறிப்பிட்ட மணித்தியாலத்துக்குள் படித்து அடுத்த மணித்தியாலத்துக்குள் மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டும். நாங்கள் படிக்கும்பொழுது இன்னொரு பேப்பருக்குள் வைத்து கசங்காமல் தான் படிப்பம். அவ்வளவு கவனம். எமது நிலமை உங்களுக்கு புரியும். இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து எமக்கும் வாரந்தோறும் தினமுரசு கிடைக்க ஏற்பாடு செய்வீர்களா?

இம்மடலை கொழும்பு வருகின்ற ஒருவரிடம் கொடுத்துவிட்டுள்ளேன். இம்மடல் உங்களுக்கு கிடைக்கும் என நினைக்கிறேன். விலாசம் சரியோ, பிழையோ தெரியவில்லை.

ந. யோகன், நாவற்குழி.

● ○ ●

எங்கள் அபிமானத்தை வென்ற இனிய முரசே! நீ வாரா வாரம் சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் வெகுஜோர். விஷேசமாக ரசிகன் தரும் 'கொள்ளை ராணி பூலான்தேவி' அருமையிலும் அருமை. கொள்ளை ராணி அல்ல அவள் கொள்கை ராணி! தொடரை சுவைபடத்தரும் ரசிகனுக்கு 'நன்றி'கள் பல.

செல்விகள் கே.ரீ. கமலினி, கே.ரீ. றோகினி, சம்மாந்துறை.

தமிழ்க்கட்சிகள் இந்த [illegible]த்தில் தமக்குரிய கடமையை செய்யாவிட்டால் வரலாறு அவர்களை மன்னிக்காது. 'முரசு' காலமறிந்து தரும் விமர்சனங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு உறைக்காதுபோனாலும், மக்களுக்காயினும் உண்மைகள் புரியட்டும்.

ஆர்.எம். லோகேஸ்வரன், பொத்துவில்.

● ○ ●

என் இனிய முரசிற்கு.

என் அபிமான எழுத்தாளர் ராஜேஸ்குமாரின் புதிய தொடர் ஆரம்பமே அசத்தல். மேலும் பூலான் ஒவ்வொரு வார முடிவிலும் அடுத்து என்ன நடக்குமோ? என எதிர்பார்க்க வைத்து விடுகிறாள். ரசிகனின் ரசனையில் பூலானை பார்ப்பதில் எமக்கு இன்ப மகிழ்ச்சி!

இரா. சாந்தராஜா, பாம்காடன், இரத்தினபுரி.

### ஒரே மேடையில்

'துரையப்பாவுக்கு சிலை' என்று காதிலை பூ கந்தசாமியார் செய்த கற்பனை சிரிக்கமட்டுமல்லவே. யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி அலுவலகமும் திறந்து வைக்கப் பட்டுள்ளது. கொழும்பில் திருவாளர் சிவசிதம்பரமும், இராசதுரையும் ஒரே மேடையில் தோன்றுகிறார்கள். காட்சிகள் மாறுகின்றன. கழுதை தேய்ந்தால் கட்டெறும்பு.

சி. நவநீதன், கொழும்பு-08.

### இழக்கலாமா?

உரிமை இழந்தோம், உடமைகள் இழந்தோம். உதிரமும் இழந்தோம். உணர்வை இழக்கலாமா? இன்று எம் அரசியல் கட்சிகள் தம்மைத் தாமே கேட்கவேண்டிய கேள்வி இதுதான். மனச்சாட்சிகள் பேசவேண்டிய வேளை இது. பேசுமா?

ஜெயராசா-மு, உடப்பு.

### பூலான் வேகம்

பூலானிடம் நாமெல்லாம் எதிர்பார்த்த வேகத்தை இப்போதுதான் காண்கிறோம். பூலான் பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்து கொடுத்த அடியைப் படிக்கையில் சிலிர்ப்பு ஏற்பட்டது. அதேவாரம் மட்டக்களப்பில் பொலிஸ நிலைய பாலியல் வதை செய்தி பத்திரிகைகளில் வந்திருந்தது. முன்னரும் முரசின் கார்லோஸ் தொடரில் இடம்பெற்ற சம்பவங்கள் அதே வாரம் நாட்டில் நடந்ததை (ரயில் குண்டுவெடிப்பு) ஒரு சக வாசகர் முன்னர் வாசகர்சாலைக்கு எழுதியதாக ஞாபகம். என்ன பொருத்தம்?!

மு. கைலைநாதன், கொக்கட்டிச்சோலை.

முரசே! நீ புதிதாக ஆரம்பித்திருக்கும் தொடர் கதை ஆரம்பமே அடுத்தகட்டத்தை எதிர்பார்க்க வைக்கின்றது. 'கனவு மெய்ப்பட வேண்டும்' நாயகி சுமதி கணேசனைப்பற்றி காதலிக்கும் போதே தெரிந்துகொண்டும் ஏன் கல்யாணம் வரை சென்றாள்? காதலித்த பாவத்திற்காகவா?

வேலுப்பிள்ளை புனிதா, கலவான.

● ○ ●

அறையினில் நடந்தாலும் எதுவும் அம்பலமாகிவிடும். திரையுலக மறுபக்கச் செய்திகளை திரட்டித் தருகிறாயே! அதுவும் அப்படித்தானோ?! 'சினிவிசிட்' வர வர மெருகேறுகிறது.

எஸ். ஆர். ஜெகன், கொழும்பு-06.

● ○ ●

மலையக தனித்துவ தலைவரும், சிஷ்யரும் இணைந்தனர்- கலந்தனர் என்று எல்லோரும் செய்தி சொல்லினர். அதிரடி அய்யாத்துரையார் மட்டும்தான் உண்மையை எடுத்து வைத்திருந்தார். இங்கு இரு அணிகளும் தொடர்ந்து ஏட்டிக்குப் போட்டியாகவே இருக்கின்றன.

மா. தென்னவன், தலவாக்கல.

### மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:

* எம். மயூரன், அனலைதீவு.
* செல்வி பஸ்மியா இஸ்மாயில், தெல்தொட்ட.
* ஏ.எல். அமீர் ஹுஸைன், கல்முனை-03.
* ஆர். தருமராஜ், மேமலை.
* என். தனபாலன், நாவலப்பிட்டி.
* எஸ்.கே. செல்வமலர், இரத்தினபுரி.
* மு. சித்ரானந்தன், பதுளை.
* விக்ரம் கமலநாதன், நீர்கொழும்பு.
* அ. அரசரெத்தினம், சேனையூர்-06.
* எஸ். பத்மா, உமாஜினி, கொழும்பு-10.
* எஸ். யுவராணி, பிட்டக்கந்தை.
* எம்.எச். முகமட் கமால், கல்முனைக்குடி-05.
* அ. செல்வி, உவர்மலை.
* பொ. ரஜனி, வீரமுனை-02.
* பஜீலா றலீல்தீன், ரிதிகம.
* மு. உதயன், சவுதி அரேபியா.
* எஸ். சுரேஸ்குமார், ஜெர்மனி.
* வி. ஜெயச்சந்திரன், வட்டவளை.
* த. காந்தரூபன், கல்லடி.
* பாதிமா றிஹானா பாரூக், உலப்பனை எஸ்டேட்.
* சியான், அக்குறணை.
* பி. மணிவாசகம், நீர்கொழும்பு.
* எ.எஸ்.எம். ரிஹானா, ஹொரம்பாவ.
* உ. ஜீவராஜ், சுவிற்ஸர்லாந்து.
* எம்.எம். ராபீக், துபாய்.
* திருமதி வதனி ஜெயக்குமார், ஃபிரான்ஸ்.
* சி. சிவலிங்கம், ஃபிரான்ஸ்.
* வா. ரவீந்திரன், கனடா.
* எம். கோபாலகிருஷ்ணன், திருக்கோணமலை.



படிப்பகம்

www.padippakam.com

# "தாண்டிக்குளச் சமர் பரீட்சார்த்த தாக்குதல்!"

# வன்னியில் புலிகளின் தளபதி தெரிவிப்பு!

**'தாண்டிக்குளத் தாக்குதல் பரீட்சார்த்தமான ஒரு தாக்குதல்தான். விரைவில் எமது பலத்தைக் காட்டும் சந்தர்ப்பம் ஏற்படும்!' இவ்வாறு தாண்டிக்குளம் சமருக்கு களப் பொறுப்பு ஏற்றிருந்த புலிகளின் படைத்துறைத் துணைத் தளபதி பால்ராஜ் தெரிவித்துள்ளார்.**

புலிகளின் தலைவர் பிரபாகரனின் நெறிப்படுத்தலின்கீழ் பால்ராஜ் களப் பொறுப்பு ஏற்றிருந்தார். சொர்ணம், கருணா, தீபன், நந்தா ஆகிய புலிகளின் தளபதிகள் தலைமையில் போரிட்ட அணிகளுக்கு மத்தியப்படுத்திய தலைமை வழங்கும் மூத்த தளபதியாக பால்ராஜ் செயற்பட்டார்.

புலிகளின் முன்னாள் பிரதித் தலைவர் மாத்தையாவே துணைத்தளபதியாகவும் இருந்தார். மாத்தையா பிரச்சனைக்குப் பின்னர் பால்ராஜ் துணைத்தளபதியாக நியமிக்கப்பட்டார். மாங்குளம் படைமுகாம் மீதான தாக்குதல்தான் பால்ராஜ் தலைமையில் முதன் முதலாக நடத்தப்பட்ட பாரிய தாக்குதலாகும்.

தாண்டிக்குளச் சமரின் பின்னர் பால்ராஜ் மாங்குளத்தில் காணப்பட்டார். "நாம் எதிர் பார்த்ததைவிட சண்டையில் ஈடுபட்ட புதிய உறுப்பினர்கள் தீரமுடன் செயற்பட்டுள்ளனர். அனுபவம்மிக்க படையணிகளுக்கு துணைநின்று உக்கிரமாகப் போரிட்டுள்ளனர்.

தாண்டிக்குளம் சமர்மூலம் புதிய உறுப்பினர்களும் நன்கு அனுபவம் பெற்றுள்ளதால் இனிவரும் எமது சண்டைகளில் இந்த அனுபவம் நன்கு உதவும்" என்று பால்ராஜ் தெரிவித்துள்ளார். தாண்டிக்குளச் சமரில் பலியான தமது உறுப்பினர்களின் உடல்களுக்கு வன்னியில் புலிகள் அஞ்சலி தெரிவித்துள்ளனர்.

தாண்டிக்குளம் படைமுகாமில் இருந்த ஆட்டிலெறிப் பீரங்கிகளும், டாங்கிகளும் புலிகளால் அழிக்கப்பட்டன. அதனால் புதிய ஆட்டிலெறிகள் கொண்டுசென்று நிறுத்தப்பட்டுள்ளன. ஓமந்தையில் இருந்து டாங்கிகள் சிலவும் தாண்டிக்குளப் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

## மருந்துகள் புலிகளிடம்

தாண்டிக்குளச் சமரில் ஆயுதங்களை எடுத்துச் செல்வதைவிட மருந்துப் பொருட்களை அள்ளிச் செல்வதில்தான் புலிகள் பெரிதும் நாட்டம் காட்டியிருந்தனர்.

தமிழகத்தில் இருந்து மருந்துப் பொருட்களை கடல் மார்க்கமாகக் கொண்டுவருவதில் சமீபகாலமாக இடையூறுகள் ஏற்பட்டுள்ளன. மருந்துப் பொருட்கள் கொள்வனவு செய்யச் சென்றவர்கள் தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் புலிகளின் முல்லைத்தளத்திலும் மற்றும் கிழக்கிலும் உள்ள மருத்துவ முகாம்களில் மருந்துப் பற்றாக்குறை ஏற்பட்டது.

குறிப்பாக சத்திர சிகிச்சை போன்றவற்றுக்கான மருந்துவகைகள், உபகரணங்கள் போன்றவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டன. இந்நிலையில்தான் தாண்டிக்குளச் சமரில் "ஆயுதங்களைவிட மருந்துப் பொருட்களை முதலில் கைப்பற்றிக் கொள்ளுங்கள்" என்று பிரபாகரன் கட்டளையிட்டிருந்தாராம். மருந்துப் பொருட்களைக் கைப்பற்றி சேகரிக்க என்று தனிப்பிரிவொன்றே அனுப்பிவைக்கப்பட்டதாம். தற்போது பெருந்தொகையான மருந்துப் பொருட்களும், உபகரணங்களும் புலிகளிடம் கிடைத்திருக்கின்றன.

## ஷெல் தாக்குதல்

தாண்டிக்குளம் சமரின்போது ஷெல் தாக்குதல்களால் பெருந்தொகையான மக்கள் உயிரிழந்தும், காயமடைந்துமிருந்தனர். இருபுறம் இருந்தும் ஷெல் தாக்குதல்கள் நடந்ததாகவே மக்கள் கூறுகின்றனர். பாதுகாப்பு அமைச்சு, புலிகளே காரணம் என்று குற்றம் சாட்டியிருந்தது.

தாண்டிக்குளம் பகுதியில் இருந்த பொது மக்கள் சிலரை புலிகளின் மகளிர் படையணி உறுப்பினர்கள்: "இங்கே சொகுசாக இருந்து படையினருடன் ஒத்துழைக்கிறீர்களா?" என்று கேட்டு அடித்தார்களாம். வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பொது மக்கள் சிலர் அதனைத் தெரிவித்துள்ளனர்.

தாண்டிக்குளம் பகுதியில் உள்ள மக்கள் பகலில் வீடுகளுக்குச் சென்றுவர படையினரால் அனுமதிக்கப்படும்போதும், அங்கு இரவில் தங்கியிருக்க அச்சம் தெரிவிக்கின்றனர். ■

# பட்டினி அபாயத்தில் அகதிகள்!

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து மன்னாருக்குள் வரும் யாழ் மாவட்ட அகதிகள் தற்போது கடும் உணவுப் பஞ்சத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவர்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டும் உணவு வழங்கப்படுகின்றது. இதுவும் சிலவேளை மாலை வேளையாகி விடுவதாக அகதிகள் தெரிவித்தனர்.

அகதிகளாக வருபவர்களுக்கு 3 நாட்களுக்கு சமைத்த உணவும், இருவாரங்களுக்கு உலர் உணவும் வழங்கப்படுவதே இதுகால வரை பின்பற்றப்பட்டு வருகின்ற நடைமுறையாகும்.

இந்நடைமுறை திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடைமுறையில் இருக்கின்றது. எனினும் தற்போதைய அகதிகள் விடயத்தில் இந்நடைமுறைக்கு மாறாகவே ஒருவேளை உணவு வழங்கப்படுகிறது.

வவுனியாவில் ஒரு நாள் உணவுக்காக 48 ரூபாவும் திருகோணமலையில் 49 ரூபா 50 சதமும் ஒதுக்கப்படுகின்ற அதேவேளை மன்னாரில் வளர்ந்தவர்களுக்கு 25 ரூபாவும், சிறியவர்களுக்கு 15 ரூபாவும் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனால் அகதிகளுக்கு ஒருவேளை உணவைக்கூட ஒழுங்காக வழங்க முடியாதுள்ளதாக் செயலக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதேவேளை, பல அகதிகள் கடுமையான பணக்கஷ்டங்களை எதிர்நோக்குவதாக அறியவருகிறது. அகதிகள் விடயத்தில் கூடுதல் அக்கறை செலுத்துமாறு மன்னாரிலுள்ள தொண்டர் ஸ்தாபனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதிகரித்துவரும் அகதிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவோ, அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கவோ, முடியாத நிலை தோன்றிவருகிறது. ■

# அரச வீட்டைக் காலி செய்தார் அஷ்ரப்

(நமது நிருபர்)

சமீபத்திய அமைச்சரவை மாற்றம் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைமை ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக இருந்த எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள் தற்போது கிழக்கு மாகாணத்துக்கான அமைச்சராக மட்டுமே அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளார். அது மட்டுமல்லாமல் அமைச்சர் அஷ்ரப்பிடம் இருந்த அத்தியாவசிய சேவைகள் பொறுப்பும் எடுக்கப்பட்டுவிட்டது.

பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவுக்கும் அமைச்சு மாற்றம் திருப்தியளிக்கவில்லை. அது குறித்து கவனத்தில் எடுப்பதாகவும், மீண்டும் அதே அமைச்சு தருவதாகவும் ஜனாதிபதி கூறியதாகவும், சில அமைச்சர்கள் செய்த சமரச முயற்சியே அதற்குக் காரணம் என்றும் கூறப்பட்டது. ஆனாலும் பழைய அமைச்சு திரும்பக் கிடைப்பதில் ஏற்படும் தாமதத்தால் ஹிஸ்புல்லா சலிப்படைந்து காணப்பட்டார்.

வெளியேதெரியாத இந்தப் பனிப்போரின் ஒருகட்டமாக அமைச்சர் அஷ்ரப் தனக்கு அரசால் கொடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறியுள்ளார். தனது சொந்த வீடான கொழும்பு மானிங் பிளேஸ் வீட்டுக்கு இடம் பெயர்ந்தார் அமைச்சர்.

எனினும் தமக்கும் பொதுஜன முன்னணிக்கும் இடையே எவ்வித பிரச்சனையும் இல்லை என்றே முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் கூறுகின்றன. ■

# பலியானோரில் 24 பேர் மட்டக்களப்பு!

தாண்டிக்குளம் சமரில் பலியான 81 புலிகளின் விபரங்களை புலிகள் வெளியிட்டுள்ளனர்.

பலியானவர்களில் ஒருவர் லெப்டினன்ட் கேணல் தரத்தில் உள்ளவர். அவரது பெயர் நந்தா. தளபதிகளாக உள்ளவர்களுக்கே லெட்டினன்ட் கேணல்கள் என்ற தரம் புலிகளுக்குள் வழங்கப்படுகிறது. அதற்கடுத்த நிலையில் உள்ளவர்கள் மேஜர். அடுத்தது கப்ரன், பின்னர் லெப்ரினன்ட், 2ம் லெப்டினன்ட் என்பதே தரநிலை வரிசையாகும்.

தாண்டிக்குளச் சமரில் புலிகள் தரப்பில் ஒரு லெப்டினன்ட் கேணல், 2 மேஜர்கள், ஏழு கப்ரன்கள், 12 லெப்டினன்ட்கள், 9 இரண்டாம் லெப்டினன்ட்கள் ஆகியோரும் பலியாகியுள்ளனர். பலியான இரண்டு மேஜர்களும் கரும்புலிகளாவர். ஒருவர் பெண் கரும்புலி யாழினி. இன்னொருவர் பெயர்: நூதன்

பலியானவர்களில் 24 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். கருணா தலைமையிலான படையணியைச் சேர்ந்தவர்கள். 21 பெண் புலிகளும் சமரில் பலியானவர்களில் அடங்குகின்றனர். ■

# பரவிவரும் தொற்று நோய்கள்!

## அகதி முகாம்களில் அவலம்!

(மன்னார் நிருபர்)

உயிலங்குளம் ஊடாக மன்னார் பகுதிக்கு வரும் அகதிகளின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

வன்னிப் பகுதியிலிருந்து வரும் இவ்வகதிகள் மன்னார்த்தீவிலுள்ள 3 அகதி முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

காட்டாஸ்பத்திரி, எருக்கலம்பிட்டி, பேசாலை ஆகிய 3 இடங்களிலுள்ள அகதி முகாம்கள் அகதிகளால் நிரம்பிவழிகின்றன.

இவ்வகதிகளில் அநேகமானோர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். கப்பல்கள் மூலம் யாழ் நகருக்கு இவர்களை அனுப்பும் பணி மிக மெதுவாகவே இடம் பெறுகிறது.

யாழ்ப்பாணத்திற்குச் செல்ல இதுவரை 3500 இற்கும் மேற்பட்டோர் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். கடந்த 16.06.97 அன்று சிலரை கப்பலில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

உயிலங்குளம் ஊடாக வாராந்தம் 2250 பேர் மட்டுமே உள்ளே வர அனுமதிக்கப்படுகின்றனர். எனினும் சுமார் 10 ஆயிரம் பேர்வரை உள்ளேவருவதற்கு இருந்தபோதிலும் குறிப்பிட்டளவு பேரே அனுமதிக்கப்படுகின்றனர்.

அகதிகளால் நிரம்பி வழியும் மன்னார்த் தீவிலுள்ள வைத்தியசாலைகளும் நோயாளர்களினால் நிரம்பி வழிகின்றன. அகதிகளிடையே வேகமாகப்பரவி வரும் தொற்று நோய்கள் உள்ளூர் மக்களுக்கும் பரவக்கூடிய அச்சம் தோன்றியுள்ளது.

இதேவேளை, நகரில் குடிநீருக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. பௌசர்கள் மூலம் வேறிடங்களிலிருந்து நீரைக்கொண்டு வந்த போதிலும் அது போதியதாக இல்லை. ■

# "தீர்வு வந்தால் இரத்த ஆறு ஓடும்!"

## சிங்கள கமிஷன் முன் சாட்சியம்

"அரசாங்கம் முன்வைத்திருக்கும் தீர்வுத் திட்ட ஆலோசனைகள் இந்நாட்டின் அரசியல் யாப்புக்கு முற்றும் முரணானவை. இத்திட்டத்தை அமுல்படுத்த முயன்றால் நாட்டில் இரத்த ஆறு பெருக்கெடுத்தோடுவதைத் தவிர்க்க முடியாது. அவ்வாறான நிலையில் முழுப் பழியையும் இன்றைய ஆட்சியாளர்களே ஏற்றுக் கொள்ளவேண்டிவரும்," என்று தேசிய ஒருமைப்பாட்டுக் கமிட்டியின் பொதுச் செயலாளரான கலாநிதி பியசேன திசநாயக்க சிங்களக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.

அந்நியர்களின் ஆட்சிக்காலத்திலிருந்து இன்றுவரை பௌத்த சிங்களவர்கள் 'இழந்த உரிமைகளைப்' பற்றி ஆராயவும், அவற்றை மீளப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறியவும் தேசிய ஒருமைப்பாட்டுக் கமிட்டியினால் ஏற்பாடுசெய்யப்பட்ட சிங்களக் கமிஷன் தனது விசாரணைகளை நடத்தி வருகிறது. கடந்த 11ம் திகதி புதன்கிழமை, முன்னாள் உயர்நீதி மன்ற நீதிபதி எஸ்.டபிள்யூ. வல்பிட்ட தலைமையில் கமிட்டி கூடியபோது கலாநிதி பியசேன இக்கருத்தைத் தெரிவித்தார்.

"தமிழர்கள் தனிநாடு கோருவது, வட கிழக்கு மாகாணங்களைத் தமது பாரம்பரியத் தாயகம் என்று சாதிப்பது, தங்களுக்கு தன்னாதிக்க உரிமை இருக்கிறது என்று கூறுவதெல்லாம் சர்வதேசச் சட்டதிட்டங்களுக்கு முற்றிலும் முரணானவை. வடகிழக் கைத் தமது தாயகம் என்று கூறுவதற்கான எத்தகைய சான்றும் கிடையாது." என்று அவர் வாதிட்டார். ■

# சந்தேகத்தால் வந்தவினை

யாழ்ப்பாணம் நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயிலுக்கு சென்ற மூன்று இளைஞர்கள் கடற் படையினரால் தாக்கப்பட்டபின்னர் விடுதலையாகினர்.

இதுபற்றி தெரியவருவதாவது; 11.06.97 அன்று வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்துக்குச் சென்றனர். தமது நேர்த்திக் கடனை முடித்துக்கொண்டு ஊர்திரும்ப படகுத்துறைக்கு வந்தனர். அவர்கள்மீது அங்கிருந்த கடற்படையினருக்கு சந்தேகம் ஏற்பட்டது.

உடனடியாக மூவரையும் கைது செய்து கண்களைக்கட்டி காரைநகர் கடற்படைத்தளத்துக்கு கொண்டுசென்றனர். அங்கு மூவருக்கும் நல்ல பூசை கிடைத்தது. பின்னர் அவர்கள் புலிகள் அல்ல என்று தெரிந்துகொண்டதால் மறுநாள் விடுதலை செய்யப்பட்டனர்.

# "பயங்கரவாதி என்று கூறுக!"

யாழ்ப்பாணம் கன்னாதிட்டிச் சந்தியில் 14.06.97 அன்று டிரக்டரில் உணவு கொண்டு சென்ற இராணுவத்தினர்மீது கைக்குண்டு தாக்குதல் நடைபெற்றது. இச் சம்பவத்தில் பொலிசார் ஒருவரும், மூன்று இராணுவத்தினரும் காயமடைந்தனர்.

இச் சம்பவத்தின் பின்னர் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் அப்பையா ஜெயராசா (38) என்பவர் கொல்லப்பட்டார். அவரது தலையிலும், இடுப்பிலும் சூடுகள் விழுந்தன. இவர் யாழ்ப்பாணம் நவீன சந்தையில் பழ வியாபாரம் செய்பவராவார். யாழ்ப்பாணம் அன்னங்கை ஒழுங்கையைச் சேர்ந்தவர்.

இவரது சடலம் யாழ் பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது. சடலத்தை பொறுப்பேற்க உறவினர்கள் சென்றபோது, இழுபறி நிலை ஏற்பட்டது. 'அவர் ஒரு பயங்கரவாதி என்று ஒப்புதல் அளித்துவிட்டே சடலத்தைக் கொண்டு செல்லலாம்' எனக் கூறப்பட்டதாம். உறவினர்கள் அதற்கு மறுத்துவிட்டனர். பின்னர் சடலம் கையளிக்கப்பட்டது.

அப்பையா ஜெயராசா கொல்லப்பட்டதற்கு துக்கம் தெரிவித்து யாழ் நவீன சந்தையில் வாழை மரங்கள், கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. ■

# விவசாயிகளிடம் வரி வசூலிப்பு!

கிழக்கில் விவசாயச் செய்கையிலீடுபட்டுள்ளோரிடமிருந்து புலிகள் இயக்கத்தினர் ஒவ்வொரு போகத்தின் போதும் அதிகரித்த வருமானத்தை தம்மிடமிருந்து வரியாகப் பெறுவதாக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

வழக்கமாக நெற் செய்கைக் காணிகளுக்காக அறவிடப்படும் வரியைப் புலிகள் இயக்கத்தினர் இம்முறை அதிகரித்திருப்பதாகவும் அறியப்படுகிறது. சொந்தக் காணி வைத்திருந்தாலோ குத்தகைக் காணிகளில் நெற் செய்கை மேற்கொண்டாலோ ஏக்கருக்கு 1000/= ரூபாவைத் தமக்கு வரியாகச் செலுத்த வேண்டும் என்பதே புலிகள் இயக்கத்தின் புதிய வரி விதிப்பாகும். குத்தகைக்குக் காணிகளைப் பெறுவோர் காணிச் சொந்தக்காரர்களுக்கும் பணம் செலுத்துவதோடு புலிகள் இயக்கத்தினருக்கும் வரி செலுத்த வேண்டிய இரட்டைச் சுமை இருப்பதால் தாம் நஷ்டமடைவதாக விவசாயிகள் சலித்துக் கொள்கிறார்கள்.

தமது சொந்தக் காணிகளுக்குக்கூட புலிகள் இயக்கத்தினரிடம் குத்தகைப் பணம் கொடுத்தே செய்கை பண்ண வேண்டியிருக்கிறதென்று விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் கிழக்கில் செய்கை பண்ணப்படுகின்றன. இவற்றிலிருந்து கொழுத்த வருமானத்தை புலிகள் இயக்கத்தினர் பெறுகின்றனர்.

இதனிடையே, நகரப் பகுதிகளில் வசிக்கும் பிரபல புள்ளிகளின் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளைப் புலிகள் இயக்கத்தினர் தாமே செய்கை பண்ணி வருகிறார்கள். ■

# நுவரெலியாவில் தாக்கத் திட்டம்!

## பொலிசாரும் உதவியதாக சந்தேகம்!

நுவரெலியாவிலுள்ள ஜனாதிபதி மாளிகையைக் குண்டு வைத்துத் தகர்ப்பதற்கு புலிகள் இயக்கத்தினர் திட்டமிட்டதாக அறியப்படுகிறது. இதற்கென, புலிகளின் உளவுப் பிரிவுத் தலைவர் என்று கருதப்படும் பொட்டு அம்மான் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்த சிலர் கண்டியில் பொலிசாரிடம் அகப்பட்டுக் கொண்டதாக செய்தி ஒன்று கூறுகிறது.

இவர்களிடம் நுவரெலியாவிலுள்ள ஜனாதிபதி மாளிகையின் பல்வேறு தோற்றங்களைக் காட்டும் புகைப்படங்களும் இம்மாளிகைக்குச் செல்லும் பாதைகளின் அடையாளங்களைக் கொண்ட வரைபடங்களும் இருந்ததாகக் கூறப்படுகிறது.

நுவரெலியா பொலிசாரில் இருவரை, இக்குழுவுடன் நெருக்கமான தொடர்பு வைத்திருந்ததாகக் கருதப்பட்டு நுவரெலியாப் பொலிசார் கைது செய்துள்ளனர். பாதுகாப்புக் கருதி நுவரெலியா பொலிஸ் நிலையமும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

கண்டியில் கைது செய்யப்பட்ட ஒரு சந்தேக நபர், நுவரெலியாவில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தங்கியிருந்த போது, அதே மாளிகையில் சிங்களப் பெயருடன் காணப்பட்டவராம். இவரே மாளிகையைப் பல்வேறு கோணங்களிலும் படமெடுத்துள்ளாராம். இம்மாளிகைக்கு தற்கொலைப் படைப்பிரிவைச் சேர்ந்த பெண் ஒருவர் குண்டுடன் அனுப்பிவைக்கப்படுவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டிருந்ததாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இத்தகவல்களை கொழும்பு ஆங்கில ஏடு ஒன்று வெளியிட்டுள்ளது. ■

# "கிருசாந்தி விவகாரத்தில் புலிகளுக்கு தொடர்பு!"

## கூட்டணி உபதலைவர் சந்தேகம்!

கொழும்பிலுள்ள தமிழர் பணிக்குழு அதிர்ச்சிதரும் தகவல்களை வெளியிட்டுள்ளது. அக் குழுவின் மூன்று முக்கிய உறுப்பினர்கள் தமது கையொப்பத்துடன் வெளியிட்டுள்ள கடிதம் ஒன்றிலேயே அத் தகவல்கள் வெளியாகியுள்ளன. கடிதம் தமிழர் கூட்டணித் தலைவர் திரு.மு.சிவசிதம்பரம் அவர்களுக்கு எழுதப்பட்டுள்ளது. சமீபகாலமாக சர்ச்சைக்குரிய ஒரு நபராக உள்ள முன்னாள் எம்.பி..வி.ஆனந்தசங்கரியின் சுயரூபம் தொடர்பான அதிர்ச்சியூட்டும் தகவல்கள் அக் கடிதத்தில் உள்ளன. அக்கடிதத்தை அப்படியே இங்கு தருகிறோம்:

ஐயா!

கீழே ஒப்பமிட்டவர்களாகிய நாங்கள் 1997 மே 25ம் திகதியன்று நடைபெறவிருந்த தமிழர் பணிக்குழுக் கூட்டத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினரையும் அழைப்பதற்காக, 1997 மே 18 அல்லது 19ம் திகதி, ஏற்கனவே உறுதி செய்த நேரத்தில், திரு. வீ. ஆனந்தசங்கரியைச் சந்தித்தோம். அப்போது தாங்கள் நாட்டில் இருக்கவில்லை.

அச்சந்திப்பின் போது திரு. ஆனந்தசங்கரி தெரிவித்த கீழே தரப்பட்டுள்ள தகவல்களை கேட்டு ஆத்திரம் கொண்டதுடன் அதிர்ச்சியும் அடைந்தோம்.

1. கலந்துரையாடலின் போது, கிருஷாந்தி குமாரஸ்வாமியின் பாலியல்வல்லுறவு மற்றும் படுகொலை விவகாரம் குறிப்பிடப்பட்ட வேளை, திரு. ஆனந்தசங்கரி, "கிருஷாந்தியை எல்.ரி.ரி.ஈ.யினரே பாலியல்வதைக்குட்படுத்தி விட்டு கொலை செய்திருக்கலாம். பின்னர் பழியை சிறிலங்கா படையினர் மீது சுமத்தியிருக்கலாம். அப்படி ஏன் நம்ப முடியாது?" என்றார்.

2. அடுத்து, திரு. இ. நடராஜா, 1983க்கும் 1992க்குமிடையில் ஆறாயிரத்து 378 அப்பாவித் தமிழர்களை சிறிலங்கா இராணுவம் கொன்றுவிட்டது என்று தனக்குத் தெரியவந்துள்ளதாகக் கூறினார். அப்போது திரு.ஆனந்தசங்கரி, "அவ்வாறு உயிரிழந்த தமிழ் பொது மக்களில் பெரும்பாலானோர் புலிகளால் கொல்லப்பட்டவர்களே," என்றார்.

3. திரு ஆனந்தசங்கரி, வெளிநாட்டு செய்தி முகவர்களுக்குத் தெரிவித்த அதே கருத்தை- வவுனியாவுக்கும் கிளிநொச்சிக்குமிடையில் பாதை திறக்கப்படுவதை தான் வரவேற்பதாக- எம்மிடமும் மீண்டும் கூறினார்.

நீண்ட நெடுங்காலமாக சிரேஷ்ட தமிழ் அரசியல்வாதியாக இருந்துவரும் ஒருவரால் வெளியிடப்பட்ட மேற்படி கருத்துக்கள் பாரதூரமானவை. நிகழ்காலச் சம்பவங்கள் தொடர்பாக உங்கள் கட்சியின் சிரேஷ்ட துணைத்தலைவர் என்று வர்ணிக்கப்படும் ஓர் அரசியல்வாதி, எத்தகைய கருத்தை வெளியிட்டுள்ளார் என்பதை தமிழ்ப் பொது மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றே கருதுகிறோம்.

ஆகவே, இது பொதுமக்களின் அக்கறை மற்றும் முக்கியத்துவத் தொடர்புடைய சம்பவம் என்று கருதுவதனால் நாம் இக்கடிதத்தினை பத்திரிகைகளுக்கு அனுப்பிவைக்கிறோம்.

ஏற்ற முடிவினை தமிழ் பொதுமக்களும் ஏனைய சீரான சிந்தனையாளர்களும் எடுக்கட்டும் என்று இதனை அவர்களிடம் விட்டுவிடுகிறோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் பணிக்குழுவைச் சேர்ந்த கே. வேலாயுதபிள்ளை, இ.நடராஜா, சி.டி.சின்னகோன் ஆகியோர் இக்கடிதத்தில் கையொப்பம் இட்டுள்ளனர். ■

# குரேமீது மேலும் நடவடிக்கை!

முன்னாள் அமைச்சரும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் நெருங்கிய சகாவுமான சிறிசேன குரேமீது பொதுஜன பாதுகாப்புச் சட்டம் பாய்ந்துள்ளது. சிறிசேன குரேக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் பிரச்சனைகள் இருக்கின்றன. ஒரு காலத்தில் அக்கட்சியின் இரும்பு மனிதராகக் கருதப்பட்டவர் சிறிசேன குரே. உள் நாட்டு அரசியலில் பிரேமதாசாவின் தளபதியாகவும் இருந்தார்.

சமீபகாலமாக பொதுஜன முன்னணி வட்டாரங்களுடன் சிறிசேன குரே தொடர்பாக இருந்ததாகக் கூறப்பட்டது. எனினும் பிரேமதாசாவின் விசுவாசிகளை ஒன்று திரட்டி புதிய எழுச்சியை ஏற்படுத்த அவர் முயல்வதாக அதிகார வட்டாரங்கள் சந்தேகித்தன. அதன் விளைவே தற்போதைய காட்சிகள் என்று தெரிகிறது.

சிறிசேன குரேமீதான பல புகார்கள் இருப்பதால் அவர்மீதான நடவடிக்கைகள் மேலும் இறுகலாம் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# காதோடு காது



உதாரா

**முகமூடி:** புலி உளவாளி ஒருவர் வெல்லா வெளிப்பகுதியில் மரமொன்றில் ஏறி உட்கார்ந்து கொண்டார், உளவுபார்க்க. பச்சையோடு பச்சையாக பற்றைக்குள் பதுங்கியிருந்த படையினரை இவரது உளவுக்கண்கள் காணவில்லை. மரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டவரை 'லபக்கென்று' பிடித்துக் கொண்டனர். இப்பொழுதெல்லாம் இவர் போக்கில் மாற்றம். படையினருக்கு நல்ல உதவி. முகமூடி வேறு. முகத்தை எவரும் காண முடியாது.

**யார் காவலாளி:** மட்டுநகரப் பிரதேச மென்ன- காத்தான்குடிப்பகுதியிலும் 'திருட்டுகள்' அதிகமாம். இரவுத் திருட்டை யார் செய்கிறார்கள் என்று தெரியவில்லை. இரவில் பொதுமக்கள் வீதியில்தான் உலாவமுடியுமா? இது என்ன வினோதம், என ஒருவரை ஒருவர் காதுக்குள் கேட்டுக் கொள்ளுகிறார்கள். மூன்றாமவருக்குத் தெரியாமல் குசுகுசுத்தும் கொள்ளுகிறார்கள். தங்கமுலாம் பூசிய பூட்டுக்கள், குமிழ்கள், கொளுக்கிகள் என்றால் இத்திருடர்களுக்கு பிடிக்குமாம். கல்லூரி அதிபர்கள், இது சம்பந்தமாக பொலிஸிலும், படையினரிடமும் புகார் செய்துள்ளனராம். அவர்களும் என்ன செய்வார்கள்? வந்து பார்த்துப் போயிருக்கிறார்கள். திருட்டின் மர்மம் துலங்குமா? துலங்காதா? என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்!

**காவல் அரண்கள்:** மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள பாதுகாப்புப் படையின் காவல் அரண்கள் புனரமைக்கப்படுகின்றன. மண் மூடைகளுக்குப் பதிலாக ஒற்றைக்கல் சுவர் அரண் பெறுகிறது.

**புலிகள் நிர்வாகம்:** புலிகளின் ஆதிக்கத்திலுள்ள கொக்கட்டுச்சோலை, பழுகாமம், வாகரைப் பிரதேசங்களிலும்-நிர்வாக ஒழுங்குகள் செவ்வனே நடைபெறுகின்றன. நீதிமன்றங்களுக்கு ஓய்வில்லை. நிர்வாகச்சீர் ஒழுங்கின்படி-முறைப்பாடுகளை அடியொற்றி-'சம்மன்ஸ்' வழங்கப்படுகிறது. அழைப்பாணையை ஏற்று பலர் செல்லுகின்றனர். மூன்று 'பயிற்சி பெற்ற நீதிபதிகள்' வழக்குகளை விசாரணை செய்கின்றனர். அம்பாறை-மட்டக்களப்பு மாவட்ட காவல்துறை தலைமையகமும் செயற்படுகிறது.

**பஸ் சேவை:** மண்முனைத் துறையிலிருந்து-கொக்கட்டுச்சோலை, அம்பிளாந்துறை வரை, புதிய பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்கரையிலிருந்து கடிதம் எழுதி வரவழைக்கப்படுபவர்கள்- இந்த பஸ்ஸின் சீட்டுக்களை நிரப்பி விடுகிறார்களாம். கையில் பையும், இடுப்பில் கடிதமுமாக செல்லுபவர்களை, "எங்கு பயணம்?" என்று கேட்டால் "தான்தோன்றியானிடம் (தான்தோன்றீஸ்வரன் கோயில்) போய்வரப் போகிறோம்" என்கிறார்களாம்.

**வவுனியா பயணம்:** மின்னேரியாவில் இருவார காலப் பயிற்சியை முடித்துக்கொண்ட பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 12 பேர் உடனடியாக வவுனியாவுக்கு அனுப்பப்பட்டனர். போர் உக்கிரம் அடைந்த பகுதிக்கு அனுப்பப்படுவதினால் மிக மனம் சோர்ந்து போயினர் இவர்கள்.

**திடீர் சுற்றிவளைப்பு:** மட்டக்களப்புப் பகுதியில் திடீர் சுற்றிவளைப்பு, திடீர் தேடுதல், வீதிப்பரிசோதனைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. புலிகளின் ஊடுருவல் கிழக்கை நோக்கி நகரக்கூடும் என்ற யூகத்தில் இப்படியொரு உஷார் நடவடிக்கையாம்.

**ட்ரான்ஸ் ஃபோமர் சுவர்:** மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு திக்குகளிலும் அமைந்துள்ள ட்ரான்ஸ் ஃபோமர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் சுற்றிவர 'செங்கற்சுவர்' அமைக்கப்படுகிறது.

# கடமை தவறும் வைத்தியர்கள்

## திருகோணமலை நோயாளர்கள்பாடு திண்டாட்டம்

(திருமலை நிருபர்)

திருக்கோணமலைத் தள வைத்திய சாலையில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகளில் சிலர் கடமையுணர்வுடன் செயல்படுவதில்லை என்ற அபிப்பிராயம் பொது மக்களிடையே நிலவுகிறது.

குழந்தையின் பெயரை எழுதிக் கொடுத்து "இந்த மருந்தைக் கடையில் வாங்கிப் பிள்ளைக்குக் கொடு" என்று ஒரு வைத்தியர் கூறியுள்ளார். அப்பாவித் தந்தை இரண்டு நாட்களாக மருந்துக் கடைகளில் ஏறி இறங்கியும் மருந்தைப் பெற முடியாமற்போகவே அந்த வைத்தியரிடம் காட்டிய போது, "சொறி! மருந்தின் பெயருக்குப் பதிலாக பிள்ளையின் பெயரை எழுதிவிட்டேன்!" என்று கூறிக் கிழித்துப் போட்டுவிட்டாராம்.

இன்னொரு அதிகாரி, வயோதிபப் பெண்ணொருவருக்கு கிளினிக்கில் மருந்து வழங்கியுள்ளார். திடீரென அப் பெண்ணுக்கு உடல் வீங்கி மூச்சுத் திணறல் ஏற்படவே, ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டார். பெண் இரண்டு நாட்கள் விசேட கவனிப்புப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்ட பின்னரே சுகமடைந்தார். விசேஷம் என்னவென்றால், பெண்ணின் நிலையைக் கண்டதும் அந்த வைத்தியர், மருந்து எழுதியிருந்த சிட்டையைக் கிழித்துப் போட்டதுதான்.

'முரசு' விசாரித்ததில், பொதுமக்களுக்கு மட்டும் தான் இவ்வாறான அக்கறையற்ற கவனிப்புகள் என்றில்லை; அவர்களது திணைக்கள ஊழியர்களுக்கும் நடைபெறுவதாக ஒருவர் கூறினார். தனது மனைவியை சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதித்து, இரண்டு நாட்களாகியும் சரியாகக் கவனிக்கப்படாத நிலையில் மனைவியை வீட்டுக்கு அழைத்து வந்து தனியார் மருத்துவ நிலையத்தில் காட்டி ஒரே நாளில் சுகப்படுத்தியதாகக் கூறினார்.

தனது மனைவிக்கு பொருத்தமற்ற மருந்துகள் வழங்கப்படுவதாகத் தான் சுட்டிக் காட்டியபோது சம்பந்தப்பட்ட வைத்தியர் ஆத்திரமடைந்ததைத் தவிர வேறெதுவும் செய்யவில்லை, என்றும் அந்த உத்தியோகத்தர் முரசுக்குக் கவலையுடன் தெரிவித்தார்.

# "இலங்கை தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவோம்!"

## நோர்வே நீதியமைச்சர் தெரிப்பு

நோர்வே நாட்டிலிருந்து- புகலிடம் கோரிய 280 இலங்கைத் தமிழர்களை திருப்பி அனுப்பப்போவதாக அந்நாட்டு பாராளுமன்றத்தில், நீதி அமைச்சர் கேர்ட்-லிவ் வல்லா அறிவித்தார். அகதிகளுக்கான ஐ.நா.உயர் ஸ்தானிக அதிகாரிகள் தெரிவித்துள்ள கருத்துப்படி, சிறிலங்காவில் தமிழர்கள் எந்த வகையிலும் துன்புறுத்தப்படவில்லை என்று அவர் கூறினார்.

நோர்வேயில் தஞ்சம் கோரியிருந்த தமிழர்களில் 280 பேருடைய விண்ணப்பங்களை, போதுமான ஆதாரங்கள் இல்லை என்று அந்நாட்டு குடிவரவுத்துறை நிராகரித்துவிட்டது. இவர்களைத் திருப்பி அனுப்புவதை நிறுத்துமாறு பல்வேறு அமைப்புகள் நோர்வே அரசாங்கத்தைக் கேட்டிருந்தன.

பல சர்வதேச அமைப்புகள், நோர்வேயிலுள்ள அகதி கோருவோருக்கான நிறுவனத்துடன் இணைந்து, பல ஆர்ப்பாட்டங்களையும் மாநாடுகளையும் நடத்தியிருந்தன.

அகதிகளுக்கான பிரிட்டிஷ் நிறுவனமும் நோர்வேயின் தீர்மானத்துக்கு மாறாக, அகதி அந்தஸ்துக் கோருவோரை, தற்போதுள்ள நிலையில் திருப்பி அனுப்புதலாகாது என்று கோரிக்கை விடுத்திருந்தது. ஆனால் அக்கோரிக்கைகளை நோர்வே அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று நீதி அமைச்சர் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

"எமது நாட்டின் நிர்வாக முறைகளில் தலையிட அரசசார்பற்ற எந்த அமைப்புக்கும் உரிமை கிடையாது!" என்று அமைச்சர் கேர்ட்-லிவ் வல்லா, பாராளுமன்றத்தில், எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

நோர்வே அரசின் தீர்மானத்தை மாற்றுவதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடந்துவருகின்றன.

# தோட்டப் பாடசாலை ஆசிரியர்கள் நியமனம்

(கண்டி நிருபர்)

க.பொ.த. சாதாரண பரீட்சையின் தராதரத்தின் கீழ் மத்திய மாகாணத்தில் மேலும் ஒரு தொகுதியினருக்கு தோட்டப் பாடசாலை ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு இவர்கள் ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்திற்கு 260 பேரும் ஏனைய மாவட்டங்களுக்கு 66 பேரும் இவ்வாறு மொத்தமாக 326 பேர் நியமிக்கப்பட்டனர். கல்விச் சேவைகள் ஆணைக் குழுவின் சிபார்சின் பேரில் இவர்கள் இந்த நியமனங்களைப் பெற்றனர்.

4 ஆண்டுகளுக்கு இவர்கள் தகுதிகாண் ஆசிரியர்களாக இருப்பர். அதன் பின்னரே இவர்களின் நியமனம் நிரந்தரமாக்கப்படும்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் திரு வி.புத்திரசிகாமணி, 2.6.97ல் கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் வைத்து வழங்கினார். இதே வேளையில் மற்றும் ஒரு தொகுதியினரான 125 பேர் இதே நியமனங்களை இரண்டாவது கட்டத்தில் பெற இருக்கின்றனர்.

ஜீ.சீ.ஈ. சாதாரண தர பத்திரத்தை தகுதியாக உடையவர்களுக்கு இறுதியாக வழங்கப்படும் நியமனமும் இதுவாகும். இதன் பின்னர் ஆசிரியர் நியமனத்திற்கு ஆகக்குறைந்த கல்வித் தராதரம் ஜீ.சீ.ஈ. உயர் தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டுமென்பது கல்வி அமைச்சின் விதியாகும், என அமைச்சர் திரு. புத்திரசிகாமணி இங்கு தெரிவித்தார்.

# மதியழகன் பதவி இழந்தார்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவை-இயற்பகுதிப் பணிப்பாளராக வி.என்.மதியழகன் நியமனம் செய்யப்பட்டது தொடர்பாக, இசைப் பகுதிப் பணிப்பாளர் திருமதி அருந்ததி சிறிரங்கநாதன் உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்திருந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கின் தீர்ப்பு 10ம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

இதன்படி, திரு.மதியழகன் பணிப்பாளர் பதவியிலிருந்து உடனடியாக விலகி தனது பழைய பதவியான கட்டுப்பாட்டாளர் பதவியை வகிக்கலாம் என்றும், பணிப்பாளர் பதவிக்கு உரிய முறையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஆறு மாதங்களுக்குள் தகுதியான புதிய பணிப்பாளர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

விளம்பரப் பகுதி


**பழுது பார்த்தல்**

வீடியோ கமெரா, போட்டோ கமெரா திருத்திக்கொடுக்கப்படும்

நியூ விக்ரேஸ்
New Victors

40 1/3, Galle Road, Colombo-06.

(Hongkong bank அருகாமையில்)

T.P-594492

**UNION**

யூனியன் மோட்டிஸ் கதவு பூட்டுக்கள்

Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)

றம்சன்ஸ்

443, பழைய சோனகத் தெரு. கொழும்பு - 12.

தொலைபேசி - 431511, 434411

**தேவை**

**சாயா ஸ்ரூடியோ**

பெண்கள் வேலைக்குத் தேவைப்படுகிறார்கள். தகுந்த சம்பளம் வழங்கப்படும். பூரண விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**ஆண்கள்**

புகைப்படப்பிடிப்பில் (ஸ்டில்), வீடியோ படம் எடுப்பதில் அனுபவம் உள்ளவர்களும் ஓரளவு நாட்டம் உள்ளவர்களும் முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

T.Rabeshen
102/2, 42nd Lane,
Wellawatha,
colombo-06

**SPOKEN ENGLISH**

**தபால் மூலம் கல்வி**

மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க தபால் மூலம் கற்றுத் தரப்படும். விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
P. O. BOX -162, COLOMBO.

**வீடுகள் விற்பனைக்கு**

கொழும்பு 15 -முகத்துவாரம் ரஜமல்வத்தை ஒழுங்கை இலக்கம் 19/3ல் சகல வசதிகளும் கொண்ட 3 வீடுகள் உடனடி விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு:

எஸ்.பீ. றொட்றிகோ

**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPHY)**

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதித்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயதினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

**SEXUAL DISORDERS**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்விரியம் உள்ள ஆண்மகனாக்கி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத் தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைபேற்று இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

**கொழும்பில் ஜூன் 20 முதல் 30 வரை**

Dr. P. Arumugam. Ahamed Tourist inn. Bang Building No:10. Reclamation Road. (Entrance Bankshall St., Opposite Ranjanas) Colombo 11. T.P. 436383, 436390 கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 078-71101.

கொழும்பில் முன்கூட்டி பதிவு செய்யவும்.

**ஓட்டமாவடி ஜூலை 12, 13ம் திகதிகளில்**

Dr. முகைதீன் டிஸ்பென்செரி. ஓட்டமாவடி.

**கல்முனையில் ஜூலை 5, 6, 7, 8, 9 திகதிகளில்**

T.M.M. பாமசியிலும் T.P. 065/29329
மற்ற நாட்களில் Dr. P. Arumugam No. 33, Tissa Weerasingam Sq.,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.

**'மந்திரயோகி' மாந்திரீக மருத்துவம்**

APPROVED CHARITY அரசாங்கப் பதிவு இல. HA14/BT/176

'எல்லாப்புகழும் இறைவனுக்கே'

கர்ம-காலபலனினால், தீயசக்திகளினால், தீவினைகளினால் தீராத உடல்மனநோய்கள், காதல், திருமணம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வேறுகாரியத்தடைகளும், காதலர்கள் ஒன்றுசேர முடியாமை, கணவன் மனைவி குடும்பப்பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், வேறுபிரச்சினைகளும் ஏற்படலாம். இவைகளுக்கு இறைவனருள் முனிவர்கள் கையாண்ட கைகண்ட புராதன பாரம்பரிய மருந்து, மந்திர யந்திரவசியங்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ, தகாத உறவை, போதை வஸ்த்தை மறப்பிக்க, வேறு (மருத்துவ) காரியங்களுக்கு வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் மஹா சக்தி உபாசகர் "மந்திரயோகி" டாக்டர் சக்தியானந்தபாவாவிற்கு [(D.H.M.D.Ac) (இலங்கை) M.B.B.S.(H).S.M.P (இந்தியா)] முழுப்பெயர்களுடன் கோரிக்கைகளை எழுதி கடல்கடந்தும் உடன்வேலை செய்யும் அதி ஆகர்ஷணசக்தி வாய்ந்த இறைபரிகாரப்பொருட்களை தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக்கொள்கின்றார்கள். 12ரூபா 50சத முத்திரைகள் இரண்டும் விரும்பிய குருதட்சணையும் (மணியோடர்) அனுப்புவர்களின் விடயங்கள் முதலில் கவனிக்கப்படுகின்றன. விஷ(பாம்பு) கடிக்கு மந்திரத்தினால் விஷமிறக்கி மருந்து கொடுத்து இலவசமாக அவசரசிகிச்சை அளிக்கப்படுகின்றன.



நாடவேண்டிய பெயர், விலாசம்

YOGI.DR.SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
(KALLADY) BATTICALOA (P.O), SRI LANKA.

குருசக்தி நிலையம், (பிள்ளையார் கோவில் வீதி), (வேலூர்), கல்லடி-மட்டக்களப்பு, இலங்கை.

சகலவிதமான வாத்தியக் கருவிகளையும் உதிரிப்பாகங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்

சங்கீதப் புத்தகங்களும் விற்பனைக்கு உண்டு



**SAI SANGEETHA**
L. G. 123, Peoples Park,
Colombo 11. Tel : 445102

**உடன் விற்பனைக்கு**

NIKON Full Auto Camara with Extra Zoom & Bag.
CANNON Auto சிறிய வீடியோ கமரா Vedio8.
Fuji Small Camara-Full Auto with Zoom.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
61, De la Salle Street,
Colombo-15.
Telephone : 526166

**சித்தர் மாந்திரீகம்**

அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒருதடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு

SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு

SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை

**ரிஷி அஜமாமிச லேகியம்**

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11.
போன்: 421398




படிப்பகம்

www.padippakam.com

# இரண்டாவது பெரிய அழித்தொழிப்பு யுத்தம்!

## வன்னி வோட்டர்லூவா? தின் பின் பூ வா?

நாரதர்

'வெற்றி நிச்சயம்' என்று வன்னி நடவடிக்கைக்கு சூட்டப்பட்ட பெயரை கேள்விக்குறியாக்கியுள்ளனர் புலிகள்.

10.6.97 அன்று அதிகாலையில் தாண்டிக்குள விநியோக முகாமை நோக்கி இரு முனைகளால் புலிகள் பாய்ந்தனர். நேரில் கண்ட படை வீரர்களின் கூற்றுப்படி "அவர்கள் புயல்போல வந்தனர்."

முல்லைத் தளத்தில் பிரபாகரனின் நேரடியான கவனிப்பில் சண்டைக்கான படையணிகள் தெரிவு செய்யப்பட்டன.

சண்டைக்கான அணிகள் மூன்று தரத்தில் இருந்தன.

**1. பிரதான தாக்குதல் அணி.** ஏற்கனவே பூநகரி தவளைப் பாய்சல், மற்றும் புலிப்பாய்சல், முல்லை முகாம்மீதான 'ஓயாத அலைகள்' போன்ற பாரிய கெரில்லா தாக்குதல்களில் ஈடுபட்டு அனுபவம் கொண்ட சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவுதான் பிரதான தாக்குதல் அணி. கரும்புலிகளும் அதில் அடங்குவர்.

**2. விசேஷ பயிற்சி பெற்ற படையணிகள்.** இதில் மகளிர் படையணி முக்கியமானது.

**3. புதிதாகப் பயிற்சிபெற்ற ஆண்,பெண் உறுப்பினர்களைக் கொண்ட அணிகள்.**

சகல அணிகளையும் சேர்த்து ஆயிரம் பேர்வரையான புலிகள் சண்டைக் களத்தில் இறக்கப்பட்டனர்.

தாக்குதல் அணிகள் இரு முனைகளில் இருந்து ஊடறுத்தன.

வவுனியா மேற்கில் இருந்து ஒரு அணியும், வவுனியா கிழக்கில் இருந்து இன்னொரு அணியும் ஊடறுத்தன.

வவுனியா கிழக்கில் இருந்து தாண்டிக்குளம் செல்வதற்கு இரு பாதைகள் உள்ளன. ஒன்று: முல்லைத்தீவிலிருந்து புறப்பட்டு புளியங்குளத்துக்கும் நெடுங்கேணிக்கும் இடைப்பட்ட பகுதியூடாகச் செல்வது. இரண்டாவது பாதை திருமலையில் இருந்து காடுகள் ஊடாகச் சென்றடைவது.

'வெற்றி நிச்சயம்' படை நடவடிக்கைக்கு முன்பாகவே சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு முத்த தளபதி சொர்ணம் தலைமையில் திருமலைக்கு அனுப்பப்பட்டுவிட்டது.

முல்லை முற்றுகைக்கு பதிலடி கொடுக்கவும், முறியடிக்கவும் முன் கூட்டியே பிரபாகரன் போட்டிருந்த உத்தி அது.

வவுனியாவில் புயல்வேக ஊடறுப்புத் தாக்குதலுக்கான திட்டமிடலுக்கு மட்டும் சொர்ணம் முல்லைத்தீவு சென்றுவிட்டு மீண்டும் திரும்பிவிட்டார். சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் வேலை என்னவென்று பிரபாகரன் பிரித்துக்கொடுத்துவிட்டார்.

திருமலை சென்ற சொர்ணம் தனது படைப்பிரிவுடன் தாக்குதலுக்கான குறிப்பிட்ட திகதியில் குறித்த இடத்தில் நிற்க வேண்டும்.

முழுமையான நடவடிக்கைக்கும் களப்பொறுப்பு புலிகளின் துணைத் தளபதி பால்ராஜ். அவரது பொறுப்பின் கீழ் முத்த தளபதிகளான சொர்ணம், கருணா, ஆகியோரும் மற்றும் பானு, தீபன், மகளிர் படையணி தளபதி நந்தா ஆகிய தளபதிகளும் அணிகளுக்கு தலைமை ஏற்றனர்.

வவுனியா ஊடறுப்பு தாக்குதல் மீதான தாக்குதல் வெற்றியாக முடிந்த போதும், தமது ஆட்பல இழப்புக்கு சடாரமல்ல என்ற அபிப்பிராயம் பிரபாகரனுக்கு. அதனாலேதான் மட்டக்களப்பு விசேஷ தளபதி கருணாவை தன்னுடன் அழைத்து வைத்துக்கொண்டார் பிரபாகரன். கருணாவுக்கு தன் திறமையை நிரூபிக்க வன்னிக் களத்தில் சந்தர்ப்பம் கொடுத்தார் பிரபாகரன். கருணா வன்னியில் நிற்கும் செய்தியை முன்னரே கூறியிருந்தோம்.

வவுனியா ஊடறுப்புத் தாக்குதலின் பிரதான நோக்கம் அழித்தொழிப்பு.

படையினரை ஆட்பலரீதியிலும், படைக்கல ரீதியிலும் அழித்தொழிப்பு.

புலிகள் முன்னர் இரண்டு பாரிய அழித்தொழிப்பு யுத்தங்களை நடத்தியிருந்தனர்.

ஒன்று: முல்லைத்தீவு. முகாம்மீதான அழித்தொழிப்பு யுத்தம். அதில் படையினர் ஆட்பல ரீதியில் அழித்தொழிக்கப்பட்டனர். ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. முதன் முதலாக ஆட்டிலெறிகள் இரண்டும் இரு பவள் கவச வாகனமும் கைப்பற்றப்பட்டன. படையினர் தரப்பில் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பலி. புலிகள் தரப்பில் 260 பேர் பலியானார்கள்.

இரண்டாவது; பரந்தன் சமர். படையினரையும், படைக்கலங்களையும் அழிப்பதிலேயே புலிகள் நாட்டம் கொண்டிருந்தனர். கிட்டத்தட்ட 250 படையினர் வரை பலியாகினர். ஆட்டிலெறிகள் அழிக்கப்பட்டன. புலிகள் தரப்பில் 140 பேர் பலியாகினர்.

இந்த இரண்டு அழித்தொழிப்பு யுத்தங்களும் புலிகளுக்கே வெற்றி எனினும், பரந்தன் சமரில் படையினரை ஆட்பல ரீதியில் அழித்தது போதாது என்பதே பிரபாகரனின் அபிப்பிராயம்.

எனவே பரந்தன் ஊடறுப்பு தாக்குதலை விட உத்வேகமான தாக்குதலாகவே வவுனியா ஊடறுப்பு தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்பட்டது.

புலிகள் தாக்குதலுக்காக தெரிவு செய்த களத்தில் இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் பொலிசார் எல்லோருமாக கிட்டத்தட்ட மூவாயிரம் பேராவது இருந்திருக்கலாம் என்று மதிப்பீடு செய்யப்பட்டது. தமது அணிகளின் பலத்தைவிட மும்மடங்கு எதிர்த் தரப்பு பலத்தைக் கணிப்பிட்டே புலிகள் சண்டைக்கான தயாரிப்பை மேற்கொண்டனர்.

**படையினர் தரப்பில் ஆட்பல ரீதியில் புலிகளைவிட மும்மடங்கும், படைக்கல ரீதியில் புலிகளைவிட பல நூறு மடங்கு பலம் வாய்ந்ததுமான களம் என்று சொல்லலாம். ஏனெனில் படையினருக்கு புலிகளின் நகர்வு சற்றுத் தெரிந்திருந்தாலே போதும் உஷாராகி ஆட்டிலெறிகளை பொழியச் செய்திருப்பர். டாங்கிகள் குண்டுகளைக் கக்கி புலிகளின் அணிகளை தகர்த் திருக்கும்.**

மரபுப்போரில் பாவிக்கப்படும் பாரிய படைக்கலங்களான ஆட்டிலெறிகளையும், டாங்கிகளையும் கன ஆயுதங்கள், கனரக வாகனங்கள் என்று அழைப்பர். இவற்றின் பலம் என்ன வெனில், எட்டத்தில் வைத்தே எதிரிகளை அழித்துவிடலாம். ஆனால் இவற்றின் பலவீனம் யாதெனில், எதிரிகள் மிகக் கிட்டத்தில் வந்துவிட்டால் போதிய பயன் உடைய தாக்குதலை நடத்த இயலாது.

எனவே ஆட்டிலெறிகளும், டாங்கிகளும் தங்கள் வாய்களை திறக்க முன்னரே படுவேகமாக ஊடறுத்து அவற்றை நெருங்கிவிட வேண்டும்.

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**


ஊடறுப்பது எப்படி?

எனவே தம்மைவிட சக்தி பொருந்திய படையணிகள்மீதான தாக்குதலுக்கு திட்டமிடும் கெரில்லாக்களின் பிரதான பலம் குறிப்பிட்ட நேரத்தில் அதிவேகமாக பாய்ந்து குறிப்பிட்ட இலக்கை கைப்பற்றும் திறமைதான். அதில் சற்று சறுக்கினாலும் மறு தரப்பின் கை ஓங்கிவிடும்.

அதனால்தான் படையினரே சொல்வது போல புயல்வேகத்தில் பாய்ந்து சென்றன புலிகளின் படையணிகள்.

சண்டை தொடங்க முன்னரே புலிகளின் அணி ஒன்று இராணுவச் சீருடையில் தாண்டிக்குளத்துக்கு அண்மையில் நடமாடியது. அங்கு எதிர்ப்பட்ட ஊரவர்கள் சிலரிடம் தங்களை இராணுவத்தினர்போலக் காட்டிக் கொண்டு புலிகள் இருக்கிறதா? என்று கேட்டு பரிசோதித்துள்ளனராம் புலிகள். அதனால் யாருக்கும் சந்தேகம் வரவில்லை.

சண்டை தொடங்கும் முன்பு சிக்னலுக்காக கிழக்கிலும், மேற்கிலும் காத்திருந்தன புலிகளின் அணிகள்.

நெடுங்கேணிக்கு அப்பால் உள்ள புலிகளின் நிலை ஒன்றிலிருந்து ஆட்டிலெறித் தாக்குதலை வவுனியா நிலைகள் நோக்கி முதலில் நடத்துவதுதான் திட்டம்.

ஆட்டிலெறியை சண்டைக் களத்துக்கு கொண்டுவர முடியாது. களச்சூழல் புலோலி நிலை என்பவை அதற்கு ஒத்துழைக்காது. எனவே சண்டைக் களத்துக்கு வெளியே காட்டுக்குள் உள்ள புலிகளின் நிலையில் நிறுத்தப்பட்டிருந்த ஆட்டிலெறித் தாக்குதல் நடத்தப்பட்டது.

**ஆட்டிலெறியில் இருந்து புறப்பட்ட முதலாவது குண்டு வவுனியாவில் விழுந்து வெடித்ததும், கிழக்கிலும், மேற்கிலும் தயார் நிலையில் இருந்த புலிகளின் அணிகள் பாய்ச்சலை ஆரம்பித்தன.**

அதேநேரம் ஆட்டிலெறி தொடர்ந்து வவுனியா படை நிலைகள் நோக்கி குண்டுகளை ஏவிக்கொண்டிருந்தது. எனினும் தாண்டிக்குளம் விநியோக முகாம் பகுதிக்கு ஆட்டிலெறி அடி நடக்கவில்லை. காரணம் அப்பகுதியில் அடித்தால் புலிகளின் அணிகள்மீதும் விழுந்து விடும்.

வவுனியா படை நிலைகளில் இருந்து படையினர் புறப்பட்டு தாண்டிக்குள விநியோக முகாம் படையினருக்கு உதவிக்கு வராமல் தடுக்கவும், முகாம்களுக்குள் அவர்களை பதுங்குநிலையில் வைத்திருக்கவுமே ஆட்டிலெறித் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதேவேளை மேற்குப் புறமாக ஊடறுத்த புலிகளின் பிரிவொன்று சமயபுரம், கணேசபுரம் பங்கர் நிலைகளை தாக்கிக் கைப்பற்றிக் கொண்டிருக்க, ஏனைய பிரிவுகள் தாண்டிக்குளம் நோக்கி முன்னேறின. அதே சமயம் கிழக்குப் புறத்திலிருந்தும் புலிகளின் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவும் முன்னேற இருமுனை அணிகளும் தாண்டிக்குள விநியோக முகாமை நோக்கி உக்கிர தாக்குதலை ஆரம்பித்தன.

**இரண்டு கரும்புலிகள் தாண்டிக்குள விநியோக முகாம்மீதான தாக்குதலின் முன்னரே பதுங்குநிலை எடுத்து, தரையோடு தரையாக நகர்ந்து முகாம் அருகே சென்றுவிட்டனர். தமது அணிகள் முகாமை நெருங்கி தாக்குதலைத் தொடுத்ததும் பதுங்கியிருந்த கரும்புலிகள் தாண்டிக்குள விநியோக முகாமின் ஆட்டிலெறி தளம் நோக்கி பாய்ந்து சென்று தற்கொலைத் தாக்குதல் நடத்தினார்கள்.**

அந்த அதிர்வில் முகாம் அதிர்ந்தது. படையினர் தரப்புக்கு பலத்த அதிர்ச்சி. அந்த அதிர்ச்சியில் இருந்து மீள முன்பாகவே புலிகளின் அணிகள் சரமாரியான மோட்டார் தாக்குதலை தொடுத்தன. ரொக்கட் லோஞ்சர்களால் காவல் நிலைகள் தாக்கப்பட்டன.


சரமாரியான மோட்டார் ஷெல்கள் ஒரு புறம், ரொக்கட் லோஞ்சர்களின் வெடியதிர்வுகள் மறுபுறம், படையினருக்கு தாக்குதல்நிலை எடுக்க முடியவில்லை. முதலில் தற்பாதுகாப்பு பதுங்கு நிலையை நாடினர். அந்த கால அவகாசத்தில் புலிகள் முகாமுக்குள் புகுந்து விட்டனர்.

ஆட்டிலெறிகள் எதனையும் கொண்டு செல்லக் கூடிய களச் சூழ்நிலை இல்லை என்பதால் அவற்றை அழித்தொழிப்பது என்று முன் கூட்டியே செய்த முடிவின்படி அவற்றை வெடிவைத்து தகர்த்தனர். ஆயுதக் கிடங்கும் தகர்க்கப்பட்டது. அதனால் பற்றி எரிந்து தீச்சுவாலைகள் எழுந்தன.

அதேநேரம் பின்வாங்கிச் செல்லும் படையினரை தடுத்து அழிப்பதில் ஈடுபட்ட புலிகளின் அணிகளுக்கும் படையினருக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்றன.

படையினர் தப்பிச் செல்லாதிருக்கவும், வவுனியாவில் இருந்து படையினருக்கு உதவி வராமல் தடுக்கவும் குறுக்கே ஒரு வேலியாக நின்றன புலிகளின் அணிகள்.

மேற்கே சமயபுரம், கணேசபுரத்தில் இருந்து தொடங்கி கிழக்கே பூந்தோட்டம் என்ற இடம்வரை தடுப்புச் சுவர்போல புலிகளின் அணிகள் நீளமான வாக்கில் நிலைகொண்டிருந்தன.




அதேவேளை தாண்டிக்குளத்தில் இருந்து நொச்சிமோட்டைவரையான இரண்டு கிலோ மீற்றர் பகுதி தரைப்பாதையும் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்தது. அதனால் ஓமந்தையில் நிலைகொண்டு புளியங்குளம் நோக்கிச் சென்ற 55வது படைப்பிரிவு தனியாகத் துண்டுபட்டு நின்றது. கிட்டத்தட்ட 20 ஆயிரம் பேர் அங்கு இருந்தனர் என்று கணிப்பிடப்படுகிறது.

ஓமந்தை படையினர் தாண்டிக்குளம் படையினருக்கு உதவிக்கு வராமல் தடுப்பதற்காக நொச்சிமோட்டைப் பாலம் புலிகளால் தகர்க்கப்பட்டது.

ஓமந்தையில் நின்ற 55வது படைப்பிரிவுக்கான தலைமையகமாகவும், விநியோகத் தளமாகவும் தாண்டிக்குளம் முகாமே செயற்பட்டது.

அதிகாலை 2.30 மணிக்கு ஆரம்பமான புயல்வேகத் தாக்குதல் அதிர்வுகள் வவுனியாவை மட்டுமல்ல பாதுகாப்பு தரப்பின் உயர் தலைமையையும், அரசையும் அதிரவைத்துக் கொண்டிருந்தன.

விநியோகமுகாம் தகர்ந்தது. விடியும்போது புலிகளின் ஆதிக்கத்தில் இரண்டு கிலோ மீட்டர் வந்துவிட்டது. ஓமந்தை படை துண்டிக்கப்பட்டிருக்கிறது. புலிகளின் அடுத்த திட்டம் என்ன? விபரீதமாக களச் சூழல் மாறுவதற்கு முன்னர் தாண்டிக் குளத்தையும் நொச்சி மோட்டையும் கட்டுப் பாட்டில் கொண்டுவந்தே யாக வேண்டும் என்பதுதான் படைத் தலைமைக்கு தலைவலியான பிரச்சனையானது.

புலிகளை நோக்கி தாக்குதல் நடத்திய எம்.ஐ.24 ஹெலிக் கொப்டரும் புலிகளின் தாக்குதலால் சேதமடைந்தது. எனினும் கனரக ஆயுதங்களை புலிகள் கொண்டு செல்லாதிருக்கும் பொருட்டு விமானப் படையினர் தாக்குதல்களை நடத்திக்கொண்டு இருந்தனர்.

ஆட்டிலெறிகளும், டாங்கிகளும் புலிகளின் கையில் சென்றுவிட்டால் ஆபத்து என்பதுதான் படையினரின் மற்றொரு கவலை. ஆனால் தாண்டிக்குள முகாமில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த டாங்கிகளை புலிகள் குண்டுவைத்து தகர்த்துவிட்டனர். நான்கு டாங்கிகள் தகர்க்கப்பட்டதாக கொழும்புச் செய்திகளை ஆதாரம் காட்டித்தான் புலிகள் தெரிவித்துள்ளனர். படைத்தரப்பு இரண்டு டாங்கிகள் என்றது. சரியான விபரத்தை புலிகளும் உடனடியாக கூறவில்லை. ஐந்து ஆட்டிலெறிகள் தகர்க்கப்பட்டதாக புலிகள் கூறியுள்ளனர்.

அதுதவிர கிட்டத்தட்ட எட்டாயிரம் ஆட்டிலெறிக் குண்டுகள் இருந்தன என்று ஒரு தகவல் கூறுகிறது. ஒரு ஆட்டிலெறிக் குண்டின் விலை இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 45ஆயிரம் ரூபாய். அவற்றில் குறிப்பிட்டளவை புலிகள் எடுத்திருக்கலாம். மீதியை நாசமாக்கியிருக்கின்றனர்.

**60 எம்.எம்.மோட்டார்கள், அவற்றுக்கான ஷெல்கள் உட்பட பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக புலிகளின் செய்திக் குறிப்பு தெரிவித்திருக்கிறது. எனவே சுலபமாக தூக்கிச் செல்லக்கூடிய ஆயுதங்களை மட்டுமே புலிகள் எடுத்துச் சென்றுள்ளனர். புலிகளின் முழுக்கவனமும் அழித்தொழிப்பில்தான் செலுத்தப்பட்டிருக்கிறது.**

படை உயர் அதிகாரி ஒருவர் தப்பியது அதிஷ்டவசமானது என்று தகவல். அவருடன் நின்ற அணி முழுவதுமே அழிக்கப்பட்டது. பின்னர் சண்டைக் களத்திலிருந்து வெளியேறிய மக்களோடு மக்களாக அவர் வவுனியாவுக்கு வந்தடைந்தார். படைவீரர்கள் பலர் தப்பியோடிய மக்களிடம் உடைகளை வாங்கி அணிந்து கொண்டு மக்களோடு மக்களாக தப்பிச் சென்றதாகவும் தெரிய வருகிறது.

படையினர் தரப்பில் 350 பேர் பலியானதாகவும் நூற்றுக்கு மேற்பட்டோரைக் காணவில்லை என்றும், 300 பேர் வரை காயமடைந்துள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. காயமடைந்தவர்களில் 90 பேர் அபாயகரமான கட்டத்தில் இருந்தனர்.

தமது தரப்பில் 81 பேர் பலியானதாகவும் அதில் 21 பேர் பெண் புலிகள் என்றும் புலிகள் கூறியுள்ளனர். ஆயினும் புலிகள் தரப்பில் 100 பேர்வரை பலியானதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

கண்ணிவெடிகளில் சிக்கியும், விமானத் தாக்குதல்கள் காரணமாகவுமே புலிகள் தரப்பில் உயிரிழப்புக்கள் அதிகம். புதர்களின் மறைவுகளில் நிலை எடுத்திருந்த புலிகள் பலியாகி இருக்கின்றனர். அதனால்தான் அவர்களின் உடல்களை புலிகளால் எடுத்துச் செல்ல முடியவில்லை. ஏனையோர் உடல்களை புலிகள் கொண்டு சென்றுள்ளனர். இதிலே வேடிக்கை என்னவென்றால் பலியாகி கிடந்த புலிகளின் ஆயுதங்களை காட்டி புலிகளிடம் இருந்து கைப்பற்றிய ஆயுதங்கள் என்று படையினர் காண்பித்தனர்.

செவ்வாய்க்கிழமை அதிகாலை 2.10 மணிமுதல் இரவு 8 மணிவரை சண்டைக் களத்தில் புலிகளின் அணிகள் நிலைகொண்டிருந்தன. அதன்பின்னரே படைகள் தாண்டிக்குளம் நொச்சிமோட்டைப் பகுதியை மறுபடி தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தன.

**புதன்கிழமை காலை விடிந்தபோது சண்டைக் களம் பயங்கரமான தன் உடம்பைக் காட்டியது. எங்கும் குருதிக் கடல்கள். சிதைந்து கிடந்த மனிதச் சடலங்கள் காயமடைந்து துடித்துக்கொண்டிருந்தோர், தகர்ந்து கிடந்த வாகனங்கள் என்றெல்லாம் மாபெரும் பேரழிவின் சாட்சியாக விரிந்து கிடந்தது. சாக்களமாக மாறிய சண்டைக்களம். படையினர் தவிர பங்கர்களில் பாதுகாப்புக் கடமையில் இருந்த 12 புளொட் உறுப்பினர்களும் பலியாகினர்.**

புலிகள் இதுவரை நடத்திய பாரிய மூன்று அழித்தொழிப்பு யுத்தங்களில் இரண்டாவது பாரிய அழித்தொழிப்பு யுத்தம் இதுவாகும்.

**பரந்தன் ஊடறுப்புச் சமரைவிட தாண்டிக்குள சமரின் உக்கிரம் பலமடங்கு அதிகம். இழப்பு வீதம் குறைவு. எனவே போர்த்தந்திர ரீதியில் புலிகளின் கெரில்லா திறன் வளர்முகமாக இருப்பதையும், ஒவ்வொரு சண்டை அனுபவத்தில் இருந்தும் கற்றுக்கொண்டு புதிய சண்டைகளுக்கு திட்டமிடும் ஆற்றலை பெருக்கிக் கொள்வதையுமே காணமுடிகிறது.**

ரசியாவில் ஹிட்லரின் பல்லாயிரம் படைகளுக்கு ஸ்டாலின்கிராட்டில்தான் பொறி காத்திருந்தது. வியட்நாமில் ஃபிரான்சின் எட்டாயிரம் படைகளுக்கு தின்-பின்-பூ களம் பொறியானது. ஆனால் அந்த இரு சமர்களிலும் ரசியா வீரர்களும், வியட்னாம் போராளிகளும் தமது எதிர்த்தரப்பைவிட அதிக உயிர்ப்பலி கொடுத்தே தம் எதிரிகளை முறியடித்தனர். ஆனால் புலிகளின் கெரில்லா திறன் காரணமாக இதுவரை தமது தரப்பில் குறைவான இழப்புடன்தான் சண்டைகள் சமர்கள், முடிந்திருக்கின்றன. காரணம் இது, படைபலத்துக்கும், மனபலத்துக்கும் இடையிலான யுத்தமாகவும் இருக்கிறது.

வன்னிச் சமர் பிரபாகரனுக்கு 'வோட்டர்லூவா', படையினருக்கு 'தின் பின் பூவா'? இதற்கான விடை தெரிய நீண்ட காலம் எடுக்கும். ■

# அதிரடி அய்யாத்துரை



*தமிழ்க் கட்சிகளுக்கு* சடாரென்று ஒரு உஷார் வந்திருக்குதுபோல கிடக்கு. ஐந்து கட்சிகள் ஒன்றுபட்டு தீர்வென்றால் கெதியாகப் பேசிமுடிக்க வேணும்! நீங்கள் ரெடியோ? எண்டு அரச தரப்பையும், எதிர்த்தரப்பையும் கேட்டிருக்கினம். காலம் கடந்த ஞானம் தான். இப்பவாயினும் ஏற்பட்டதில் ரொம்ப சந்தோசம். எல்லாம் வல்ல ஆண்டவனே. இவர்கள் தொடர்ந்து அட்டென்ஷனில் நிற்க ஆசீர்வதிப்பாயாக?

*கூட்டான கட்சிப்* பிரமுகர்கள் சில உயர் இடங்களில் வாக்குறுதி கொடுத்திருப்பதாகக் கேள்வி. "ஏனைய தமிழ்க் கட்சிகளை வழிக்குக் கொண்டுவரலாம். அது அடியேன்கள் பொறுப்பு" எண்டு திருவாய் மலர்ந்துள்ளனராம் அதனால்தான் திண்டாமைக் கொள்கையைக் கைவிட்டு பிற தமிழ்க் கட்சிகளுடன் கூடிப்பேச நாடிச் சென்றவையாம்.

*யாழ்ப்பாணத்தில்* முஸ்லிம் மக்கள் குடியிருந்த பகுதிகளில் ரெண்டு எழுத்தாரின் பிற மாவட்ட குடும்பங்கள் இருந்தது பழைய கதை. இப்போது அப்பகுதிகள் 'நோமென்' ஏரியா. சமீபத்தில் அங்கிருந்து லொறி லொறியாக ஓடுகள், கதவுகள், மற்றும் தளபாடங்கள் விதம் விதமாக-ரகம் ரகமாக லொறிகளில் ஏற்றப்படும் காட்சியை பல கண்கள் கண்டுள்ளன. அத்தனை பொருட்களும் யாழில் சனம் உள்ள பகுதிகளில் கொண்டுசெல்லப்பட்டு துரித விற்பனை நடக்கிறதாம். இந்த இலாபகரமான சுருட்டல் தொழிலில் காக்கி உடையினருக்கு பங்கிருப்பதாகக் கேள்வி. வேலி பயிரை மட்டுமல்ல, கூரைகளையும் மேயும்!

*தமது தரப்பின்* கணக்கே சரியாக சொல்லமுடியாத டென்ஷனில் கூட, அதெப்படிப்பாருங்கோ ரெண்டு எழுத்தாரில் எத்தனைபேர் எண்டு கணக்குச் சொல்ல முடியுது?! இது சிந்திக்கும் பவர் உள்ள சிலர் கேட்கும் கேள்வி! ஒரு குறும்பர் கேட்ட கேள்வி என்ன தெரியுமோ? வானொலியை இடைமறித்துக் கேட்டோம் எண்டு சொல்லுகினம். ஒரு வேளை கிரிக்கெட் கொமன்றியை கேட்டுப்போட்டுத்தான் ஸ்கோர் சொல்லுகினமோ?" நான் பதில் சொல்ல விரும்பேல்லை. மெல்ல நழுவி வந்துவிட்டேன்.

*சங்கரியாரைச்* சந்திக்கச் சென்ற தமிழர் பணிக்குழுக்காரர் கடுப்பில் இருக்கினம். பணிக்குழுப் பிரமுகர் ஒருவர் கடுப்பின் உச்சியில் நின்று சொன்னது இதுதான்: "கைக்குண்டுமட்டும் எங்களிடம் இருந்திருந்தா அடிச்சப்போட்டு வந்திருப்பம்." மற்றொரு செய்தி கேளுங்கோ: கடந்தவாரம் அரச தமிழ் அலுவலர் ஒருவர் கூட்டான கட்சி அலுவலகத்துக்கு போன் பண்ணித் தலைவருடன் பேச விரும்பினாராம். தலைவர் இல்லை, சங்கரிதான் பேசியதாம். 'அவங்கள் என்ன கிழிப்பாங்களோ?' எண்ட ரகத்தில் சங்கரி பேச அந்த அலுவலர் திகைத்துப் போனாராம். "நான் தன்மையாகத்தானே பேசுகிறேன் நீர் ஏன் இப்படிப் பேசுகிறீர்?" எண்டு கேட்டுவிட்டு போனை 'டொக்!' முன்னொரு காலத்தில் சண்டித்தனம் செய்து சனத்தை மிரட்டிய தெல்லாம் மலையேறிப் போச்சு. இப்பவெல்லாம் பருப்பு வேகாது எண்ட சங்கதி சங்கரிக்குப் புரியாட்டி சங்கடங்கள் நேரலாம்!

*பச்சை அணித் தலைவரிடம்* கிழக்கின் சிங்கத்தார் தெளிவாகச் சொல்லிப்போட்டாராம்: "கூட்டான கட்சி கிழக்குத் தொடர்பாக எடுக்கும் முடிவுகளில் எனக்கு உடன்பாடும் கிடையாது, ஒரு தொடர்பும் கிடையாது" எண்டு சொல்லிப்போட்டார். சமீபத்தில் பச்சை அணித் தலைவர் தமிழ்க்கட்சிகளின் தலைவர்களிடம் நேரடியாகவே கேட்டாராம்: கூட்டான கட்சியின் கருத்து என்றால் யார் கருத்தை எடுக்கிறது? சிங்கத்தாரின் கருத்தையோ, அல்லது சிதம்பரத்தார் கருத்தையோ?" ஒய்யாரக் கொண்டையாம் உள்ளே ஈரும் பேனுமாம்.

*இன்னுமொரு* தகவலும் பச்சை அணிபற்றி இருக்கிறது. கிழக்கின் தனித்துவத் தலைவரின் தனிமாகாணக் கோரிக்கைக்கு பச்சை அணிக்குள் கடும் எதிர்ப்பாம். முன்னாள் சபாநாயகரும், முன்னாள் கிழக்கு முக்கியஸ்தர்களும் முகம் சுளிக்கிறார்களாம். ஆனால் பச்சைத் தலைவரின் கணக்கு வேறுமாதிரியாம். தமது கட்சிதான் எதிர்ப்பு என்று நேரடியாகச் சொல்லாமல், தமிழ்க் கட்சிகளே அதற்கு எதிர்ப்பு எண்டமாதிரி குத்துப்படட்டும் எண்டு பார்க்கிறாராம். எல்லோரும் விளையாடுகினம்.

*யாழ்ப்பாணத்தில் கைதான* தன் உறவினரைப் பற்றி விசாரிக்க ஓர் இளம்பெண் இயக்க அலுவலகம் ஒன்றுக்குப் போனாராம். இரண்டுநாள் போய் வந்தார். மூன்றாம் நாள் போனபோது அந்த அலுவலகப் பொறுப்பாளர் ஒரு புத்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார். பொது அறிவூட்டும் அக்கறையாக்கும் எண்டு புல்லரித்துப்போன பெண் வீட்டில் போய் புத்தகத்தை விரித்தார். படக் படக்... அதற்குள் லவ்லெட்டர். ஜில் கவிதைகள். போதாக்குறைக்கு 'தமிழீழம் பெறுவோம்' எண்டும் வீரவசனம். இதென்ன காதல் கழகமோ.. கலகமோ? எண்டு கலங்கிப்போன பெண் இப்போது அந்தப் பக்கமே செல்வதில்லையாம். காதலிப்பது தவறில்லை, காதலை இயக்க வேலையோடு கலந்து 'மிக்ஸ்' பண்ணுவதுதான் பிழை. அந்த இயக்கக்காதலர் எழுதிய கவிதை இதோ:

"மரணமே எங்கள்
மரபாகிப் போன பின்பு
மரணம் எங்களை என்ன செய்யும்?
மலர்கின்ற தமிழீழம்
மரணத்தில் மலருமென்றால்
மரணம் எங்களை முத்தமிடட்டும்!"

..ச்சா கைவிடப்பட்ட கொள்கையை எந்த இடத்தில்போய் கையில் எடுத்து பாவிச்சிருக்கிறார் பார்த்தியளோ?! ■



படிப்பகம்

www.padippakam.com

## அரசியல் தொடர்

### அற்புதன்



# பேச்சுவார்த்தைகளும் பிரபாவின் முடிவும்

இலங்கை அரசுகள் தமிழ் மக்களின் உரிமைகளை ஒரு நாளும் வழங்கப் போவதில்லை. பேச்சுக்கள் என்ற பொறிகளை எம்முன்பாக வைக்கும்போது தந்திரமாக அதிலிருந்து மீள்வதற்காக பேச்சுக்கள் நடத்தலாம். ஆனால் இறுதி இலட்சியத்தை விட்டுக்கொடுக்க முடியாது. அத்தகைய தந்திரப் பேச்சுக்களில் தானே பங்குகொள்வது இயக்கத்தின் போர்க் குணத்தை மழுங்கடிக்கும் என்ற நிலையில் இருந்து பிரபாகரன் எடுத்த முடிவே அதுவாகும்.

திம்பு பேச்சு நடந்த கட்டத்தில் சகல இயக்கத் தலைமைகளுமே (கூட்டணி தவிர) அவ்வாறான முடிவையே எடுத்தன. தமிழீழத்துக்கு குறைந்த பேச்சுக்களில் தலைவர்கள் பங்கு கொள்வதில்லை. பேச்சுக்கு செல்வது தந்திரோபாய காரணங்களால் அவசியமாக இருப்பதால் பிரதிநிதிகளை அனுப்புவது என்றே முடிவு செய்தனர்.

மற்றொரு முடிவையும் புலிகள் தெரிவித்திருந்தனர்.

"இந்தியாவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் பின்னடைவு ஏற்பட்டதற்கு கொழும்பில் உள்ள இந்தியத்தூதர் ஜே.என்.டிக்ஷித் போன்றோரின் அணுகுமுறைகளே முக்கிய காரணமாகும். எனவே, இனிமேல் எம்முடன் சம்பந்தப்பட்ட எந்தப் பேச்சு வார்த்தைகளிலும் இந்தியப் பிரதிநிதியாக டிக்ஷித்தோ அல்லது அவரைச் சார்ந்தாரோ இடம்பெறக்கூடாது."

பேச்சுக்கள் தொடர்பாக பிரபாகரன் சார்பாக கூறப்பட்ட கறாரான கருத்துக்கள் இந்தியத் தரப்புக்கு ஆச்சரியமளித்தன.

நாலாபுறமும் நெருக்குதல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் சமரச முடிவுகளுக்கு பிரபாகரன் முன்வந்தேயாகவேண்டும். முதலில் பிகு பண்ணினாலும் படிப்படியாக இந்தியாவின் முடிவுகளுக்கு கட்டுப்படுப்பட்டு பணிந்தேயாக வேண்டும் என்றுதான் இந்திய அரசு கணிப்புச் செய்தது.

ஆனால் பிரபாகரனோ இந்திய அரசின் பக்கம் நியாயம் இல்லை என்பதை எப்படி வெளிப்படுத்துவது என்பதை அரசியல் களத்திலும், இந்தியப்படை முற்றுகையை முறியடித்து நெருக்குதல் கொடுப்பது எப்படி என்பது பற்றியே போர்க்களத்தில் தனது திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்தார்.

பிரபாகரன் பற்றிய கணிப்பீட்டில் இந்திய அரசு தொடர்ந்து தவறிழைத்தது.

'இராட்சத இராணுவ பலம் முன்பாக பிரபாகரன் தனது பிடிவாதத்தைத் தளர்த்தியே ஆகவேண்டும்' என்று நினைத்தது இந்திய அரசு.

### இரத்தக் கைஒப்பம்

செல்வி ஜெயலலிதாவின் தீவிர விசுவாசிகள் பிரபாகரனுக்காக இரத்தக் கையெழுத்துப்போட்டு மகஜர் அனுப்பி வைத்தனர்.

இன்றல்ல, இது நடந்தது அன்று. 1988 மார்ச் மாதத்தில்.

எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பின்னர் அ.தி.மு.க இரண்டாக உடைந்தது. ஒரு பிரிவு அ.தி.மு.க (ஜெ) என்றும், மறுபிரிவு அ.தி.மு.க (ஜா) என்றும் அழைக்கப்பட்டது.

அ.தி.மு.க (ஜெ) சார்பாகவும், எம்.ஜி.ஆர். ஜெயலலிதா பேரவை சார்பாகவும் பெங்களூரில் நடைபெற்ற கூட்டத்தில் தான் இரத்தக்கையொப்பமிட்டு மகஜர் அனுப்பினார்கள்.

மகஜர் அனுப்பப்பட்டது ஜெயலலிதாவுக்கு. மகஜரில் கூறப்பட்டவை இவைதான்:

* தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு முழு ஆதரவு தெரிவிக்கவேண்டும்.

* தமிழினத் தலைவர் தம்பி பிரபாகரன் உயிருக்கு ஏதாவது நேர்ந்தால் பின்விளைவுகளுக்கு ராஜீவ் காந்தி பொறுப்பு ஏற்கவேண்டும்.

* இந்திய அமைதிப்படையின் தாக்குதலை நிறுத்த போராட்டத்தில் குதிக்க வேண்டும்.

மக்களின் சகஜ வாழ்க்கையில் தமக்கு நம்பிக்கை இருப்பதாகக் காட்டுவதற்கும், மக்களின் ஆதரவைப் பெற்று மக்களிடம் இருந்து புலிகளை தனிமைப்படுத்தவும் இந்தியப் படை அதிகாரிகள் இவ்வாறான மாநாடுகளை நடத்துவது வழக்கம்.

அநேகமாக இம்மாதியான மாநாடுகளில் கலந்துகொள்வோர் ஆமாம் சாமிகளாக நடித்து படை அதிகாரிகளின் அன்பைச் சம்பாதித்துக் கொள்வார்கள்.

என்று அவர் கூறினார். படை அதிகாரியின் முகத்தில் ஈயாடவில்லை.

### கைதி விடுதலை

வன்னியில் நடைபெற்ற சண்டையில் இந்தியப் படைவீரர்கள் சிலரை புலிகள் பிடித்தனர். அவர்களில் ஒருவரை விடுதலை செய்ய புலிகள் முன்வந்தனர்.

சென்னையில் இருந்த புலிகளின் தளபதிகளில் ஒருவரான கிட்டு மூலம் அத் தகவல் இந்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் வைத்து இந்தியப் படை வீரரை விடுவிப்பது என்று முடிவானது. அவரை விடுவிக்கும் ஏற்பாட்டை செய்ய சென்னையில் இருந்து புலிகள் இயக்க முக்கியஸ்தர்களான காஸ்ட்ரோவும், வாசுவும் இந்திய அரசால் விமானம் மூலம் அழைத்து வரப்பட்டனர்.

வவுனியாவில் சாஸ்திரி கூலாண்குளம் என்ற இடத்துக்கு காஸ்ட்ரோவும், வாசுவும் இந்தியப் படையினருடன் சென்றனர்.

அங்கிருந்து வோக்கி டோக்கிமூலம் காட்டில் உள்ள புலிகளுடன் தொடர்பு கொண்டனர். "இந்தியப் பத்திரிகையாளர்கள் வந்திருக்கிறார்களா?" என்று புலிகள் கேட்டனர். "ஆம் வந்திருக்கிறார்கள்" என்றார் காஸ்ட்ரோ.

அதன்பின்னர் இந்தியப் படைவீரர் தீலிப்ராமை புலிகள் அழைத்துவந்தனர். இந்தியப்படை கேர்னல் பி.எல்.கன்னாவிடம் திலீப்ராம் ஒப்படைக்கப்பட்டார்.

'புலிகளிடம் எந்தக் கேள்விகளையும் கேட்கக்கூடாது' என்று இந்தியப்படையினர் பத்திரிகையாளர்களிடம் கூறினார்கள்.

உடனே புலிகள்; "எங்கள் இலட்சியம் நிறைவேறும்வரை போராடியே தீருவோம்" என்று கோஷமிட்டனர்.

### விடுதலை ஏன்?

இந்தியப் படை வீரரை தாம் விடுதலை செய்தது ஏன்? என்பது தொடர்பாக புலிகள் இயக்கத்தினர் ஒரு அறிக்கை விடுத்தனர்.

1988 மே 15ல் விடுக்கப்பட்ட அந்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது:

தமிழீழத்தில் இந்தியப் படைகள் நடத்திய தாக்குதல்களால் இதுவரை மூவாயிரம்பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் கைகால்களை இழந்து ஊனமாகியுள்ளனர்.

ஏராளமான பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகியுள்ளனர்.

இவற்றையெல்லாம் இந்தியப்படையினர் தமது இராட்சத பிராசர இயந்திரங்கள் மூலமாக மூடிமறைக்கின்றனர்.

கடந்த 6.02.88 நடந்த சண்டையில் எமது இயக்கத்தால் கைதுசெய்யப்பட்ட இந்திய வீரர் திலீப்ராமை (வயது 26) மனித நேய அடிப்படையில் நாம் விடுதலை செய்திருக்கிறோம்.

சர்வதேச சமூகமே! சர்வதேச அமைப்புக்களே! எமது நியாயமான கோரிக்கைகள் நசுக்கப்பட்டு, உரிமைக்குரல் ஒடுக்கப்பட்டு- எமது பிரச்சனைகள் இந்தியாவின் பிரசார சாதனங்களால் மறைக்கப்படுகின்றன. இந்தியப் படையின் அட்டூழியங்கள் நியாயப்படுத்தப் படுகின்றன. தமிழ் ஈழத்தில் நடைபெறும் சம்பவங்கள் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன"

### 240 புலிகள்

இந்தியப் படையுடன் சண்டை ஆரம்பித்து 7 மாதகாலத்தில் தமது தரப்பில் பலியானோர் விபரத்தையும் புலிகள் வெளியிட்டிருந்தனர்.

240 புலிகள் ஏழு மாத சமரில் பலியானதாக புலிகள் உத்தியோகபூர்வமாக தெரிவித்தனர்.

இந்தியப்படை வீரரை புலிகள் விடுவித்ததை வைத்து இந்தியாவுக்கும், புலிகளுக்கும் இடையே சமரசம் ஏற்படப் போவதாக ஊகங்கள் கிளம்பின.

சென்னையில் இருந்து வந்த காஸ்ட்ரோ, வாசு ஆகியோர் இந்தியப்படை வீரரின் விடுவிப்புக்கு உதவியதால், சென்னையில் இந்திய அதிகாரிகளும், கிட்டு தலைமையில் புலிகளும் நடத்திய பேச்சுக்களில் திருப்பம் ஏற்பட்டுவிட்டது என்று பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.



வவுனியா-சாஸ்திரி கூளான்குளம் என்ற இடத்தில் சிறை பிடிக்கப்பட்ட இந்திய இராணுவ வீரர் திலீப்ராம் (அம்புக்குறியின் கீழ்) இந்திய இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டபோது. புலிகள் தரப்பில் தினேஷ், காஸ்ட்ரோ, தீபன்.

### வீடு தீக்கிரை

புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனையும், பிரதித் தலைவர் மாத்தையாவையும் கைதுசெய்யப் போவதாக வன்னியில் வலைவிரித்தது இந்தியப்படை.

வன்னிக்காடுகளுக்குள் ஊடுருவும் முயற்சிகள் புலிகளின் பதிலடிகளால் முறியடிக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு என்ற இடத்தில் புலிகளின் பிரதித்தலைவர் மாத்தையாவின் வீடு இருந்தது.

மாத்தையாவை பிடிக்க முடியாத கோபத்தை அந்த வீட்டின்மீது காட்டினார்கள் இந்தியப்படையினர்.

மாத்தையாவின் வீட்டுக்குள் யாரும் இருக்கவில்லை. ஆனால் மாத்தையாவின் வீட்டைப் பிடித்துவிட்டோம் என்று துள்ளிக்குதித்த படையினர் வீட்டைத் தீக்கிரையாக்கினார்கள். அந்த வீட்டுக்கு அருகிலிருந்த வீடும் நாசமாக்கப்பட்டது.

இந்த அமளிகள் மத்தியிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரஜைகள் குழுவினால் அடையாள உண்ணாவிரதம் நடத்தப்பட்டது.

மணலாறு குடியேற்றத் திட்டத்தை வாபஸ்பெறுமாறு கோரியும், தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறும் ஒருநாள் உண்ணாவிரதம் நடத்தப்பட்டது.

## 7 மாதம் - பலி 240 புலிகள்

### தாக்குதல்

திருமலையில் கும்புறுப் பிட்டியில் இந்தியப் படையினர் ரோந்து சென்றனர். ரோந்து சென்ற படையினர் மீது நடத்தப்பட்ட திடீர் தாக்குதலில் இரண்டு படையினர் கொல்லப்பட்டனர். ஒரு அதிகாரி உட்பட மூன்றுபேர் படுகாயமடைந்தனர். வல்வெட்டித்துறையில் இருந்த புலிகளின் பதுங்குமிடம் பற்றி இந்தியப் படையினருக்குத் தகவல் கிடைத்தது.

முகாம் சுற்றிவளைக்கப்பட்டதும் புலிகளும் எதிர்த்தாக்குதல் நடத்தினார்கள். ஆனாலும் படையினரின் கையே மேலோங்கியது. புலிகள் தரப்பில் நான்குபேர் பலியானார்கள். ரமேஷ், மாஸ்டர், ஜெயம், ஜீவா ஆகியோரே பலியான நால்வராவர். 1988 மார்ச் மாதத்தில் இந்த மோதல் இடம்பெற்றது.

இக்காலகட்டத்தில் புலிகளின் தாக்குதலால் இலங்கைப் படையினரும் பலியானார்கள்.

இந்தியப் படையினருக்கு மட்டுமல்லாமல் இலங்கை இராணுவத்தினரையும் புலிகளின் துப்பாக்கிகள் குறிவைத்தன.

வவுனியா அரந்தலாவ என்னும் இடத்தில் பஸ் வண்டியொன்றில் இராணுவத்தினர் சென்றுகொண்டிருந்தனர். பயணிகளும் பஸ்சில் இருந்தனர். வீதியின் குறுக்கே தடைபோடப்பட்டிருந்தது. அந்த இடத்தை நெருங்கியதும் பஸ் வேகம் குறைந்து நின்றது.

பஸ்சுக்குள் இராணுவ சீருடைகளைக் கண்டதும் புலிகளின் துப்பாக்கிகள் சீறத் தொடங்கின. இராணுவத்தினருக்கு எதிர்த் தாக்குதல் நடத்தும் சந்தர்ப்பமே இருக்கவில்லை.

ஆறு இராணுத்தினர் பலியானார்கள். கிராமவாசிகள் ஐந்துபேரும் பலியானார்கள். ஐந்துபேரும் சிங்கள இனத்தவர்.

இச் சம்பவத்தின் பின்னர் இலங்கை இராணுவத்தினருடன் இணைந்து இந்தியப் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். தாக்குதல் நடத்தியவர்கள் போய்விட்டார்கள். அப் பகுதியில் உள்ள பலர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டனர்.

### மாநாடு

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைதியை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய முல்லைத்தீவு அரச செயலகத்தில் ஒரு மாநாடு நடைபெற்றது.

ஆனால் முல்லைத்தீவில் நடைபெற்ற அந்த மாநாட்டில் முல்லைப் பிரஜைகள் குழுச் செயலாளர் கே.கதிரவேலு கூறிய கருத்துக்கள் சூடாக இருந்தன.

"இந்திய அமைதிப்படையினர் இங்கு வரும்போது எமது மக்கள் எவ்வளவு சந்தோசமடைந்தனர். கைநீட்டி வரவேற்றனர். இனி நாம் நிம்மதியாக வாழலாம் என்று எண்ணினார்கள். ஆனால் அதற்கு முற்றிலும் மாறாகவே இந்தியப் படையின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

எமது பொருளாதாரம் சீரழிந்துள்ளது. கல்வி பாழடிக்கப்பட்டுள்ளது. எமது பிரதேசங்களில் விவசாய முயற்சிகள் மேற்கொள்ள முடியாதுள்ளது. சொந்த வீடுகளிலேயே சுதந்திரமாக இருக்கமுடியாதுள்ளது"

## நாயாற்று வெளியில் ஒரு குறி

மன்னார் மாவட்ட புலிகளின் தளபதியாக இருந்தவர் விக்டர். இலங்கை இராணுவத்தினர் விக்டரைத் தேடித்திரிந்தனர்.

விக்டரின் நடமாட்டம் தொடர்பாக இராணுவத்தினருக்கு துல்லியமான தகவல் கிடைத்தது.

நாயாற்றுவெளியின் ஊடாக மாந்தைக்கு விக்ரர் செல்வதைப் பற்றியும் இராணுவத்தினர் அறிந்தனர்.



ராதா-விக்டர் (கண்ணாடியுடன்).

நாயாற்றுவெளி கிட்டத்தட்ட ஐந்துமைல் நீளமானது. வழக்கமாக விக்டர் ஒரு ஜீப்பில் செல்வார். அந்த ஜீப்புக்கு முன்பாக சிறு நூறு மீட்டர் இடைவெளிவிட்டு மோட்டார் சைக்கிளில் செல்லும் புலிகள் பாதையை அவதானித்துச் செல்வார்கள்.

ஜீப்பில் சாரதி ஆசனத்தின் பக்கத்தில்தான் விக்ரர் அமர்ந்து செல்வார் என்பதையும் தகவல் கொடுப்போர் மறக்காமல் கூறியிருந்தனர்.

நாயாற்றுவெளியில் உள்ள புதர்களுக்குள் மறைந்து நிலை எடுத்து விக்டருக்காக காத்திருந்தனர் இராணுவத்தினர்.

தூரத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வருவதையும், பின்னால் ஜீப் வருவதையும் இராணுவத்தினர் கண்டுவிட்டனர். நாயாற்று வெளியை சமீபித்து, அதனைக் கடக்கும்வரை காத்திருந்தனர்.

நாயாற்று வெளியின் மையப் பகுதியை ஜீப் வந்தடைந்ததும், இராணுவ அணித் தலைவர் கத்தினார்.

"சுடுங்கள், சுடுங்கள்"

எல்லாத் துப்பாக்கிகளும் ஒரே நேரத்தில் சட சடத்தன. குண்டுகள் ஜீப்பின் முன் கண்ணாடியைச் சிதறடித்தன. ஜீப் அந்த இடத்திலேயே நிறுத்தப்பட, ஜீப்பில் இருந்தவர்கள் மறுபுறம் நோக்கிப் பாய்ந்து தரையில் படுத்து நிலை எடுத்தனர்.

இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சமர் ஆரம்பித்தது.

ஜீப்பை நோக்கி படையினர் சுட்டனர் அல்லவா. ஆனால் அவர்கள் நினைத்ததுபோல விக்டர் அன்று ஜீப்பில் வரவில்லை.

ஜீப்பின் முன்பாக சென்ற இரண்டு மோட்டார் சைக்கிள்களில் ஒன்றை அன்று ஓட்டிச் சென்றது விக்ரர்தான்.

இராணுவத்தினர் விக்டரை மோட்டார் சைக்கிளில் எதிர்பாத்திருந்தால் அன்று விக்டரை சுலபமாகச் சுட்டுக்கொன்றிருப்பர்

வெடிச்சத்தம் கேட்டதுமே மோட்டார் சைக்கிளை நிறுத்திய விக்டர் அதனை அப்படியே போட்டுவிட்டு மறுபக்க புதருக்குள் மறைந்து கொண்டார்.

இராணுவத்தினருடன் சண்டையிட்டபடியே வோக்கி டோக்கி மூலம் தமது முகாமுக்கு செய்தி அனுப்பினார் விக்டர். ராதா தலைமையில் விரைந்த புலிகளின் அணி விக்டர் குழுவினரை மீட்டது.

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### பிரபாவின் முடிவு

இக் கட்டத்தில் இலங்கைப் பாராளுமன்றத்தில் 13வது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதனையொட்டிதாக மாகாண சபை சட்டமும் கொண்டுவரப்பட்டது.

இவை இரண்டுமே தமிழ் அமைப்புக்களின் கருத்தைக் கேட்காமல் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவால் தன்னிச்சையாக நிறைவேற்றப்பட்டதாக புலிகள் குற்றம் சாட்டினர்.

இவற்றுக்கு முன்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இந்திய மத்திய அரசின் அமைச்சரான சிதம்பரத்துடன் பேச்சு நடத்தியிருந்தனர்.

மாகாணசபை சட்டம் மற்றும் அரசியலமைப்புக்கான திருத்தச் சட்டங்களின் பிரதிகள் முதலில் இந்தியாவிடமும், பின்னர் தமிழ் அமைப்புக்களிடமும் சமர்ப்பிக்கப்பட்டு அவற்றின் சம்மதம் பெறப்பட்ட பின்னரே நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் சிதம்பரம் கூறியிருந்தார்.

ஆனால் இலங்கை அரசோ, ஜனாதிபதி ஜே.ஆரோ அவ்வாறு செய்யவில்லை. தமக்கு விரும்பிய வடிவத்தில் சட்டமாக்கியுள்ளனர். எனவே அவற்றை ஏற்கமுடியாது என்று புலிகள் கூறினார்கள்.

இந்திய அரசுடன் பேச்சு நடத்துவது தொடர்பாக புலிகள் முக்கிய முடிவொன்றையும் எடுத்திருந்தனர். இன்றுவரை அந்த முடிவைத்தான் இலங்கை அரசுடனான பேச்சுக்களிலும் பிரபாகரன் கடைப்பிடிக்கிறார்.

அது என்ன முடிவு?

"இனிமேல் நடக்கக்கூடிய பேச்சுவார்த்தைகளில் எக்கட்டத்திலும் பிரபாகரன் நேரடியாகப் பங்குகொள்ளமாட்டார். அவரின் பிரதிநிதிகளே பங்குகொள்வர்"

இந்திய-இலங்கை ஒப்பந்தம் தொடர்பாகப் பேசுவதற்காக டில்லிக்கு அழைக்கப்பட்டு, அங்கு இந்திய அரசால் நிர்ப்பந்தம் கொடுக்கப்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் பிரபாகரன் செய்த முடிவு அது.

ஆனால் அந்த நினைப்புக்கு நேர்மாறாக புலிகள் நிபந்தனைகளை விதித்துக் கொண்டிருந்தது இந்திய அரசுக்கு ஆச்சரியத்தை மட்டுமல்ல ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது.

### போதைப்பொருள் விற்பனை.

யாழ் குடாநாட்டில் புலிகளின் கட்டுப்பாடு தளர்ந்தபின்னர் போதைப் பொருள் விற்பனை, விபச்சாரம் போன்றவை தலைவிரித்தாடத் தொடங்கின.

இந்தியப்படை அதிகாரிகளுக்கு பெண்களை விநியோகம் செய்து சம்பாதிக்கும் மாமாக்களும் பெருகத் தொடங்கினர்.

இவற்றை தடுத்து நிறுத்த இந்தியப் படையுடன் இணைந்து நின்ற இயக்கங்கள் முன்வரவில்லை. அதுமட்டுமல்லாமல் சமூகவிரோத சக்திகள் என்று கருதப்பட்டவர்களே இயக்கங்களில் இணைந்த நிலையில் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் தார்மீக உரிமையையும் பல இயக்கங்கள் இழந்திருந்தன.

யாழ்குடாநாட்டில் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர்மீது புலிகள் குறிவைத்தனர்.

யாழ்நகரில் பலத்த பாதுகாப்புக்கு உட்பட்ட யாழ் முட்டாசுக்கடை சந்தியில் புவனேந்திரன் என்னும் மக்கள் விரோதி புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

புவனேந்திரன் ஒரு சண்டியராக இருந்தவர். 'விலாசம் காட்டுபவர்கள்' என்று குறிப்பிடப்படும் ஆட்களில் ஒருவர். இவர் யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்தவர் என்று ஞாபகம். போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டதாலேயே இவர் கொல்லப்பட்டார்.

1983ல் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இவரை தேடியது. ரமேஷ், சுபத்திரன் ஆகியோர் இவரைச் சுடச் சென்றபோது தப்பியோடி விட்டார். பின்னர் இந்தியப் படை காலத்தில் மறுபடியும் தனது வியாபாரத்தை ஆரம்பித்தார்.

### தேர்தல்

வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல் 1988 நவம்பரில் நடைபெறும் என்று திகதி குறித்தது இந்திய அரசாங்கம்.

அதன்பின்னர் நடந்த சங்கதிகள் அடுத்த வாரம்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது- இராஜதந்திரி

# நீண்ட பொறிக்குள் 'ஜயசிக் குறுய்'

# சந்திரிகா அரசின் உட்பூசலைப் பிரதிபலிக்கும் அமைச்சரவை மாற்றம்!



'ஈண் ஏற முழஞ்சறுக்கும்' என்பது போலவே தாண்டிக்குளத்தில் ஜயசிக்குறுய் (வெற்றி நிச்சயம்) துருப்பினர்மீது பலத்த அடி வீழ்ந்துள்ளது.

முற்றிலும் எதிர்பாராத இந்த அடியினால் இராணுவம் திக்குமுக்காடிப் போயுள்ளது.

வவுனியாவுக்கு வடக்கே தாண்டிக்குளத்திலிருந்து ஓமந்தைவரை 'ஜயசிக்குறுய்' படையினர் நகர்ந்திருந்தனர். இந்த நகர்வையே பெரும் இழப்புக்களுடனேயே அவர்களால் மேற்கொள்ள முடிந்தது.

இதன் பின்னர் ஆட்பற்றாக்குறை உட்பட தொடர்ந்து தமது நகர்வை மேற்கொள்வதில் படையினர் சிரமங்களை எதிர்நோக்கியிருந்த தருணத்திலேயே தாண்டிக்குளத்தில் அடி வீழ்ந்துள்ளது.

தாண்டிக்குளம் தாக்குதலின் மூலம் புலிகளின் கெரில்லாப் போர்த்திறன் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

உயிரிழப்புக்களை மட்டுமல்ல; ஆயுதக்கிடங்குகள், ஆயுததளபாடங்கள், வெடிமருந்துகள் என்பவற்றைக்கூட தாண்டிக்குளத்தில் தகர்த்தெறிந்து பெரும் பொருட்சேதமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தாண்டிக்குளத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து தொடர்ந்து தமது நகர்வை மேற்கொள்வது பற்றிக் கலக்கம் கொண்டவர்களாகவே படையினர் இருக்கின்றனர்.

**இந்நிலையில், வவுனியாவுக்கும் கிளிநொச்சிக்குமிடையிலான தரை வழிப்பாதையைத் திறப்பதென்பது, ஒரு நீண்ட மரணப்பொறிக்குள் இராணுவம் காலடி எடுத்து வைத்துள்ளதைக் குறிப்பதாகவே இருக்கின்றது.**

தாண்டிக்குளத்தில் புலிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கு ஒருநாள் முன்பதாகவே ஜனாதிபதி சந்திரிகாவின் அமைச்சரவையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டிருந்தன. சந்திரிகா அரசு பதவிக்குவந்த பின்னர் மேற்கொண்ட முதலாவது மாற்றங்களாகவும் இவை விளங்கியிருந்தன.

இம் மாற்றங்கள் சந்திரிகா அரசினுள் நிலவும் உட்பூசல்களையும் வெளிப்படுத்துபவையாக இருந்தன.

போக்குவரத்து, மகளிர் விவகார, சுற்றாடல் துறை அமைச்சராக இருந்த ஸ்ரீமணி அத்துலத்முதலியின் பதவி முற்றிலுமாகக் களையப்பட்டிருந்தது.

ஸ்ரீமணி அத்துலத்முதலி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக் கட்சியைச் சேர்ந்தவர். இவர் மீது எந்நேரமும் வெட்டு விழும் என்று ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஏனெனில் சந்திரிகா அரசாங்கத்தினுள் அங்கம் வகித்துக்கொண்டே அவ்வரசின் நடவடிக்கைகளை ஸ்ரீமணி விமர்ச்சித்து வரலானார்.

**ஆனால் தொழில் அமைச்சு, பொதுசனத்தொடர்புத்துறை அமைச்சுக்களைக் கொண்டிருந்த திரு.மஹிந்த ராஜபக்ஷ, திரு.தர்மசிறி சேனநாயக்கா போன்றவர்களிடமிருந்து மேற்படி அமைச்சுப் பொறுப்புக்கள் அகற்றப்பட்டமை அதிர்ச்சியைக் கொடுப்பதாக இருக்கின்றது.**

இந்த இருவருமே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் பிரதான தூண்களை ஒத்தவர்கள். திரு. தர்மசிறி சேனநாயக்கா, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளருமாவார்.

இந்நிலையில் முற்றுமுழுதாக திரு.மஹிந்த ராஜபக்ஷ, திரு. தர்மசிறி சேனநாயக்கா ஆகியோரது அமைச்சர் பதவிகள் களையப்படாவிட்டாலும் இருந்த பொறுப்புக்கள் வாபஸ் பெறப்பட்டும்.

புதிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுமுள்ளமை அரசுக்குள் நிலவும் குளறுபடியான தன்மையையே எடுத்துக்காட்டுகின்றது.

ஸ்ரீமணி அத்துலத்முதலி அமைச்சரவையில் இருந்தபோது, ஜனாதிபதி ஆட்சிமுறையை நிராகரிப்பவராகவே இருந்தார். அத்துடன் பாராளுமன்ற ஆட்சிமுறை மீண்டும் கொண்டுவரப்படவேண்டுமென்பதும் அவரது நிலைப்பாடாக இருந்தது.

சந்திரிகா அரசு பதவிக்குவருமுன்னர் முழுமூச்சோடு குறிப்பிட்டதே 'ஜனாதிபதி ஆட்சிமுறை' நீக்கமாகும். ஆனால் . தற்போது சந்திரிகா அரசு தனது ஆட்சிக்காலத்தில் ஏறத்தாழ அரைவாசிக் காலகட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளது. ஆயினும் ஜனாதிபதி ஆட்சியை நீக்குவது என்ற பேச்சுக்கே தற்போது இடமில்லாதிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

போர் நீடிப்பே, ஜனாதிபதி ஆட்சியையும் நீடிப்பதற்கான ஒரு காரணமாகக் காட்டப்படுகின்றது.

எனவே தற்போதைய நாட்டு நிலவரங்களைக் கூர்ந்து நோக்கும்போது, போரும் தணியப்போவதில்லை; ஜனாதிபதி ஆட்சிமுறையும் நீக்கப்படப்போவதில்லை என்பதே தெளிவாகியுள்ளது.

இலங்கையின் இன்றைய அரசியலைப் பொறுத்தவரை, வடக்கு-கிழக்கு யுத்தமே முழு நாட்டினதும் உறுதிப்பாட்டுக்குச் சவால் விடுவதாகவும் இருக்கின்றது.

**யுத்தம் நீடித்துச் செல்லும்வரை எத்தகைய பெரும்பான்மைப் பலத்துடன் தென்னிலங்கையில் ஆட்சியமைக்கப்பட்டாலும், அதனால் எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை என்பதும் தெளிவாகியுள்ளது.**

இந்நிலையில், அமைச்சரவை மாற்றம் மட்டுமல்ல, இன்றைய அரசைக் கலைத்துவிட்டு தேர்தலை நடத்திப் புதிய ஆட்சியொன்றைக் கொண்டுவந்தால் கூட, போர் இருக்கும்வரை நாட்டின் விமோசனம் கேள்விக்குறியாகவே இருக்கும்.

தற்போது இடம்பெற்றுள்ள அமைச்சரவை மாற்றம், மற்றும் வவுனியாவுக்கு வடக்கே இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகள் என்பன, சந்திரிகா அரசின் கடந்த இரண்டரை வருடகால ஆட்சியை எடைபோடச் செய்வதாகவும் காணப்படுகின்றன.

**ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி, தனது தேர்தல் பிரசாரத்தின்போது வடக்கு-கிழக்கு நிலபரத்தை ஐக்கியதேசியக் கட்சி அரசு கையாளும் முறையைக் கடுமையாக விமர்ச்சித்திருந்தது.**

யுத்தத்தை நிறுத்தி, சமாதானத்தை ஏற்படுத்துவதே தமது முதல் பணியாக இருக்குமெனவும் பொதுஜன ஐக்கிய முன்னணியினர் தெரிவித்திருந்தனர்.

பதவிக்கு வந்ததும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப்பேச்சுக்கள் நடத்தப்பட்டன. ஆனால் இரு தரப்புமே எவ்வளவு தூரம் அப்பேச்சுக்களை நேர்மையான முறையில் மேற்கொண்டன என்பது கேள்விக்குரியதாகவே இருந்தது.

புலிகளுடனான பேச்சுக்கள் என்பதைவிட, இருதரப்பினருக்குமிடையிலா உத்தியோகப்பற்றற்ற சந்திப்புக்கள் என்று மட்டுமே அவற்றைக் குறிப்பிட முடியும்.

அச் சந்திப்புக்களில்கூட காலதாமதங்கள் நிலவியதைக் காரணம் காட்டியே புலிகள் ஒருதலைப்பட்சமாக சந்திரிகா அரசுடன் செய்துகொண்ட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை முறித்துக்கொண்டனர்.

அதன்பின்னர் தொடங்கிய போர், இன்றுவரை ஒரு தொடர்கதையாகச் சென்று கொண்டிருப்பதையே காணமுடிகின்றது.

எனவே சமாதானம்பற்றி மிகவும் இடித்துரைத்த பொதுஜன ஐக்கிய முன்னணி இன்று அச்சமாதானத்தை ஏற்படுத்தவும், அதற்குச் சவால் விடும் புலிகளுடன் சமரசத்தை ஏற்படுத்தவும் தவறியிருப்பதையே காணமுடிகின்றது.

இதேவேளை தென்னிலங்கையின் அரசியல் நிலவரங்களை எடுத்து நோக்குகையில், கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற பல்வேறு முறைகேடுகள், அசம்பாவிதங்கள் தொடர்பாக ஏராளமான ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன.

**ஆனால் இந்த ஆணைக்குழு விசாரணைகளின் தற்போதைய நிலைபற்றி எதுவுமே தெரியாதுள்ளது. அத்துடன் நடந்து முடிந்த விசாரணைக் கமிஷன்கள் கொடுத்த அறிக்கைகளின் அடிப்படையில் எவ்வித பயனுள்ள நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை.**

இதன்மூலம் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் என்ற ரீதியில் 'கண்கட்டிவித்தைகள்' இடம்பெற்றுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக போரினால் குட்டிச்சுவராகிவரும் நாட்டுநிலவரம்பற்றி ஆட்சியிலிருப்போர் நன்கு அறிந்து வைத்துள்ளனர். ஆனால் கடந்த இரண்டரை வருடகாலத்திலேயே எப்போதும் இல்லாததைப்போல பெருமளவு பணம் யுத்தத்துக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள், பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுக்கு நாட்டு மக்களின் நிலைப்பாட்டை அறிய வாய்ப்பளித்திருந்தன.

கடந்த பொதுத்தேர்தல், ஜனாதிபதித்தேர்தல் என்பவற்றில் போலவே மீண்டும் அரசியல் அணுகுமுறைகளை உள்ளூராட்சிசபைத் தேர்தல்களின்போதும் மக்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இந்நிலையில், சந்திரிகா அரசில் மேலும் மாற்றங்கள் வரலாம்; ஆட்சியிலிருப்போரிடையே கருத்து மோதல்கள் கூட வலுவடையலாம்.

**ஆனால் முழு நாடுமே, யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அரசியல் தீர்வொன்று நிலைநிறுத்தப்படுவதையே எதிர்பார்த்திருக்கின்றது**

இந்த எதிர்பார்ப்பை இதுவரை சந்திரிகா அரசு பூர்த்திசெய்யத் தவறியுள்ளது. எதிர்காலத்திலும் அதனைப் பூர்த்தி செய்வதற்கான அறிகுறி எதுவும் தென்படாதிருப்பதையே காணமுடிகின்றது.

# மற்றொரு சதுரங்கம்



அடுத்த பொதுத்தேர்தல் இன்னமும் இரண்டு வருடத்தில் ஓடோடி வந்துவிடும்.

பொதுத் தேர்தலில் திருவாளர் பொது ஜனத்தைச் சந்திக்க அரசின் கையில் உள்ள ஒரே ஒரு மூலதனம்: 'புலிகளை எதிர்த்து வீரமாகப் போரிட்ட அரசு' என்ற பெருமைதான்.

எனவே இழப்புக்கள், பின்னடைவுகள் வந்தாலும் இராணுவ நடவடிக்கைகளை தொடர்வது, கைப்பற்றிய பகுதிகளை தக்கவைப்பது என்பவற்றை போர்க்களத்தில் அரசு தொடரவே விரும்புகிறது.

அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்பாக புலிகளுடன் பேச்சு நடத்தினால் என்னாகும்? இப்போது தன் கையில் இருக்கும் மூலதனமான 'புலிகளுக்கு எதிராக வீரமாகப் போரிடும் அரசு' என்ற பெயரையும் இழக்கவேண்டியிருக்கும்.

அதனை இழக்க வேண்டுமானால் வேறொரு மூலதனம் கிடைக்க வேண்டும்.

அது என்ன மூலதனம்?

'புலிகளுடன் பேச்சு நடத்தி போரை முடிவுக்கு கொண்டுவந்தாகிவிட்டது. இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வைக் கண்டாகிவிட்டது. இலங்கை வரலாற்றில் இந்தச் சாதனையை செய்து முடித்தவர் ஜனாதிபதி சந்திரிக்காதான்' என்ற கட்டத்தை எட்டுவதுதான் அந்த மூலதனம்.

அப்படிச் செய்வது என்றால் இரண்டுவிதமாகச் செய்யலாம்.

**ஒன்று: இராணுவ அழுத்தம் மூலமாக புலிகளின் கழுத்தை நெரித்து பேச்சு மேசைக்கு கொண்டுவருவது. அரசு கொடுப்பதை பெறும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்குவது.**

**இரண்டு: புலிகளுடன் பரஸ்பர விட்டுக்கொடுப்பு அடிப்படையில் மனம் திறந்து பேசி நியாயமான அரசியல் தீர்வொன்றை காண்பது. அதாவது தற்போது முன்வைத்துள்ள அரசியல் தீர்வு யோசனைகளுக்கும் மேலான ஒரு தீர்வை, வடக்கு-கிழக்கு ஒரே அரசியல் நிர்வாக அலகு என்ற அடிப்படையில் நியாயமான அதிகாரப் பகிர்வுடனான தீர்வை முன்வைப்பது.**

இந்த இரண்டுமே சாத்தியப்படக்கூடிய விடயங்கள் அல்ல.

அழுத்தங்கள், நெருக்கடியான சூழல்கள் என்பவற்றுக்கு எதிரான வியூகங்களை வகுப்பதில்தான் புலிகள் கவனம் செலுத்துவார்களே தவிர, அத்தகைய அழுத்தங்களைக் கண்டு பணிந்து போகும் சரணடையும் போக்கை நாடமாட்டார்கள்.

இரண்டாவது வழி நியாயமான தீர்வு. போரிடுவதைவிட அரசுக்கு கடினமான காரியம் அதுதான்.

தானே முன்வைத்த அரசியல் தீர்வு யோசனையில்கூட பல விடயங்களை கைவிட்டு விட்டது ஆளும் தரப்பு. இந்நிலையில் தற்போதுள்ள தீர்வு யோசனைகளைவிட கூடுதலாக கொடுப்பதுபற்றி சிந்திக்கவே அரசு தயாராக இல்லை.

இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு தேவைப்படுவது தமிழ் பேசும் மக்களுக்குத்தான். ஆனால் காலம் காலமாக பெரும்பான்மை கட்சிகள் கையாளும் கையாண்டுவரும் அணுகுமுறை அடிப்படையிலேயே தவறானது. ஆனால் அரசியல் லாபங்களுக்காக அந்த தவறை செய்தேயாகவேண்டிய நிலையில்தான் இன்றைய ஆளும் தரப்பும் இருக்கிறது. எதிர்க்கட்சியும் இருக்கிறது.

அது என்ன தவறான அணுகுமுறை? **தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கு தீர்வுகாண சிங்கள மக்களை திருப்தி செய்யும் தீர்வை தேடுவதுதான் அது.**

ஆனால் ஒன்று: ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும் ஒன்றுபடாதவரை ஆகக் குறைந்த பட்ச அரசியல் தீர்வை வழங்கினால்கூட சிங்கள மக்களுக்கு விரோதமான தீர்வாக அதனை பிரசாரம் செய்ய எதிர்த்தரப்பால் முடியும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்போது சிறீலங்கா சுதந்திரக்கட்சி அதனைத்தான் செய்தது. தனது சொந்த அரசியல் இலாபத்துக்காக இந்தியாவுடனான தனது கட்சியின் நீண்டகால நட்புறவைக்கூட தாரைவார்க்க முன்வந்தது.

எனவே உள்நாட்டு அரசியலில் அடுத்த தேர்தலில் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவது யார் என்ற பலப்பரீட்சைக்கு காலம் நெருங்கி வரும் இன்றைய சூழலில் ஆளும்தரப்பும், எதிர்தரப்பும் ஒன்றையொன்று வெட்டி ஆடுவதிலேயே குறியாக உள்ளன.

தற்போதைய நிலையில் உள்நாட்டில் இரணுவ நடவடிக்கையை தொடர்ந்தபடியே, வெளியுலகில் இருந்து இராணுவ நடவடிக்

## பிரிட்டனின் நல்லெண்ண முயற்சி

கையை நிறுத்தும் அழுத்தம் வராமல் பார்த்துக் கொள்வதுதான் அரசின் நோக்கம்.

எதிர்க்கட்சியைப் பொறுத்தவரை, அரசியல் தீர்வு மூலமோ, அல்லது இராணுவத் தீர்வு மூலமோ ஆளும்தரப்பு வெற்றி பெற்றுவிடக் கூடாது என்பதுதான் பிரதான நோக்கம்.

எதிர்க்கட்சியின் நோக்கம் அதுதான் என்பது அரசுக்கும் தெளிவாகத் தெரியும். அதனால்தான் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் தந்திரத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் காய் நகர்த்துகிறது அரசாங்கம்.

அதில் ஒரு கட்டம்தான் 'பொக்ஸ்' மூலம் நடந்த நாடகம். இப்போது கட்டம் இரண்டு, பிரிட்டிஷ் அரசின் நல்லெண்ண முயற்சியை நாடுவதுபோலக் காய் நகர்த்தப்படுகிறது.

சோழியன் குடுமி சும்மா ஆடுமா? பிரிட்டிஷ் பொதுத்தேர்தலில் கன்சர்வேட்டில் கட்சிக்கு அரசியல் இலாபம் கிடைக்கக்கூடியவகையில் லியாம் பொக்ஸுக்கு ஒரு வாய்ப்பு வழங்கியது இலங்கை அரசு.

ஆனாலும் தொழிற்கட்சியே தேர்தலில் வென்றது. அதுமட்டுமல்லாமல் தொழிற்கட்சி அரசின் இன்றைய வெளிநாட்டமைச்சர் புலிகள் இயக்கத்தினருடன் முன்னர் தொடர்பாக இருந்தவர். புலிகள் இயக்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்திலும் கலந்துகொண்டு பேசியவர்.

இதெல்லாம் அரசுக்கு அதிர்ச்சியான விடயங்கள்தான். தேர்தல் நேரத்தில் லியாம் பொக்ஸை பிரபலமாக்கி, கன்சர்வேட்டில் கட்சிக்கு சர்வதேச விவகாரங்களில் கில்லாடியான கட்சி என்னும் இமேஜ் ஏற்படுத்த இலங்கை அரசும் முயன்றது என்று தொழிற்கட்சி அரசு கோபப்படக்கூடும் என இலங்கை அரசு நினைத்திருக்கலாம்.

அதுமட்டுமல்லாமல், பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சருடன் தமக்குள்ள உறவு மூலமாக புலிகள் புதிய பிரிட்டிஷ் அரசை கைக்குள் போட்டுக் கொள்ளக்கூடும். சர்வதேச மத்தியஸ்தராக செயற்படத் தயார் என்று பிரிட்டிஷ் அரசே உத்தியோக பூர்வமாக அறிவித்துவிட்டால் இலங்கை அரசு பாடு திண்டாட்டமாகிவிடலாம்.

**அதனால்தான் புலிகள் இராஜதந்திரத்தில் முந்திக் கொள்ள முன்னர் அரசு முந்திக்கொண்டது.**

லியாம் பொக்ஸை அழைத்தது நல்ல நோக்கத்தில்தான். இன்றைய பிரிட்டிஷ் அரசும் நல்லெண்ண முயற்சியை செய்யலாம். செய்யவேண்டும் என்று கோரியது மூலம் காயை நகர்த்தியது அரசு. பிரிட்டிஷ் அரசை தாஜா பண்ணும் முயற்சி தான் இது. எதிர்க்கட்சித் தலைவரை பிரிட்டிஷ் அரசு அழைத்துப் பேசியதும்கூட இலங்கை அரசின் தூண்டுதலால் தான். அவ்வாறு தூண்டுதல், விருப்பம் என்பவை பெறப்படாமல் பிரிட்டிஷ் அரசு தன்னிச்சையாகச் செய்திருந்தால் அது உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவது போன்றதாகி இருக்கும்.

பதவி ஏற்ற சூட்டுடன் இன்னொரு நாட்டின் உள்விவகாரத்தில் பகிரங்கமாக தலையிட பிரிட்டிஷ் அரசும் முன்வராது. எனவே ரணில் பிரிட்டனுக்கு அழைக்கப்பட்டது இலங்கை அரசின் பூரண சம்மதத்துடன்தான் என்பது தெளிவு.

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரிட்டனுக்கு ரணில் செல்ல முன்பாகச் சென்று பேச்சு நடத்தியதும் அதற்குச் சான்று.

இதன்மூலம் அரசு சாதிக்க விரும்புவது என்ன? அவை பின்வருமாறு:

**1. பிரிட்டிஷ் அரசுடன் புலிகள் இராஜதந்திர ரீதியான நகர்வுகளை மேற்கொள்ளாமல் தடுப்பது. அதாவது எதிரிக்கு நண்பனாகிவிடாமல் தானே முந்திக்கொண்டு நண்பனாக்குவது.**

**2. பிரிட்டிஷ் அரசு நல்லெண்ண முயற்சிகளில் ஈடுபடுவது பகிரங்கமான விடயமாக மாறினால், புலிகளின் வெளிநாட்டு மத்தியஸ்த கோரிக்கைக்கு வேறு நாடுகள் எதுவும் உடனடியாக செவிசாய்க்கமாட்டாது.**

**3. ஆளும் தரப்பு- எதிர்த்தரப்பு-தமிழ்க்கட்சிகள் மத்தியில் புரிந்துணர்வு ஏற்பட்டு அரசியல் தீர்வு காணும் சூழல் கனிந்து வருவதாகக் காட்டுவது.**

சர்வதேச மத்தியஸ்தம் என்பதும், நல்லெண்ண முயற்சியும் ஒன்றல்ல என்பதையும் மறந்துவிடக்கூடாது.

பிரிட்டிஷ் பிரதமரின் தூதராக திரு.நிம்மா் இலங்கை வந்து தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகளை சந்திக்கவும் அரசு பச்சைக்கொடி காட்டியிருக்கிறது.

ரணில் விஜயம், லக்ஷ்மன் கதிர்காமர் விஜயம், பிரிட்டிஷ் பிரதிநிதி வருகை போன்றவை மீண்டும் பரபரப்பான செய்திகள்தான். பரபரப்புத் தேடும் செய்தி உலகம் இவற்றுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கும். இந்த பரபரப்புக்கு இடையே உண்மைகள் ஓரம் கட்டப்படலாம். தீர்வு தொலைதூரம் போகலாம்.

இந்த நேரத்தில் தமிழ்க் கட்சிகள் முயன்றால் ஒன்று செய்யலாம்: பிரிட்டிஷ் பிரதிநிதியிடம், 'எங்களுக்கு தீர்வு யோசனைகள் தொடர்பாக திருப்தி இல்லை. சுற்றி வளைத்து மூக்கைத் தொடுவானேன். வெளிநாட்டு மத்தியஸ்தம் முன்பாக அரசியல் தீர்வு பேச்சை **ஆரம்பிக்க அரசு முன்வரவேண்டும்' என்று கூறலாம். அப்படிக் கூற தமிழ்க் கட்சிகள் முன்வரமாட்டா என்ற நம்பிக்கையில்தான் அவற்றைச் சந்திக்கும் முயற்சிக்கு அரசு பச்சைக் கொடி காட்டியிருக்கிறது.**

பேர்க்களத்தில் தான் நினைப்பதை அரசு சாதிக்க புலிகளின் பலம் தடையாக இருக்கிறது. ஆனால் அரசியல் களத்தில் தமிழ்த் தரப்பு பலவீனமாக இருப்பதும், தமிழ்க்கட்சிகள் அரசு கீறும் கோட்டுக்குள் நிற்பதும் அரசின் காய் நகர்த்தல்களுக்கு சாதகமாக உள்ள காரணிகளில் முக்கியமானவையாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி

## பூலான் தேவி

பாகம் 02

49

தருவது ரசிகன்



ஜான்சியில் மல்லா காட்டிய வீட்டின் கதவைத் தட்டிய பூலான், கதவைத் திறந்தவரின் முகம் பார்த்ததும் அதிர்ந்து நின்றாள். சற்றுப் பின்னடைந்து தனக்குப் பின்னால் நின்ற மல்லாவையும், கதவைத்திறந்தவரையும் மாறிமாறிப் பார்த்தாள்.

மல்லாவுக்கு பூலானின் திகைப்புக் கான காரணம் புரிந்திருக்கவேண்டும். அவன் உதட்டில் புன்னகை அமர்ந்திருந்தது.

கதவைத் திறந்தது ராம்லால். மல்லாவின் மூத்த சகோதரர். அசப்பில் மல்லாவைப்போலவே இருந்தார். சற்றே உற்று நோக்கினால்தான் இருவருக்கும் இடையே உள்ள வித்தியாசம் தெரியும்.

பூலானை யார் என்று தெரியாததால் கண்களில் கேள்விக்குறியுடன் பார்த்த ராம்லால், அவளுக்கு பின்னால் நின்ற மல்லாவைக் கண்டதும் முகம் மலர்ந்தார்.

"உள்ளே வாருங்கள்," என்றார். குரல் மல்லாவைப்போல் இல்லாமல் கரகரப்பாக இருந்தது.

முதலில் திகைத்தாலும் பின்னர் சுதாரிகரித்துக் கொண்ட பூலானுக்கு தன் எதிரே நிற்பது மல்லாவின் சகோதரர்தான் என்று ஊகிப்பதில் கஷ்டமிருக்கவில்லை.

"என் அண்ணாதான்! பெயர் ராம்லால். உள்ளே போ பூலான். வா வேரா!" மல்லாவும் உள்ளே சென்று அமர, பூலானும் வேராவும் நின்று கொண்டிருந்தனர்.

ராம்லாலின் மனைவி வந்து பூலானைப் பார்த்து புன்னகைத்தாள். பரஸ்பர அறிமுகங்கள் முடிந்தபின் மல்லா தான் அங்கு வந்த காரணத்தைச் சொன்னான்.

ராம்லால் யோசித்தார்.

"உனக்குப் பிரச்சனை என்றால் வேண்டாம் அண்ணா. நான் வேறிடத்தில்..."

"நான் அப்படிச் சொன்னேனா?"

"இல்லை...நீ யோசிப்பதை...."

"சேச்சே... எந்த டாக்டரை நம்பி விஷயத்தைச் சொல்வது என்றுதான் யோசிக்கிறேன்....ம்...சரி... நீங்கள் சாப்பிட்டுவிட்டு இருங்கள். நான் வெளியே போய்வருகிறேன்." ராம்லால் புறப்படத் தயாரானார்.

மல்லா கேட்டான்,

"டாக்டரிடம் உண்மையைச் சொல்லப் போகிறாயா அண்ணா?"

"வேண்டாமா?"

"எப்படி நம்புவது?"

"அதுவும் சரிதான். ஆனால் காரணம் சொல்லவேண்டுமே.... என்ன சொல்லலாம்?" ராம்லால் கேட்க மல்லாவும் யோசித்தான். பூலான் குறுக்கிட்டாள்.

"நான் ஒரு யோசனை சொல்லலாமா?" என்று கேட்டாள் தயங்கித் தயங்கி.

மல்லா சிரித்து, "சொல்லேன், யார் வேண்டாம் என்றோம்?"

"குடும்பச் சண்டையொன்றில் உங்களை அண்ணா சுட்டுவிட்டார். பொலிசுக்குப் போகவிரும்பவில்லை?"

"ஏன் விரும்பவில்லை?" என்றான் மல்லா குறுக்கிட்டு.

"குடும்பச் சண்டை; கோட்டுக்குப் போவதை விரும்பவில்லை!" என்றாள் பூலான்.

மல்லா தன்னை மறந்து, "ஆஹா அருமையான யோசனை!" என்று கிட்டத்தட்ட கூறியேவிட்டான்.

ராம்லால் பூலானை மதிப்புடன் நோக்கினார். "சரியான யோசனைதான்!" என்று வாய்விட்டே சொல்லிக்கொண்டே போய்விட்டார்.

சமையலின்போது ராம்லாலின் மனைவிக்கு உதவினாள் பூலான். கான்பூருக்கு புறப்பட்டபோதே தன் சீருடைக்கு விடைகொடுத்திருந்தாள் பூலான்.

"அம்மாடி உனக்கு எப்படி இந்த மாதிரி யோசனைகள் எல்லாம் வருகின்றன? ஆண்பிள்ளைகள்கூட தடுமாறிக் கொண்டிருந்தார்கள். நீ படக்குப் படக்கென்று சொல்லிவிட்டாயே யோசனை!" என்றாள் ராம்லாலின் மனைவி.

"எல்லாம் அனுபவம்தான்."

"உனக்குப் பயமில்லையா?" என்று கேட்டாள் பூலானை, ஆச்சரியமாகப் பார்த்துக்கொண்டே, ராம்லாலின் மனைவி.

பூலான் சொன்னாள்:

"பூனைகூட புலியாக மாறும். மாறியது பூனையின் பிழையில்லை, பூனையை புழுவாய் நினைத்த கூட்டத்தின் பிழை!" பூலானின் குரலில் இருந்த ஆவேசத்தை உணர்ந்த ராம்லாலின் மனைவி அதன் பின்னர் பூலானின் வாயைக் கிளறவே பயந்தாள்.

ராம்லால் ஒரு டாக்டரை அழைத்து வந்தார். மல்லாவின் காயத்தை பரிசோதித்த டாக்டர் குண்டை வெளியே எடுக்க சத்திரசிகிச்சை கட்டாயம் செய்தாக வேண்டும் என்றார்.

"பரவாயில்லை டாக்டர்," என்ற பூலானை "நீங்கள் யார்?" என்று கேட்டார் டாக்டர்.

"நான் அவர் மனைவி ரமாபாய்!" என்ற பூலானை, டாக்டருக்குத் தெரியாமல் கண்களால் பாராட்டினான் மல்லா.

சத்திரசிகிச்சைக்காக டாக்டர் சொன்ன தொகையைக் கேட்க ராம்லாலுக்கு தலை சுற்றியது.

"ஒரு இலட்சம் ரூபாய் தேவை. இது ஆபத்தான விவகாரம். பொலிசுக்குத் தெரிந்தால் என்னையும் பிடித்து உள்ளே தள்ளுவார்கள். என்ன பணம் இருக்கிறதா?"

"ம்... தருகிறோம்." என்றான் மல்லா.

பூலான் பணக்கட்டைக் கொண்டுவந்து டாக்டரிடம் கொடுத்தாள். அவர் முகம் பிரகாசமானது.

'சத்திரசிகிச்சை முடிந்ததும் கொடுத்த பணத்தை எம் சுயரூபத்தைக் காட்டிப் பறித்தால் என்ன செய்வார் இந்த டாக்டர்?' என்று நினைத்தாள் பூலான். 'இப்போது வெட்டொன்று துண்டுரெண்டு எனக் கறாராகப் பேசும் இவர், எம் சுயரூபம் காட்டினால் எப்படியெல்லாம் வெடவெடத்துப் போவார்!' என்று நினைக்க பூலானுக்குச் சிரிப்பாக இருந்தது.

வாடகைக்கு ஒரு மோட்டார்காரை பிடித்துவந்தார் டாக்டர். மல்லாவும் பூலான், வேரா, ராம்லால் ஆகியோரும் அக்காரில் நெருக்கியடித்து அமர்ந்து சென்றார்கள்.

ஜான்சி நகருக்கு வெளியே நான்குமைல் தூரத்தில் இருந்த கிராமம் ஒன்றுக்கு அவர்களைக் கூட்டிச் சென்றார் டாக்டர்.

அங்கே பூட்டிக்கிடந்த ஒரு பழைய வீட்டில் அவர்களைத் தங்கவைத்துவிட்டு, சத்திரசிகிச்சை உபகரணங்களை எடுத்துவருவதாகக் கூறிச் சென்றுவிட்டார்.

"எனக்கென்னவோ அந்த டாக்டர் எங்களை, நாங்கள் சொன்னதை நம்பியதுபோல தெரியவில்லை." என்று கூறினாள் பூலான்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"அந்த மனுசனின் பார்வையே நல்லாயில்லை."

"வழக்கமான பார்வையே அப்படித்தானாக்கும்- விடு!" என்றான் மல்லா. ஆனால் டாக்டர் திரும்பி வருவது காலதாமதமாகிக் கொண்டிருந்தது. பூலானின் சந்தேகம் சரிதான் போலிருக்கிறது என்று மல்லா நினைத்தான்.

"இங்கிருந்து புறப்பட்டுப் போய்விடலாம். இல்லாவிட்டால் வசமாகச் சிக்கிவிடுவோம்!" என்றான் மல்லா.

"பொறு! எங்கள் அவசரம் எங்களுக்கு. டாக்டரை எப்படி உடனே சந்தேகிக்க முடியும்? அப்படி எங்களைப் பிடித்துக் கொடுப்பதானால் வீட்டில் வைத்தே அதனைச் செய்திருப்பார் அல்லவா?" என்றார் ராம்லால்.

பூலானும் ராம்லால் சொன்னதில் உண்மை இருப்பதை உணர்ந்து அதனை ஆமோதித்தாள். மல்லா தன் முடிவை மாற்றிக்கொண்டான்.

இரவுதான் டாக்டர் திரும்பிவந்தார். சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. குண்டை வெளியே எடுத்தாகிவிட்டது.

"மேலும் முப்பதாயிரம் தேவை. பணம் இருந்தால்தான் மருந்துகள் வாங்கமுடியும்," என்ற டாக்டரை, அந்த இடத்தில் வைத்தே சுட்டுவிடலாம் போலிருந்தது பூலானுக்கு.

'எரிகிற வீட்டில் பிடுங்குவது இலாபம்' என டாக்டர் நினைக்கிறார். ஆனால் வேறு வழியும் இல்லை என்பதால் இருந்த பணத்தையெல்லாம் திரட்டிக்கொடுத்தாள் பூலான்.

ஒரு வாரம்வரை அந்த வீட்டிலேயே தங்கி இருக்குமாறு டாக்டர் கூறியதால் அங்கேயே இருந்தனர். ராம்லால் மட்டும் ஜான்சி போய் மனைவியைப் பார்த்துவிட்டு வந்தார்.

ராம்லால் வரும்போது மற்றொரு செய்தியும் அவர் கூடவே வந்தது.

**கடந்த வாரம்**

**ஸ்ரீ ராம் மல்லாவைத் தீர்த்துக்கட்ட சதி செய்கிறான். அவனது உறவினரான மஹாவீர் என்பவன் மல்லாவைச் சுடுகிறான். மல்லாவின் தொடையில் வெடிபடுகிறது. ஸ்ரீ ராம் தனக்கு எதுவும் தெரியாததுபோல நடிக்கிறான். பின்னர் மல்லாவுக்கு சிகிச்சைசெய்ய மல்லாவுடன் பூலானும் வேராவும் கான்பூர் செல்கின்றனர். இனி...**

அச் செய்தி பத்திரிகையில் இருந்தது. ராம்லாலே அதனை உரத்து வாசித்தார்.

'பிரபல கொள்ளைக்காரன் விக்கிரம் மல்லா விபத்தில் பலியானான். அவனுடன் இருந்த காதலியும் கொள்ளைக்காரியுமான பூலான் தேவியும் விபத்தில் பலியானாள்.'

"என்ன...என்ன...?" என்றாள் பூலான்.

"இதெல்லாம் சகஜம்," என்றார் ராம்லால். மல்லா புன்னகைத்தான்.

முதன் முதலாக பூலான் பற்றி பத்திரிகைகளில் செய்தி வந்தது அப்போதுதான்.

"இப்போது உன் பெயர் எத்தனை ஆயிரம் பேருக்குத் தெரியவந்திருக்கும் தெரியுமா? இனிமேல் உன் பெயரைக் கேட்டால் எல்லோரும் நடுங்கப்போகிறார்கள்," என்று கூறியபடி தனிமையில் அவளை தன் மார்மீது சாய்த்துக் கொண்டான் மல்லா.

பூலான் செய்தி வந்த பத்திரிகையைப் பார்த்தாள். தன் பெயர் முதன்முதலாக அதிலே இடம்பெற்றிருக்கிறது என்று நினைக்க பெருமையாக இருந்தது.

தன்னால் அதனைப் படிக்க முடியவில்லையே என்று நினைக்கையில் பூலானை வேதனை பிடுங்கித்தின்றது. தன்னை ஒழுங்காகப் படிக்கவைக்காத பெற்றோர்மீது கோபம் வந்தது.

எழுத்துக்கள்மீது தன் விரல்களால் வருடிப்பார்த்தாள். அதிலே பூலான் என்று எங்கே போட்டிருக்கிறார்கள், மல்லா என்று எங்கே போட்டிருக்கிறார்கள், என்பது தெரியாமல் பத்திரிகையைத் தன்மார்போடு அணைத்துக் கொண்டாள்.

மல்லாவிடம் பத்திரிகையை நீட்டி, "இதிலே உன் பெயர் எது என் பெயர் எது?"

மல்லாவின் கண்களில் கனிவு தெரிந்தது. விரல்களால் தொட்டுக் காட்டியவன், பத்திரிகையைப் பறித்து பூலான் தேவி என்றிருந்த எழுத்துக்கள்மீது தன் உதட்டை ஒற்றி எடுத்தான்.

உடனே அவனிடமிருந்து பத்திரிகையைப் பறித்த பூலான் மல்லா என்றிருந்த எழுத்துக்கள்மீது தன் உதடுகளைப் பதித்துவிட்டு கலகலவென்று சிரித்தாள்.

"எனக்கில்லையா?" என்றான் மல்லா. பூலானின் இடைவளைவில் விரல்களால் கிள்ளினான்.

"இந்தா!" சட்டென்று குனிந்து அவன் உதடுகளைக் கவ்வியவள், விடுவிக்க முன்னர் உதடுகளை ஒரு கடிகடித்துவிட்டுத்தான் விட்டாள்.

மல்லா அவளை வளைத்து கைகளை பரவவிட, "உங்கள் அண்ணா வருகிறார்." என்று மிரட்டி விடுபட்டு நழுவி ஓடிவிட்டாள் பூலான்.

மறுநாள் வந்த டாக்டர் முதலில் கேட்ட கேள்வியே மல்லாவையும் ஏனையோரையும் தூக்கிவாரிப்போட்டது.

போதாக்குறைக்கு டாக்டரின் கையில் இருந்தது பூலான்-மல்லா செய்தி வெளியான அதே பத்திரிகை.

இதுவரை மல்லாவிடம் அவர் பெயர் கேட்டதில்லை. இப்போதுதான் முதல் தடவையாக கேட்டார்:

"உன் பெயர் என்ன?" மல்லா அதிர்ச்சியை முகத்தில் காட்டாமல்-, "ஸ்ரீராம்" என்றான்.

மல்லா சொன்னதை டாக்டர் நம்பவில்லை என்பதை அவர் கண்கள் காட்டிக் கொடுத்தன.

"ஏன் நீ விக்கிரம் மல்லாவாக இருக்கக் கூடாது?" என்றார் டாக்டர்.

மல்லா இதற்கெல்லாம் தயாராக இருந்தவன்போல "விக்கிரம் மல்லாவா- யார் டாக்டர் அது?" என்றான் அப்பாவியாக.

டாக்டர் நம்பியதாகத் தெரியவில்லை. பூலானை நோக்கினார். அவரது பார்வையில் இப்போது கண்ணியம் இல்லை.

"உன்னோடு தனியாகப் பேசவேண்டும்!" என்றார் பூலானிடம்.

டாக்டரின் பின்னால் சென்ற பூலான் தன் மார்புச் சேலையை ஒரு ஒரமாக்கினாள். தன் எடுப்பான கவர்ச்சிப் பிரதேசங்கள் டாக்டரின் கண்களுக்குத் தெரியவேண்டும் என்று விரும்பினாள்.

மல்லாவைக் காப்பாற்றவேண்டும்! டாக்டரை ஏமாற்றவேண்டும்!

அறைக்குள் சென்ற டாக்டர் பூலானை நோக்கி திரும்பியபோது சபலம் அவர் மூளைக்குள் நிரம்பியது. ஆசை அவர் கண்களில் தழும்பியது. அடுத்து நடந்ததோ நாடகம்.

(தொடர்ந்து வரும்)

## மடோனா ஆராய்ச்சி



அவரது ஆட்டத்தைக் காண இளசுகள் முதல் பெரிசுகள்வரை தவம்கிடப்பார்கள். எல்லாம் நளினம்தான். ஒவ்வோர் அசைவும் ஒரு கதை சொல்லும். அவர்தான் மடோனா.

மடோனாவா? மூடு கதவை என்று சில நாடுகள் அவரது நடனநிகழ்ச்சிகளுக்கு கடும் தடைபோட்டுக்கொண்டிருக்கின்றன. ஆபாசம் என்று முகம் சுளிக்கின்றன, அந்த நாடுகள்.

ஆனால் மடோனா அமெரிக்காவின் பல்கலைக்கழகத்துக்குள் புகுந்துவிட்டார். பேராசிரியர்களும் மாணவர்களும் அவரை ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கின்றனர்.

அதாகப்பட்டது, அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் 'பொப் பாடகி மடோனா' என்ற தலைப்பில் ஒரு பாடம் சேர்க்கப்பட்டிருக்கிறது. பட்டப்படிப்பு படிக்கும் மூன்றாவது ஆண்டு மாணவர்களுக்கு அது ஒரு பாடம். மடோனாவின் பாடல்களும் அப்பாடத்தில் உண்டாம். மாணவர்களுக்கு உற்சாகமளிக்கும் டெக்னிக்கோ தெரியவில்லை!

## சுதந்திரம் இல்லையே!



பிரபலங்களின் பிள்ளைகளுக்கு என்ன குறைச்சல் என்று பெருமூச்சு விடக்கூடாது. பாவம் அவர்களுக்குத்தான் எத்தனை தொல்லைகள்!

அமெரிக்க அதிபர் கிளின்ரனின் மகள் செல்சியாவின் கதையைக் கேளுங்கள்: தற்போது உயர் கல்லூரியில் சேர்ந்துள்ள செல்சியாவால் சுதந்திரமாக கல்லூரி வாழ்க்கையை அனுபவிக்க முடியவில்லை. எப்போது பார்த்தாலும் உளவுப் பிரிவினர் அவரை நிழலாகத் தொடர்கிறார்களாம். பாதுகாப்புக் கருதி செய்யப்படும் இந்த ஏற்பாடு காரணமாக செல்சியாவை நெருங்கிப் பழகவே சக மாணவ மாணவிகள் பயப்படுகிறார்களாம்.

பாலே நடனம் கற்றுள்ள செல்சியாவுக்கு பொழுதை ஜாலியாகக் கழிக்க ஆசையோ ஆசை. ஆனால் பாதுகாப்பு வளையத்தைத் தாண்டத்தான் முடியவில்லை.

இப்படித்தான் முன்னர் ராஜிவ் காந்தியின் மகள் பிரியங்காவுக்கும் ஏகப்பட்ட பாதுகாப்பு. எப்படியோ அந்தப் பாதுகாப்பு வளையத்தை உடைத்துக்கொண்டு காதலித்து வெற்றியும் பெற்றுவிட்டார் பிரியங்கா. செல்சியா எப்படியோ?!

## பரிதாப வாரிசு



ஈராக் அதிபர் சதாம் உசேன், அமெரிக்காவுக்கே தண்ணி காட்டிக் கொண்டிருப்பவர். "வல்லரசு என்றால் பயந்து பணிந்து வாலை ஆட்டும் ஏனைய நாடுகள் போல் நாமிருக்க மாட்டோம்!" என்பது ஈராக் அதிபரின் முழக்கம்.

வல்லரசுக்கே சவால்விடும் ஈராக் அதிபரின் குடும்பத்துக்குள் ஏகப்பட்ட பூசல்கள். அது ஒரு புறமிருக்க, சதாமின் வாரிசான உதய் மீது கடந்த ஆறுமாதங்களுக்கு முன்னர் கொலை முயற்சி நடந்தது. உதய் தேறிவருவதாகச் சொல்லப்பட்டாலும் மக்கள் அதனை நம்பவில்லை. உயிர்பிழைத்தாலும் இனி அவரால் முன்புபோல நடமாட முடியாது ஊன்றுகோல் துணையுடன்தான் நடமாடவேண்டும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. "அதெல்லாம் சும்மா, இன்னும் சில மாதங்களில் ஊன்றுகோல் இல்லாமல் நடமாடுவார்" என்கிறது அரச தகவல்.

பெண்கள் விஷயத்தில் உதய் மகா சபலப் பேர்வழி. காரில்போகும் போது அவர் கண்களில் அழகான பெண்கள் மாட்டினால் போச்சு. கட்டிலுக்கு வந்தேயாகவேண்டுமாம்.

பெண்களின் சாபம்தான் உதய்யின் இன்றைய நிலைக்குக் காரணம் என்று முணுமுணுப்பவர்களும் இருக்கின்றனர்.

## "காதலிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்!"



தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவுக்கு இப்போது 79 வயது. இப்போதுதான் மனிதருக்கு இளமை திரும்பியிருக்கிறது.

முன்னாள் மனைவி வின்னி, மண்டேலா வைவிட இளமையானவர். ஆனாலும் இருவருக்கும் இடையே ஒத்துப்போகவில்லை. வின்னியின் வேகத்துக்கு அரசியலில் மட்டுமல்ல சகல விஷயங்களிலுமே மண்டேலாவால் ஈடுகொடுக்க முடியவில்லை. அதனால் இருவரும் பிரிந்தனர். அதன்பின்னர் மொசாம்பிக் நாட்டின் அதிபராக இருந்து இறந்துபோனவரின் மனைவி கிரேசா மிக்கேலை காதலிக்கத் தொடங்கினார் மண்டேலா.

கிரேசா மிக்கேலுக்கு 52 வயது. இருவரும் இளம் ஜோடிகள்போல காதல் வானில் கைகோர்த்துப் பறக்கின்றனர். காதல்- மனதை மட்டுமல்ல வயதையும் உற்சாகமூட்டிவிடும். நம்பாவிட்டால் 79 வயது வாலிபரான மண்டேலா காதலைப் பற்றிச் சொல்வதைக் கேளுங்கள்:

"மனிதனாகப் பிறந்தவன் வாழ்க்கையில் காதலிக்கவேண்டும். காதல் இல்லாத வாழ்க்கை இரசிக்காது. காதல் உன்னதமானது. அது வாழ்க்கையை அழகுபடுத்துகிறது என்பதையும், அதன் மகிமையையும் இப்போதுதான் நான் புரிந்துகொண்டேன்," என்கிறார் மண்டேலா.

## இன்டர்நெட் கேம்



விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றங்களை எதற்கெல்லாம் பயன்படுத்துவது என்று விவஸ்தை இல்லாமல் போய்விட்டது.

சர்வதேச செய்தி தொடர்புத் துறையில் ஏற்பட்டுள்ள அற்புதமான முன்னேற்றம் இன்டர்நெட். அதனையும் புரளிகள் பரப்புவோர் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். சரி அதுதான் போகட்டும்: மற்றொரு விகாரமான விவகாரமும் இன்டர்நெட்டுக்குள் புகுந்திருக்கிறது.

அமெரிக்காவில் இன்டர்நெட்டில் புது விளையாட்டு ஒன்றை- 'இன்டர்நெட் கேம்' என்ற பெயரில் சேர்த்துள்ளனர். இளம் பெண்கள் கிளு கிளு உடைகளில் தோன்றுகிறார்கள். பின்னர் 'கேம்' தொடங்குகிறது. குறிப்பிட்ட சில நிமிடங்கள் மட்டுமே இது நடக்கிறது. இதுதான் அமெரிக்காவில் தற்போது பிரபலமாம். அது என்ன கேம்? சொன்னால் உதைக்க வந்துவிடுவீர்கள்.

## அசார் உத்தரவு



இந்திய கிரிக்கெட் அணியில் அசாருதீனை சில போட்டிகளில் நிறுத்தி வைத்திருந்தார்கள் அல்லவா? இப்போது மறுபடி அணியில் சேர்த்திருக்கிறார்கள்.

அசார் நிறுத்தப்பட்டதற்குக் கூறப்பட்ட காரணம், தன் மனைவி சங்கீதாவை சுற்றுப் பயணத்தில் அழைத்துப்போனார் என்பதுதான். ஆனால் அசார்-டெண்டுல்கர் இடையே விரிசல் ஏற்பட்டதற்கான முதல் காரணம் அதுவல்லவாம். மேற்கிந்திய அணியுடன் நடைபெற்ற போட்டியில் 'ஒரு ரன், இரண்டு ரன் என்ற கணக்கில் எடுக்கக் கூடியதாக நிதானமாக ஆடுங்கள். அவசரம் வேண்டாம்!' என்று டெண்டுல்கர் சொல்லி அனுப்பினாராம். ஆனால் அப்போது பிட்சில் நின்று ஆடிக்கொண்டிருந்த அசார், அந்த உத்தரவை மாற்றினாராம். 'வேகமாக ஆடுங்கள்' என்று துடுப்பாட்ட வீரர்களிடம் கூறினாராம். புகைச்சலுக்குக் காரணமான நெருப்பு அங்குதான் விழுந்ததாம்.



படிப்பகம்


www.padippakam.com



## தரையில் இது சீறும்

← எந்த நாட்டு ஜெட் விமானம் இப்படி வீழ்ந்து கிடக்கிறது? என்று நினைத்தால் அது பழக்கதோஷம். அதாவது நம்நாட்டு பழக்கதோஷம். விமானம் என்றாலே விழுந்துதான் கிடக்கும் என்பது இங்குதான் சாதாரணமாகிவிட்டதே.

ஆனால் உங்களுக்கெல்லாம் ஒரு அமோக ஏமாற்றம். இது விமானமே அல்ல. தரையில் நழுவி அல்லது வழுக்கிச் சீறிப்போகும் நவீனகார் தான் இது. **சீறிச்செல்லக்கூடிய** துடிப்பான உருவமைப்புடன் தயாரித்திருக்கிறார்கள். தென் அம்மானில் உள்ள அல்ஜயர் பாலைவனத்தில் வெள்ளோட்டம் விட்டு பார்த்தபோது **'கிளிக்'** செய்யப்பட்ட படமே இது.



## யுத்த தந்திரம்

← மரபுப் போரில் டாங்கிகளின் பங்கும் மிக முக்கியமானது. இரண்டாம் உலகப் போரில் ஜெர்மன் ஹிட்லரின் படைகள் பாரிய டாங்கிகளை பயன்படுத்தின. அவற்றின் உதவியோடு பகைநாட்டுப் படைகளை தாக்கியழித்தன. டாங்கிகளின் பலத்தை உணர்ந்த ஹிட்லர் எதிரிப்படைகளின் டாங்கிகளை சந்திக்க குள்ள நரித்திட்டம் ஒன்று போட்டிருந்தார்.

படத்தில் பாருங்கள், ட்ராகன் என்ற மிருகத்தின் பற்கள்போல தரையில் காணப்படுகின்றனவே அதுதான் தடைவேலி. நிலத்தில் இருந்து ஒரு சில அங்குல உயரத்திற்கு கொன்கிறீட்டினால் மேடாக அமைத்து அதன்மேல் பற்கள்போல கட்டப்படும். அதன் இருபுறமும் அகழிபோல தோண்டப்பட்டு இருக்கும். இப்படியே நீண்ட தூரத்திற்கு அமைத்திருப்பார்கள்.

இந்தப் பகுதியில் எதிரியின் டாங்கி (செயின் புளொக்) நுழைந்தால் என்னாகும் தெரியுமா? அதன் சில்லுகளைச் சுற்றியுள்ள செயின் பெல்ட்டின் இடைவெளிகளுக்குள் இந்த கொன்கிறீட் பற்கள் மாட்டிக்கொள்ளும். அதனால் சில்லுகள் தொடர்ந்து உருள முடியாமல் போகும். இந்தக் கொன்கிறீட் வேலிகளை தகர்க்க எதிரிப்படைகள் சிரமப்படும்போது ஜெர்மனிய டாங்கி எதிர்ப்பு அணிகள் டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களால் சரமாரியாகத் தாக்குவதற்கு போதிய சாதகமும், நேரமும் கிடைக்கும். பிறகென்ன எதிரிப்படைகள் கதி அதோகதிதான். ஹிட்லரா கொக்கா?!

## தகவல் பெட்டி


## மின்னலடிக்கும் போதினிலே

↓ உலகிலேயே மின்னல் அதிகம் வெட்டும் நாடு சிங்கப்பூர்தான் ஆண்டொன்றில் 171 நாட்கள் இடியுடன் கூடிய மழை பெய்கிறது. மின்னல் எப்போது, எங்கு வெட்டும் என்று தெரியாமல் வானிலை அவதான நிலையத்தார் திணறிக்கொண்டிருப்பார்கள். எங்கு வெட்டும் என்று தெரிந்தால் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள மக்களை முன்கூட்டியே உஷார்படுத்தி விடலாம் அல்லவா.

இப்போது மின்னலை முன்னதாகவே கணிக்கக்கூடிய சாதனத்தை கண்டுபிடித்துவிட்டார்கள். இதற்குண்டான செலவு 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள். நம்நாட்டுப் பெறுமதிப்படி 8 கோடியே 25 இலட்சம் ரூபாய்கள்.

படத்தில் இருப்பதுதான் மின்னலை ஆராயும் சாதனம். மேகத்தில் இருந்து வெளியாகும் மின்காந்த அலைகளை இது ஆராயும்.

மின்னல் வெட்டும்போது பாதிப்பிலிருந்து தப்புவதற்கு என்ன செய்யலாம்? உலோகப் பொருட்களை 'டச்' பண்ணவே கூடாது. சைக்கிளில் சென்றுகொண்டிருந்தால் கீழே இறங்கிவிடுங்கள். உயரமான மரங்களுக்கு கீழே செல்லாதீர்கள். நீந்திக் கொண்டிருந்தால் கரைக்கு திரும்புங்கள். காரின் உள்ளே இருந்தால் அங்கேயே இருங்கள். திறந்தவெளி மற்றும் மேட்டுப் பகுதிக்கு செல்லாதீர்கள். வீட்டுக்குள்ளேயே இருங்கள். நம்நாட்டுக்கும் பொருத்தமான தகவல்தானே.



## தோண்டத் தோண்ட



→ எகிப்து நாட்டில் உள்ள பாதாளக் கோவிலில் தோண்டத் தோண்ட புதுப்புது விஷயங்கள் தட்டுப்படுகின்றன. அங்குள்ள பாறைகளில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் மூலம் வரலாற்றையே புரட்டிப் போடக்கூடிய தகவல்களை ஆராய்ச்சியாளர்கள் திரட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

எகிப்து நாட்டுக்கு அருகில் இருப்பது சூடான் நாடு. அங்குள்ளவர்கள் கறுப்பு இன மக்கள். தற்போது மெல்லரசாக உள்ள சூடான் மூவாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வல்லரசாக இருந்ததாம் என்றால் நம்பமுடிகிறதா? ஆனால் ஆராய்ச்சியாளர்கள் அப்படித்தான் சொல்கிறார்கள். எகிப்து நாட்டை ஆயிரம் ஆண்டுகளாக தம் பிடியில் இறுக்கி வைத்திருந்தவராம் சூடான் நாட்டவர்.

படத்தில் இருக்கிறது பாருங்கள் சிற்பங்கள். கறுப்பு இனத்தவர்களின் சாயல் தெரிகிறதல்லவா. எகிப்து நாட்டை சூடான் நாட்டு கறுப்பு இன மன்னன் 'டார்கோ' ஆட்சி செய்த ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றனவாம். 'டார்கோவின்' கல்லறையில் தோண்டி எடுக்கப்பட்ட சிற்பங்கள்தான் இவை. 'டார்க்கோ' மண்டையைப் போட்ட போது அவரது கல்லறையில் முக்கியமான மெய்ப்பாதுகாவலர்களது சிலைகளையும் செய்து வைத்தார்களாம். அவைதான் இவை. கல்லறையிலும் பாதுகாப்போ?



## அசலும் நகலும்

↑ அமெரிக்க அதிபரின் வாசஸ்தலமான வெள்ளை மாளிகையின் தோற்றம்தான் இது. வெள்ளை மாளிகை இருப்பது வோஷிங்டனில். ஆனால் இந்த மாளிகை இருப்பதே சீனாவின் தலைநகரான பெய்ஜிங்கில்! என்ன குழப்பமாக இருக்கிறதா? வெள்ளைமாளிகையைப் போலவே கச்சிதமாக உருவாக்கப்பட்ட மொடல் மாளிகை இது. பிரமாண்டமான இந்த பொம்மை மாளிகையை பெய்ஜிங்சில் உள்ள ஒரு பூங்காவில் வைத்திருக்கின்றனர். அதனை சீனர்கள் ஆர்வத்துடன் வியந்து இரசிக்கின்றனர். அசலைவிட நகலுக்கு மரியாதை கிடைப்பதும் உண்டுதானே.


படிப்பகம்

www.padippakam.com

## காதோடு சொல்லுகிறோம்

இதுதான் சினிமா உலகக் காதல் என்று முணு முணுக்கிறார்கள் சிலர். விஷயம் இதுதான். பூ நடிகைக்கும் அவரது முன்னாள் காதலரான முன்றெழுத்து நடிகருக்கும் இடையே மறுபடி போன் பேச்சு நடந்திருக்கிறதாம். விஷயம் சுந்தரமான இயக்குநருக்கு தெரியவர ஒரே கசமுசா. 'நீர் மட்டும் அவளுடன் சுற்றுகிறீரே. உமது யோக்கியதை தெரியாதா?' என்று சீறினாராம் 'பூ' நடிகை. அவர் சொன்னது 'ரம்ப' நடிகையை. 'பூ' டாட்டா காட்டினால் 'ரம்ப' நடிகைக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்க இயக்குநர் முன்வரலாம் என்கிறார்கள்.

தன்பெயரில் மந்திரத்தை வைத்துள்ள நடிகையுடன் இணைந்து நடிக்கும் நாயகர்கள் அனைவருமே கொஞ்சிக்குலாவத் தொடங்கிவிடுகிறார்களாம். இதனால் அவர்மீது பிரியம் வைத்து படம் தயாரித்த முதல்பட தயாரிப்பாளர் மனம் நொந்துபோக, அந்தத் தயாரிப்பாளரை நடிகையின் தாய்க்குலம் சாிக்கட்டி வருகிறாராம். இத்தகவலை வெளியிட்ட பத்திரிகைமீது கோபமாக இருக்கிறார்கள் நாயகியும், தாய்க்குலமும்.

'அப்பா'விபோல பேசினாலும் அந்த இளம் நாயகன் அந்த விவகாரங்களில் ஆழமானவர்தானாம். 'சிம்' நடிகையுடன் காதல் இல்லை என்று சொல்லிக்கொண்டே மகாபலிபுரத்தில் தனியாக இருவரும் தங்கிவந்தார்களாம். நீண்டகால நட்பு என்கிறார்கள் இருவரும்.

மூழி 'ராஜன்' நடித்துவரும் படமொன்றில் நடிக்கும் அந்த இளம் நடிகை நடிகர் சங்கத்தில் புகார் செய்வேன் என்று மிரட்டினாராம். மிரட்டலில் ஆடிப்போயிருக்கிறார் நடிகர். மிரட்டலுக்கு காரணம் நடிகரின் கை நீளம்தானாம். கோபாலா கோபாலா....

## "தொட்டால் லவ்வா?"

'வி.ஐ.பி', 'பூச்சூடவா', 'ஜாலி' என்று அப்பாசுடன் தொடராக நடிக்கிறார் சிம்ரான். அப்பாசுடன் காதலா என்று கேட்டால் கோபப்படாமல் அனுபவப்பட்டவர்போல பதில் சொல்கிறார் சிம்ரான்.

"ஒருத்தரை தொட்டுப் பேசினாலே இந்த உலகத்திலே அதற்கு லவ் என்றுதான் பெயரா? நானும் அப்பாசும் உங்கள் பார்வைக்கு புதுசா தெரியுறோம். ஆனால் மொடலிங் உலகில் அவர் எனது கொலிக். தொட்டுப்பேசுவது அங்கே சகஜம். அப்படி நான் அப்பாஸை லவ் பண்றேன் என்று வைத்துக் கொண்டாலும் அது சக நட்சத்திரத்தின் மீது நான் செலுத்துகின்ற தூய்மையான அன்பு. நட்பு என்றுமட்டுமே அர்த்தம்".

துணிச்சலாகப் பேசும் சிம்ரான் 'தேரே மேரே சப்னே' படம் மூலம்தான் அறிமுகமானார். பேச்சில் மட்டுமல்ல சினிமா உலக நெளிவு சுழிவுகளிலும் சிம்ரான் துணிச்சலோடு தேர்ச்சி பெற்றுள்ளார். அதனால் இப்போது பல படவாய்ப்புக்களைக் கையில் வைத்திருக்கிறார்.

## ரஜினி படம்

ரஜினியின் அடுத்த படத்தை சுரேஸ் கிருஸ்ணா இயக்குவார் என்பது தமிழக பத்திரிகைகள் வெளியிடும் தகவல். 'இந்தியன்' படத் தயாரிப்பாளர் ஏ.எம். ரத்தினம் தயாரிக்கிறாராம். முன்னர் இவர் ரஜினியை அணுகியபோது ரஜினி 'நோ' சொல்லியிருந்தார்.

இலண்டனில் இருந்து திரும்பியதும் அடுத்த படம், கதாநாயகி போன்ற விபரங்களை அறிவிப்பதாகக் கூறியிருக்கிறார் ரஜினி.

## சீற்றம்

முன்பெல்லாம் திருமணம் பற்றிக் கேட்டால் காலவரையறை சொல்லிக் கொண்டிருந்தார் குஷ்பு. இப்போது கேட்டால் சீறி விழுகிறாராம். "அவரிடமே கேளுங்கள் என்கிறாராம்.

என் முழுக்கவனமும் இப்போது நடிப்பில்தான். நான் ஒன்றும் மார்க்கெட் இல்லாமல் அலைந்து காதலிப்பவள் அல்ல" என்றும் சீறுகிறார். யாரை நினைத்துக் கொண்டு குத்துகிறாரோ?

## பூபூக்கும்...

'மின்சாரக் ...
படத்தில் இடம்...
பாடல் ஒன்று 'பூ...
ஓசை...' என்று ...
மாகும் அல்லவா...
போது அதனை ...
ஒன்றுக்கு சூட்...
டார்கள். கர...
மாணவரான அ...
கதாநாயகனாக ...
முகமாகிறார். கதா...
யாக அறிமுகமா...
பூர்னிமா பட்வரத...
இந்த பூர்னிமா...
வரதன்? இந்தியி...
கிளப்பிய 'மேனே...
கியா' பட நாயகி...
ஸ்ரீயின் கடைக்...
தங்கைதான் இவ...
மணிவண்...
இயக்குநர் கே.எ...
குமார், பாலு ...
வினுச்சக்கரவ...
மன்சூர் அலிகா...
வேலு, கோவை ...
ஆகியோர் நடி...
றனர். 'வைகாசி...
தாச்சு' என்னும் ...
ஹிட் படத்தை இ...
'ராதாபாரதிதா...
படத்தையும் ...
கிறார். புதிய ...
யமைப்பாளர் ...
தேவ் இசையமை...



லட்சுமி
படம்: துர்க்கா பூஜை

## சத்யராஜ் ஸ்டைல்

இமேஜ் பற்றிக் கவலைப்படாதவர் சத்யராஜ். விழாக்களில் வழுக்கைத் தலையோடேயே வலம் வருவார். "எல்லாரும் என்கிட்ட கேக்கிறாங்க... "என்ன சார் உங்க இமேஜ் பாதிக்கப் படாதா?" என்று. அட என்னத்த இமேஜ் பார்க்கிறது. நம்ம தலையைப் பாருங்க, இருக்கிறதே நாலு முடி. இந்த விஷயம் தமிழ்நாட்டில் இருக்கிற எல்லோருக்கும் தெரியும். அப்படி இருக்கறப்போ சும்மா அழகுக்காக தலையில விக் வைச்சுக்கிட்டு வர்றேன்னு வெச்சிக்குங்க, "பார்றா சத்யராஜ் ஏமாத்தறான்'னு ஜனங்க சொல்லவார்களே.

உள்ளது உள்ளபடி இருக்கட்டும். இப்ப சத்யராஜ் ஸ்டைல்னு பாத்தா அது நம்ம வழுக்கைத் தலைதாங்க" என்கிறார் சத்யராஜ்.

**கௌசல்யா | முகப்பில்**
படம்:-காலமெல்லாம் காதல் வாழ்க
**அரவிந்தசாமி**
**கார்த்திக்**



கமல்
படம்: சிகினி சாக்சி

## புயல் எச்சரிக்கை

தமிழில் தாராளமாக மையம் கொண்டிருக்கும் கவர்ச்சிப் புயலான சங்கவி தெலுங்குப் பக்கம் ஒரேயடியாக திரும்பும் ஆபத்து தென்படுகிறதாம்.

'சிந்தூரம்' என்ற தெலுங்குப் படத்தில் இரண்டு அறிமுக நாயகர்களின் ஜோடியாக நடிக்கிறார் சங்கவி. 'சிந்தூரம்' படத்தை இயக்கும் கிருஷ்ணா இயக்கிய இரண்டு படங்கள் இருநூறு நாட்கள் ஓடினவாம். 'சிந்தூரம்' படமும் அப்படி ஓடினால் சங்கவி என்ற கவர்ச்சிப் புயல் திசை மாறும் ஆபத்து உண்டு!

## கெரில்லா பூமியில்

திரைகடல் ஓடியும் திரைப்படம் எடு என்பது புதுமொழி. தமிழ்ப்பட தயாரிப்பாளர்கள் உலகின் மூலை முடுக்கெல்லாம் சென்று படமெடுக்கிறார்கள்.

'காதல் கோட்டை' பட தயாரிப்பாளர் சிவசக்தி பாண்டியன் வியட்நாம் செல்லப்போகிறார். ஒரு காலத்தில் கெரில்லா போர் சூடு கிளப்பிய பூமியில் காதல் படம் எடுக்கப்போகிறார். படத்தின் பெயர் 'காதலே நிம்மதி'.

## 'சத்ய தாய்'

எம்.ஜி.ஆரின் தாயார் பெயர் சத்யா. எம்.ஜி.ஆர் பக்தரான ராமராஜன் அடுத்து நடிக்கப்போகும் படத்திற்கு சூட்டியுள்ள பெயர் 'சத்ய தாய்'.

ராமராஜன் கதாநாயகனாக நடிக்க சுவலட்சுமி ஜோடியாக நடிக்கிறார். இருவரும் முதலில் இணையும் படம் இதுதான்.

ராமராஜனின் உதவியாளராக இருந்த எம்.கோதண்டராமன் இப்படத்தை இயக்குகிறார். இசை: சிற்பி.

## மினி சினி

* 'கோகுலத்தில் சீதை' கன்னட தயாரிப்பில் தமிழில் சுவலட்சுமி நடித்த பாத்திரத்தில் மந்த்ரா நடிக்கிறார். கார்த்திக் நடித்த பாத்திரத்தில் சிரஞ்சீவியின் சகோதரர் கல்யாண் நடிக்கிறார்.
* ரஞ்சிதாவின் கைவசம் இருப்பது இரண்டே இரண்டு படங்கள்தான். ஒன்று; 'பகைவன்'. மற்றொன்று 'கண்ணாத்தாள்'. 'பகைவன்' படப்பிடிப்பு முடிந்துவிட்டது.
* பாண்டியராஜன்-ரசிகா இணைந்து நடிக்கும் 'கபடி கபடி' படத்தில் ரோஜா, மகேஸ்வரி, ராஜஸ்ரீ மூவரும் கௌரவ வேடத்தில் நடிக்கிறார்கள்.
* பிரபுவும் மலையாள முன்னணி நடிகர் சுரேஷ் கோபியும் இணைந்து நடிக்க சிபி மலையில் இயக்கும் படம் அமைதிப் பூங்கா. இதில் பிரபுவின் ஜோடியாக பலர் பேசப்பட்டனர். இப்போது தேவயாணி நடிக்கிறார்.
* 'தேவதை' படத்தில் மொட்டைத் தலையுடன் நடிக்கும் தலைவாசல் விஜய், அதனைத் தொடர்ந்து 'நந்தினி', 'வாசுகி' உட்பட வேறு சில படங்களிலும் அதே மொட்டைத் தலையுடன் நடிக்கிறார்.
* பாரதிராஜா இயக்கத்தில் சரத்குமார் நடிப்பதாக இருந்த 'வார்க்கப்பட்ட பூமி' படத்தின் பெயர் 'திருமலை நாயக்கர்' என்று மாற்றப்பட்டுள்ளது.
* 'ஈஸ்வரன்' படத்தில் பிரேம் ஜோடியாக நடிக்கிறார் ஊர்வசி. முக்கிய வேடத்தில் மணிவண்ணன் நடிக்கிறார்.
* "காலேஜ் இருக்குதா தெரியாது, கிளாசு நடக்குதா தெரியாது. நாட்டு நடப்புத்தான் தெரியாது. தெரிஞ்சதெல்லாம் ஒண்ணுதான், அது லவ் பண்ணுற பொண்ணுதான்..." என்று தொடங்கும் பாடலை 'மோனிஷா' படத்துக்காக எழுதி இசையமைத்திருக்கிறார் டி.ராஜேந்தர்.
* விக்னேஷ் ஜோடியாக 'அம்மா பொண்ணு' படத்தில் நடித்தவர் அகிலா. 'சிறகுகள் முறியவதில்லை' படத்தில் விக்னேஷ் ஜோடியாக மாதுமா என்ற பெயரில் நடிக்கிறார்.
* 'அருணாச்சலத்தில்' நடித்த சவுந்தர்யா மீண்டும் தெலுங்குப் பக்கம் போய்விட்டார். காரணம், தமிழில் ஒரு படம்கூட கிடைக்கவில்லை.
* கரண்-குஷ்பு ஜோடியாக நடிக்கும் 'கலர் கனவுகள்' படத்தில் ஆதித்யன் இசையில் ஒரு பாடலைப் பாடியுள்ளார் தேவா. படத்தில் அதற்கு வாயசைப்பவர் மணிவண்ணன்.





மைனா
படம்: வீரபாண்டிக் கே...

## புது நிபந்தனை

இனிமேல் கதாநாயகர்களின் நண்பனாக மட்டுமே நடிப்பேன். வயதான பாத்திரங்களில் நடிக்கவே மாட்டேன். கதாநாயகன் போலவே எனக்கும் முக்கியத்துவம் வேண்டும். ஒரு சண்டை, ஒரு டுயட் தேவை. இதெல்லாம் கவுண்டமணி போடும் புதிய நிபந்தனைகள்.

ஒரு படமொன்றில் மந்த்ராவுடன் நெருக்கமாக நடிப்பதுபோல காட்சி அமைக்குமாறு வற்புறுத்தி மந்த்ராவை கட்டியணைத்து நடித்தாராம் மணி. மந்த்ராமீது நீண்டநாளாக ஒரு கண். அதுதான் கிடைத்த சான்ஸை பயன்படுத்திக்கொண்டேன் என்றும் சொல்லித் திரிகிறாராம்.

## நடன ஒத்திகை

நடிகை மதுபாலாவுக்கு படவாய்ப்புக்கள் குறைந்துவிட்டன. ஆனாலும் வெளிநாடுகளில் சுறுசுறுப்பாகச் சுற்றிக் கொண்டிருக்கிறார்.

வெளிநாடுகளில் இருந்து பெரும் புள்ளிகளான ரசிகர்கள் நட்சத்திர நிகழ்ச்சி நடத்த அழைக்கிறார்களாம். அதனால் இந்திப் படங்களில் கவர்ச்சி நடிகைகள் ஆடிய ஹிட்டான நடனங்களையும் ஆடி ஆடி பயிற்சி பெறுகிறாராம் மதுபாலா. வெளிநாட்டு ரசிகர்களை அசத்தவேண்டாமா? அதற்குத்தான்.

## விழுந்த ...

ஒன்ஸ்மோர் படப்பிடிப்பு...
நேரம் தாமதமாகச் சென்...
சிம்ரான். சிவாஜி, சரோஜாதே...
நடிக நடிகைகள் காத்திருந்த...
கண்டதும் கொதித்துப் போன...
எஸ்.ஏ. சந்திரசேகர். நில...
கொண்ட சிம்ரான் இயக்குநர்...
ஆகியோரின் கால்களை தொ...
புக்கேட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

## இயக்கமும் நடிப்பும்

இயக்குநராக இருந்து பிஸியான நடிகராக மாறி இருப்பவர் மணிவண்ணன். இப்போது மற்றொருவரும் அப்பட்டியலில் சேருகிறார். 'முத்து', 'அவ்வை சண்முகி', 'நாட்டாமை', 'பிஸ்தா' போன்ற ஹிட் படங்களை இயக்கிய கே.எஸ். ரவிக்குமார்தான் அவர். தனது இயக்கத்தில் உருவாகும் படங்களில் ஒரு காட்சியிலாவது தலைகாட்டுவது அவர் வழக்கம். இப்போது வெளியார் படங்களில் வில்லன், நகைச்சுவைப் பாத்திரம், குணச்சித்திரம் என்று பலவிதமாக நடித்துக் கொண்டிருக்கிறார். ஆனாலும் இயக்குநர் தொழிலையும் விடமாட்டேன் என்கிறார்.



தபு
படம்: அடிமைச் சங்கிலி

## விருதுபெற்ற தபு

'சிறைச்சாலை', 'காதல் தேசம்' படங்கள் மூலமாக தமிழ்ப்பட ரசிகர்களுக்கும் நன்கு அறிமுகமானவர் தபு. இந்திப்பட உலக நடிகைகளுக்கு இருக்கக்கூடிய சிக்கென்ற உடம்பும் உயர்வு தாழ்வுகளும் போதாது என்று தபு முன்னர் ஓரம் கட்டப்பட்டார். இப் போது அதே தபுதான் இந்திய அரசின் தேசிய விருதை கைப்பற்றியிருக்கிறார்.

தேசிய விருதை பெற்றிருப்பதால் அடக்க ஒடுக்கமாகத்தான் நடிப்பார் என்று அர்த்தமல்ல. போட்டி நடிகைகளை ஓரம்கட்ட கவர்ச்சிப் புயலாகவும் மாறியிருக்கிறார். அதே சமயம் நல்ல நடிப்புக்கு ஏற்ற பாத்திரம் கிடைத்தால் புகுந்து விளையாடியும் காட்டியிருக்கிறார். 'காலாபாணி' (சிறைச்சாலை), 'மச்சீஸ்' போன்ற படங்களில் தபுவின் நடிப்புத்தான் தேசிய விருதை பெற்றுக் கொடுத்திருக்கிறது.

1992ல் திரையுலகில் முகம் காட்டியவர் தபு. அதன் பின்னர் ஐந்து வருடங்களில் ஏற்றங்கள் இறக்கங்கள் என்று பல படிகளைத் தாண்டி இப்போது வெற்றிப் படிக்கட்டில் நிற்கிறார்.

மறைந்த நடிகை திவ்யபாரதியின் கணவரான சாஜித்தை தீவிரமாக லவ்விக் கொண்டிருக்கிறார் தபு. இதற்கிடையே தெலுங்கு நடிகர் நாகார்ஜுனுடனும் நெருக்கம் என்றும் பேச்சு இருக்கிறது. 'உன்னையே கல்யாணம் பண்ணிக்கிறேன்' படத்தின் நெருக்கமான காட்சிகள் இருவருக்கும் இடையே கமராவுக்குப் பின்னாலும் அந்த நெருக்கத்தை பராமரிக்கத் தூண்டியதாம்.

## ஒரே ஊது

'ரட்சகன்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார் உலக அழகி சுஷ்மிதா சென். நாகார்ஜுனுடன் கூலாகப் பழகுகிறார். படப்பிடிப்பு குழுவினர் மத்தியிலும் ஜோக் அடித்து கலகல பண்ணுகிறார். அந்தமாதிரி ஜோக்குகளும் அடக்கம்.


சுஷ்மிதா விடயத்தில் படப்பிடிப்பு குழுவினர் அடிக்கடி முகம் சுளிக்கும் ஒரே ஒரு பழக்கம். புகை புகையாக ஊதித்தள்ளுகிறாராம். ஒரே புகைமண்டலமாக சூழலை மாற்றிவிடுகிறாராம். சுஸ்மிதா ஒரு தொடர் புகைப்பிடிப்பாளர்.

## தேடிவந்த ரசிகைகள்

அப்பாஸ் ரொம்பவும் வருத்தப்படுகிறார். கோயம்புத்தூரில் இருந்து இளம் ரசிகைகள் சிலர் ரயில் ஏறி சென்னை வந்துவிட்டனர். அவர்கள் வீடுகளுக்கு விஷயம் தெரியாமல், பெண்களைத் தேடத்தொடங்க ஒரே பரபரப்பாகிவிட்டது. பின்னர் எப்படியோ அவர்கள் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். அந்த இளம் ரசிகைகள் தேடிச் சென்றது அப்பாஸை. அதனால்தான் அப்பாசுக்கு வருத்தமோ வருத்தம்.

அப்படி என்னதான் அப்பாசிடம் இருக்கிறதோ தெரியவில்லை. அப்பாசிடமே கேட்டால் அவர் வெட்கப்படுகிறார்.

"அந்த ரசிகைகள் வந்தபோது நான் சென்னையில் இல்லை. பெங்களூர் சென்றிருந்தேன். சில செய்தித்தாள்களை வாசித்துத்தான் அறிந்தேன். எனக்கு 'திக்' என்றிருந்தது. இனி யாரும் அவசரப்பட்டு அது மாதிரிக் காரியங்களில் இறங்கவே கூடாது" என்று சொல்லுகிறார் அப்பாஸ்.



சிம்ரான்-அப்பாஸ்
படம்: பூச்சூடவா


கார்த்திக்
படம்: உதவிக்கு வரலாமா

## சினிவிசிட்

### "ஜாக்கிசான்போல சண்டைபோட ஆசை!"

பதினைந்து வருடங்களுக்குப் பின்னர் ஒரு நேரடி இந்திப் படத்தில் மீண்டும் நடிக்கிறார் கமல்ஹாசன். அது தான் 'அவ்வை சண்முகியின்' இந்தி வடிவமான 'சிகினி சாக்சி'. படத்தயாரிப்பில் பிஸியாக இருக்கும் கமலின் மினிப்பேட்டி..

**கே: இந்தியில் நிச்சயமாக வெற்றி கிட்டுமா?**

க: நூறு சதவிதம் நிச்சயம். பணமழை கொட்டத்தான் போகிறது. இல்லையென்றால் நான் இப்போது தமிழில் இருக்கும் பிஸிக்கு இந்திப் படம் எடுப்பேனா? இதில் இலாபம் இருப்பதால்தான். சோழியன் குடுமி சும்மா ஆடுமா?

**கே: 'இந்தியன்', 'அவ்வை சண்முகி' மேக்கப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கிற கதைகளையே எடுத்தது என்?**

க: பழைய படங்களில் பார்த்தீர்காளானால் டான்ஸ் ஆடுவேன். ஏன் சும்மா ஆடிக்கிட்டே இருக்கீங்கன்னு கேட்டாங்க. எனக்கு அப்போது டான்ஸ் ஆட மட்டும்தான் தெரியும். தெரிந்த விஷயத்தை திரையில் காண்பித்தேன். இப்ப பார்த்தீங்கன்னா என்னைக் காட்டிலும் பிரமாதமாக ஆடக்கூடிய, உயரமாகப் பறந்து ஆடற இளைஞர்கள் எல்லாம் வந்துட் டாங்க. இவங்களோட நான் போட்டி போட முடியுமா? அதனால் வேறுவழியில் மக்களைக் கவர முயற்சி பண்றேன். ஜாக்கி சான்மாதிரி பறந்து பறந்து சண்டை போடணும்னு கூடத் தான் ஆசை. உடம்பு குறிப்பு எலும்பு ஒத்துழைக்கணுமே!

## எங்கே?

சுகன்யா தற்போது பாட்டுக் கச்சேரி நடத்திவருகிறார். முறையாக கர்நாடக சங்கீதம் கற்றிருக்கிறாராம். சுகன்யா சொந்தக் குரலில் ஒரு படத்தில் பாடியுமிருக்கிறார். படத்தின் பெயர் 'கோவில்பட்டி வீரலட்சுமி'. மேடைகளில் 'காதோரம் லோலாக்கு' பாடலை சுகன்யா பாட ரசிகர்கள் மெய்மறந்துபோகிறார்களாம். சுகன்யாவுக்கு புதுத்தொழில் கிடைச்சாச்சு.

## திரையுலக மறுபக்கம் 8
# சினிமாவுக்கு வந்த குடும்பப்பெண்
## மித்ரவாசு | போட்டியில் வென்ற முன்னணி நடிகர்!

சமஸ்கிருத மொழியில் மாலை நேரத்தைக் குறிக்கும் பெயர் கொண்ட பெண் அவர். ஆச்சாரமான குடும்பத்தைச் சேர்ந்தவர். தனது கணவருக்கு நல்ல மனைவியாக வாழ்ந்த அப்பெண்ணுக்கு இரண்டு குழந்தைகள்.

அந்தக் குடும்பம் நிம்மதியோடும், பெருமையோடும் வாழ்ந்த குடும்பமாகும். காலமாற்றங்கள் குடும்பச் சுற்றுச்சூழல்களில் பாதிப்பை ஏற்படுத்தின. கணவரின் வருமானம் போதவில்லை. உறவினர்களால் செல்வம் அழிந்தது. அதனால் அப் பெண் வேலைக்கு செல்ல முடிவெடுத்தார். கணவருக்கு விருப்பமில்லையென்றாலும் தடுக்கவில்லை.

குடும்பத்தில் உள்ள மற்றவர்கள் அப்பெண்மீது பழி சுமத்தினார்கள். அந்தப் பெண்ணின் அழகிய தோற்றம் குடும்ப வளையத்தைச் சுற்றி நெருப்பைக் கொட்டியது. அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் கணவரோ தன் மனைவியின் முகத்தைப் பார்க்கவே வெட்கப்பட்டார்.

இருவரும் கணவன் மனைவி என்ற உறவுப் பிணைப்பில் இருந்து மெல்ல மெல்ல விலகிக்கொண்டிருந்தனர். திடீரென்று கணவர் நோய்வாய்ப்பட்டார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் எப்படியாவது பிழைத்துவர வேண்டுமென்று மனைவியும் குழந்தைகளும் கடவுளை வேண்டினார்கள்.

இறைவன் செவி சாய்த்தானோ என்னவோ அந்தக் குடும்பத் தலைவரின் நோய் குணமாகியது. வீட்டுக்கு வந்த சில நாட்களுக்குள் மீண்டும் அவரை நோய் தாக்கியது. மனக்கவலையும் நோயும் அவரை உலகை விட்டு விடுதலை செய்தது.

### சினிமா உலகில்

தன் கணவருக்குப்பின் தன் வாழ்வு எப்படிப்போகும் என்ற கேள்விக்கு விடைதெரியாமல் தவித்த அந்தப்பெண் மற்றொரு இடியைத் தாங்க வேண்டியிருந்தது.

அவரது கணவர் கொஞ்சம் கொஞ்சமாக கொல்லும் விஷம் வைத்துக் கொல்லப்பட்டிருக்கிறார் என்பதே அந்தப் பழி. மனைவிமீதே பழிச் சொல் விழுந்தது.

பழிச்சொற்களை அவர் பொருட்படுத்தவில்லை. தனது குழந்தைகளின் எதிர்காலத்தை நினைத்தே பயந்தார்.

அப்போது சகோதரியைப்போல பழகிய ஒருவர் சினிமாவில் இருந்தார். அவர் மூலம் சினிமாவுக்கு வந்தார் அந்தப் பெண். சினிமா உலகம் பற்றிக் கேள்விப்பட்டிருந்தாலும், குழந்தைகள் உள்ள தனக்கு எதுவும் நேராது என்று நம்பினார்.

ஆனால் அந்தத் தொழிலை சாதாரணமாக எண்ணியது எவ்வளவு பெரிய தவறு என்பதை வெகு விரைவில் தெரிந்துகொள்ளும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளானார்.

நாம் ஒழுக்கமான பெண்ணாக வாழ வேண்டும் என்று நடிகை விரும்ப, அவரை யார் முதலில் அடைவது என்று ஒரு போட்டியே நடந்துகொண்டிருந்தது.

இந்தப் போட்டியில் 'சிம்மம்' போல கர்ஜித்து பலாத்காரத்தால் வெற்றியைத் தேடாமல் தந்திரமாக வென்றுவிட்டார் ஒரு முன்னனி நடிகர்.

### எப்படி?

அந்த நடிகையை சந்தியாகாலம் நடக்கும் தன் பிறந்தநாள் விழாவுக்கு அழைத்திருந்தார் சகோதரிபோல பழகிய நடிகை.

திரையுலகின் முக்கிய புள்ளிகள், திரையுலகோடு தொடர்புடைய பணக்காராகள் பலரும் வந்திருந்தனர்.

விருந்தில் அந்த நடிகையைக் கண்ட பலரும் மகிழ்ந்து வந்து பேசினர். பண்புள்ளவர்கள் என்று நடிகை யாரையெல்லாம் நினைத்தாரோ அவர்கள் தன் கையைப் பிடித்துக் குலுக்கும்போது உணர்த்திய சேஷ்டைகளைக் கண்டு திகைத்துப்போனார்.

விருந்து முடியும் நேரத்தில் அந்த முன்னணி நடிகர் நடிகையிடம் வந்து பேசினார். பிறந்தநாள் கொண்டாடிய நடிகை இந்த நடிகையின் காதில்: "அவர் நல்லவர், பண்புள்ளவர் அவர் மனம் கோணாமல் நடந்துகொள்" என்றார்.

அந்த நடிகைக்கு மது பரிமாறப்பட்டது. நடிகை குழந்தை பெற்றபோது வலிதெரியாமல் இருக்க மது அருந்தியிருக்கிறார். அதன்பின்னர் இப்போதுதான் முதல் முறையாக மது அருந்தினார். தோழியின் வற்புறுத்தலால் அதிகமாகக் குடித்தார்.

விருந்து முடிந்து இந்த மூவரைத் தவிர மற்றவர்கள் போய்விட்டனர். தோழி எழுந்து வெளியே போனார். நடிகருடன் பேசியபடியே நடிகை மதுவை அருந்தினார். "உங்களுக்கு பழக்கமில்லாதபோது இப்படி அதிகமாகக் குடித்திருக்கக்கூடாது." என்று நடிகர் அட்வைஸ் செய்தார்.

நடிகை சிரித்தபடியே, "இப்படிச் சாப்பிட்ட பின்புதானே பழக்கம் வரும். சும்மா இருந்தா எப்படி பழக்கம் வரும்?" என்று கேட்டார். நடிகரும் ஆமோதித்தபடி மேலும் ஊற்றிக் கொடுத்தார். சிறிது நேரத்தில் நடிகை நினைவிழந்து மேசையில் சரிந்துவிட்டார்.

### நடிகர் சொன்னது

பின்னர் நடிகரும், தோழி நடிகையும் சேர்ந்து அவரை கைத்தாங்கலாக அறைக்குள் கட்டிலில் படுக்க வைத்தனர். நடிகரை விட்டுவிட்டு தோழி நடிகை போய் விட்டார். நடிகைக்கு சற்று போதை விலகியது. தனது அறையை யாரோ எட்டிப்பார்ப்பது போலிருந்ததால் கதவை மூடுங்கள் என்றார். நடிகர் கதவை மூடியதோடு தாழ்ப்பாளும் போட்டார்.

நடிகையின் அருகில் வந்து அமர்ந்த நடிகர் அவரது தலையை இரு கைகளாலும் பிடித்தபடி "தலையை வலிக்கிறதா?" என்று கேட்டார். அப்படியே நடிகரின் கைகள் தலையிலிருந்து உடலெங்கும் பரவியது. நடிகையால் தடுக்க முடியவில்லை. நடிகை போதை மயக்கம் தெளிந்து எழுந்தபோது நடிகர் களைப்பில் தூங்கிக் கொண்டிருந்தார். நடிகை அவரை ஆத்திரத்தோடு திட்டியபோது நடிகரோ; "இயற்கை நம்மைச் சேர்த்து விட்டது. இயற்கைதரும் வாய்ப்பு ஏன் இழக்கவேண்டும்?" என்று கேட்டார். பாவம் நடிகை அவரால் என்ன செய்ய முடியும்.

**பி.குறிப்பு: அந்த நடிகையின் மகள் பின்னர் நடிகையாகி அதற்குமேலும் வளர்ந்து தமிழகத்தை கலக்கியவர்.**


படிப்பகம்

www.padippakam.com

# 'உண்ணாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்.'

"காலையில் நான் எதுவுமே சாப்பிடுவதில்லை," என்று பெண்கள் சிலர் பெருமையாகக் கூறுவார்கள். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு, தமது சகாக்களிடம் இவ்வாறு கூறுவதில் ஒரு திருப்தி.

வீட்டில் இருக்கும் பெண்களில் பலர் காலை உணவில் அக்கறை காட்டுவதில்லை. அலுவலகம் செல்லும் கணவன், பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகள் ஆகியோரின் கடமைகளைச்செய்வதில் அவர்கள் பொழுது



சரியாகிவிடும். "இத்தனை வேலைகளுக்கு மத்தியில் உணவு உண்ண எங்கே நேரம் கிடைக்கிறது?" என்று கூறுவார்கள்.

முக்கியமாக பெண்கள் காலையில் உணவு உட்கொள்வது மிகமிக அவசியமானது.

காலையில் வயிறு காலியாகிவிடுகிறது. காலியான அந்த இடத்தை நிரப்ப ஏதாவது உள்ளே போகவேண்டாமா? காலையில் எழுந்ததும் நீராடி, அலங்காரம் செய்து பொலிவுடன் காட்சி அளிக்கும் பெண்கள், தங்கள் உடலுக்குள் இடம் காலியாகி- 'ஏதாவது வருமா'? என்று ஏங்கிக்கொண்டிருப்பதை நினைத்துப்பார்க்க மறந்து விடுகிறார்கள்.

நாம் உண்ணும் உணவை எதிர்பார்த்து பல சுரபிகள் 'வழிமேல் விழி வைத்து'க் காத்துக் கிடக்கின்றன. ஏதாவது உள்ளே போனாலும் போகாவிட்டாலும் அவை தம் கடமையைச் செய்கின்றன.

உணவுக் குழாய்க்குள் உணவு புகுந்ததும் சில சுரபிகள் சுரக்கின்றன; உணவுடன் சேர்ந்து ஜீரணப்பைக்குள் புகுந்து உணவை சக்தியாக மாற்றும் பணியில் ஈடுபடுகின்றன. இன்னும் சில சுரபிகள், உணவைக் காணாமலே இயல்பாக சில வகைச் சுரப்புக்களை வெளிவிடுகின்றன. இத்தகைய சுரப்புக்கள் உணவைக் காணாவிட்டால், ஆங்காங்கே தேங்கி நின்றுவிடுகின்றன. இவை குடல்களின் சுவர்களிலும் ஒட்டிக் கொள்வதனால் அவ்விடங்களில் புண்களையும் உண்டு பண்ணிவிடுகின்றன. குடல் புண் (அல்சர்) தோன்றுவதற்கு இதுவும் காரணமாகும்.

## உடலுறுதி தேவை

பெண்களுக்கு உடலுறுதி மிக மிக அவசியம். பத்து மாதங்கள் இன்னுமொரு ஜீவனைத் தங்கள் வயிற்றில் சுமக்க வேண்டியவர்கள். அந்த உயிருக்கும் வேண்டிய சகல ஊட்டச்சத்தையும் தங்களிடமிருந்தே பங்கிட்டுக் கொடுக்கவேண்டிய பொறுப்பும் பெண்களுக்கு இருக்கிறது என்பதை மறந்துவிடலாகாது.

உலகெங்கணுமுள்ள போஷாக்கு நிபுணர்களின் ஏகோபித்த முடிவு- ஒரு நாளில் எத்தனை தடவை உண்டபோதிலும், காலை உணவே மிக முக்கியமானது என்பதே. தானிய உணவுடன் பாலும் பருகி வந்தால் விட்டமின் 'B' யும் எலும்புகளுக்கு உறுதி தரும் சுண்ணாம்புச் சத்தும் இவற்றிலிருந்து பெறப்படுகிறது.

நரம்புகளுக்கு உடனடியான சுறுசுறுப்பைக் கொடுத்து, அதற்கு ஈடாக அதே நரம்புகளை இரட்டிப்பு சோர்வடையச் செய்யும் தேனீர், காப்பி ஆகிய பானங்களைக் குறைத்துக் கொள்ளவேண்டும்.

மேலை நாட்டுப் பெண்கள் மதுபானம் அருந்துவதுடன் புகைத்தலிலும் ஈடுபடுவதனால், பெண்கள் அப்பழக்கங்களையும் விட்டு விடுவதே நல்லதென ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

போதுமான அளவு தண்ணீர் அருந்துவதையே நிபுணர்கள் சிபார்சு செய்கின்றனர். பழரசங்களையும் பருகலாம்.

## ஒரு நாள் பட்டினி

வாரத்தில் எல்லா நாட்களிலும் 'தாராளமாக' உண்டு விட்டு, வாரத்தில் ஒரு நாள் முழுப்பட்டினி இருப்பது நல்லது என்று பெரும்பாலானோர் கருதுகின்றனர். ஆனால் அண்மைக்கால ஆய்வுகளின்படி பட்டினி கிடந்து உடல் பருமனைக் குறைக்கவோ, கொழுப்பைக் கரைக்கவோ, எடையைச் சீர்செய்யவோ முடியாது.

"ஒரு நாள் முழுவதும் உபவாசம் இருந்தவருக்கு அந்த ஆயாசத்தைத் தீர்க்க அடுத்த நாள் மேலதிகமாக உண்ண வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது. வயிற்றை நிரப்புவது அல்ல உணவின் பயன்; தரமானவற்றை அளவுக்கு ஏற்றபடி சமன் செய்வது தான் பயன் தரும். வாரத்தில் ஒரு நாள் உண்ணாவிரதத்தை மேற்கொள்ளுவதைவிட ஒரு நாளோ இரு நாட்களோ மென்மையான உணவுகளை மட்டும் உண்டு பழக்கப்படுத்திக் கொள்ளலாம்."

இக்கருத்தைக் கூறுபவர் பிரிட்டிஷ் சத்துணவுக் கழக நிபுணரான விண்டெல் கொஸ்ரெயின்.

# பாதணிகள் வாங்கப் பதமான நேரம்!

செயற்கைத் தோலின் உபயோகம் அதிகரித்துவிட்ட இக்காலத்தில்- இயற்கை- மிருகத்தோல் பாதணிகள் கிடைப்பது அரிதுதான். தோலால் ஆன காலணிகள்தான் பொதுவாக கால்களுக்குப் பிரச்சனை தராதவை. செயற்கைத் தோல் பாதணிகள் சிலருக்குப் பொருந்துவதில்லை, குதிகால் வலி, ஆணி போன்ற உபாதைகளை இவை தரக்கூடும். செருப்பு அல்லது சப்பாத்து பொருத்தமாக அமையாவிட்டால் தொல்லைதான்.

பாதணிகள் வாங்கும்போது கவனிக்க வேண்டியவை:

பாதணிகளை வாங்குவதற்கும் ஒரு நேரம் உண்டு. மாலை வேளைதான் இதற்கு உகந்தது. பாதங்களிலுள்ள உயிர்மங்கள் அப்போதுதான் முழு வளர்ச்சி பெற்று பாதங்களும் சற்றுப் பருமனாக இருக்கும். பகலில் பாதங்கள் சற்றுச் சிறுத்துக் காணப்படும். இக்காலங்களின் பாத அளவுக்கு ஏற்றமாதிரி பாதணியை வாங்கினால், மாலையானதும் கால்கள் பாதணிகளால் இறுக்கப் பட்டுவிடும்.

காலையில் பள்ளிக் கூடங்களுக்குச் செல்லும் மாணவர்களோ அலுவலகங்களுக்குச் செல்லும் பெரியவர்களோ, காலையில் அணிந்த பாதணிகள் மாலையானதும் உபத்திரவம் கொடுப்பதை அனுபவரீதியாகக் கண்டிருக்கலாம்.

* பாதணிகளை வாங்கும்போது கால் விரல்களுக்கும் பின்குதிக்குமிடையில் சிறிதளவு இடைவெளி இருக்கக் கூடியதாகப் பார்த்து வாங்குங்கள். மிகவும் இறுக்கமான ஒரு பாதணியை பெரும் பிரயத்தனப்பட்டு பாதங்களில் மாட்டிவிட்டு, "இதுதான் உங்களுக்கு ஏற்ற அளவு," என்று கடைக்காரர் கூறுவார்.

"மிகவும் இறுக்கமாக இருக்கிறதே!" என்று நீங்கள் சொன்னால், "போட்டு நடக்க நடக்கச் சரியாகிவிடும்!" என்று உங்களை நம்பவைத்து விடுவார். கடைக்காரர் சொன்னதிலும் ஓர் உண்மை இருக்கலாம். ஆனால் அதனையே முற்றாக நம்பி புதுச் செருப்பிடம் 'கடி வாங்கி' கஷ்டப்படாதீர்கள்!



* தோலாலானதோ இரப்பரினாலானதோ அல்லது செயற்கைத் தோலினாலானதோ- எதுவானாலும் கூடுமானவரை மென்மையானதாகப் பாதணி இருக்க வேண்டும்.
* வெயில் காலங்களில் இரப்பராலான பாதணிகளை வெளியில் போகும்போது பயன் படுத்துதல் நல்லதல்ல.

# எப்படி எப்படி குளிப்பது எப்படி?



குளிப்பதில் சில விஷயங்கள் இருக்கின்றன. எப்போது- எப்படி குளிக்க வேண்டும் தெரியுமா உங்களுக்கு?

* காலை, மாலை இரண்டுமே குளிப்பதற்குச் சரியான நேரம். இடைப்பட்ட நேரங்களில் குளிப்பது நல்லதல்ல.
* காய்ச்சல், கண்நோய், அஜீரணம் போன்றவை இருக்கும்போது குளிக்காதீர்கள்.
* நன்றாக வியர்த்திருக்கும் போதும், உணவு சாப்பிட்ட உடனேயும் குளிக்காதீர்கள்.
* எண்ணெய் தேய்த்து சிறிது நேரம் கழித்துக் குளிப்பதே உடலுக்கு நல்லது. அதுவே உடலுக்கு ஆரோக்கியத்தையும், சுகத்தையும் கொடுக்கும்.
* குளிக்கும் நீரில் சிறிதளவு எலுமிச்சை சாறை விடலாம். அதை விட்டுக் குளித்தால் புத்துணர்ச்சி கிடைக்கும்.
* சோப்பை அதிகம் பயன்படுத்துவது உடலுக்கு நல்லதல்ல. தோலில் இருக்கும் எண்ணெய்த் தன்மை வறண்டு போய் விடும்.
* வாசனைப்பொடி, கடலை மாவு போன்றவைகளைத் தேய்த்து அழுக்கையும், எண்ணெயையும் போக்கலாம்.
* சோப்புப் போட்டு உடலைத் தேய்க்கும் போது, கழுத்து, கழுத்தின் பின்புறம், கை, கால்கள், காது, அக்குள் பகுதி, நகங்கள் போன்ற அழுக்குப் படியும் பகுதிகளில் அழுந்தத் தேய்த்துக் குளிக்க வேண்டும்.

# இல்லறம் சிறக்க....

புதிதாகத் திருமணமான இளந்தம்பதியர் இனிய இல்லறம் நடத்த ஏழு யோசனைகளை நீதிபதி சபாத் தெரிவிக்கிறார். பல்வேறு குடும்ப வழக்குகளையும், விவாகரத்து வழக்குகளையும் ஆராய்ந்த நீதிபதி சபாத், பின்வரும் யோசனைகளை இளம்தம்பதியினருக்குத் தெரிவிக்கிறார்:



1. நீங்கள் குடிபுகுந்துள்ள வீடு சிறிய அறையாக இருந்தாலும், குறையேதும் சொல்லாமல், உங்கள் இல்லம் என்பதை நினைவில் நிறுத்திக்கொள்ளுங்கள்.
2. சிறிய சச்சரவுகளைத் தவிர்த்துவிடுங்கள். பெரிய சண்டைகள் தானே ஒழிந்துவிடும்.
3. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் பழகுங்கள். சகிப்புத்தன்மை விவாகரத்தை விரட்டியடிக்கும்.
4. ஒருவருக்கொருவர் இரக்கப்பட்டுக் கொள்ளுங்கள். பரஸ்பர நம்பிக்கையே இல்லறத்தை வலுவூட்டும்.
5. உணவை உண்ணும் முன்போ, அல்லது உண்ட பின்போ, உடனடியாக குறை சொல்லாதீர்கள். சமயம் பார்த்து, சொல்லப்படும் குறை திருத்தப்பட்டு நிறையாகி விடும்.
6. கணவன், மனைவி வீட்டாரையும், மனைவி கணவன் வீட்டாரையும் அன்புடன் நடத்த வேண்டும். அவர்களைப் பற்றிக் குறை கூறி, உங்களுக்குள் விரிசலை ஏற்படுத்திக் கொள்ளவேண்டாம்.
7. இரவுத் தூக்கத்திற்கு முன் அன்றைய தவறுகளை இருவரும் மன்னிக்கவும், மறக்கவும் முயற்சி செய்யுங்கள். பிறகென்ன உங்கள் இல்லறம் நல்லறம் தான்!

# லேடீஸ் ஸ்பெஷல்

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**பி. ரேணுகா**
**46, லோறிஸ் வீதி, கொழும்பு-04.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** BW

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 28-06-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# பொடுகை விரட்ட என்ன செய்யலாம்?

பெண்மில் பலருக்கு எப்போதும் தலையிலேதான் கையிருக்கும். விரல்களால் சதா தலையைச் சொறிந்து கொண்டே இருப்பார்கள். பலர் ஒன்று கூடும் இடங்களிலும்-பிறர் தம்மைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்ற உணர்வே இல்லாமல்-தங்கள் பாட்டுக்கு தலையில் சொறிந்து கொண்டே இருப்பார்கள்.

இதற்குக் காரணம் என்ன?

தலையில் பொடுகு பிடித்துவிடுவதுதான்!

தலையிலுள்ள நீர்த்தன்மை வற்றிவிடுவதும் பொடுகு ஏற்படுவதற்கு ஒரு காரணம் எனலாம்.

பொதுவாக கொழுப்புச் சத்து என்றால் எவருக்கும் பிடிப்பதில்லை. ஆனால் ஓரளவு கொழுப்பும் மனிதனுக்குத் தேவை. ஈரலிப்பும் கொழுப்பும் முற்றாக வற்றிவிட்ட நிலையில் பொடுகு தோன்றுகிறது.

பெண்களுக்கு ஆண்களைவிட தலையில் முடி அதிகமாக இருப்பதனால் வியர்வையும் அதிகமாகி விடுகிறது. வெளியேறிய வியர்வை சீக்கிரம் வற்றி விடுகிறது. எஞ்சிய ஈரப்பதத்துடன் தூசியும் சேர்ந்து அதுவே மண்டையில் ஒட்டிக் கொள்ளுகிறது.



ஆரம்பத்தில் இந்தப் பொடுகைக் கட்டுப்படுத்தாவிட்டால் பிடரி, முதுகு, நெற்றி என்று ஏனைய பகுதிகளுக்கும் பரவ ஆரம்பித்துவிடும். தலைமுடி வரட்சியினால் பொடுகு பரவத் தொடங்கினால் நுண்கிருமிகளின் மேய்ச்சல் ஏற்பட்டு, சுலபமாக அப்பொடுகை அகற்ற முடியாமல் போய்விடும். இதனால் முடிகள் கொட்ட ஆரம்பித்து விடும் அபாயமும் இருக்கிறது.

தலைக்கு தேய்காய் எண்ணை தேய்த்து வந்தால் முடியும் வளரும், இலகுவில் அவை கொட்டாது. வாரத்தில் இருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பது தலைக்கு மட்டுமல்ல, உடலுக்கும் நல்லது. தலையில் வரட்சி ஏற்படாது; உடலும் குளுமையாக இருக்கும். வரட்சியான தேகமும் பளபளப்பாகும்.

கருவேப்பிலையை தினசரி உணவில் சேர்த்து வந்தால் கொழுப்பு அளவாகச் சேர வாய்ப்புண்டு. அன்றாட உணவில் 15 விழுக்காடு கொழுப்பு இருக்க இது உதவும்.

பொடுகைப் போக்குவதற்கு சோப்பு உதவாது. சோப்புத் தேய்த்துக் குளித்தால் சில சந்தர்ப்பங்களில் பொடுகு அதிகரிக்கவும் கூடும்.

பொடுகுள்ள ஒருவர் பயன்படுத்தும் டவலையோ அல்லது சீப்பையோ வேறொருவர் பாவித்தால் அவருக்கும் பொடுகு தொற்றிவிடும்.

பொடுகை நீக்கச் சித்தவைத்தியர்களால் பரிகாரங்களும் கூறப்படுகின்றன. எலுமிச்சம் பழத்தை தணலில் சூடுகாட்டி இளஞ்சூட்டோடு தலையில் தேய்த்து கால் மணி நேரத்தின்பின்னர் குளிக்கலாம்.

காய்ந்த வேப்பங்கொட்டை 60, மிளகு 15, சிறிதளவு மஞ்சள் ஆகியவற்றை பாலில் ஒரு மணி நேரம் ஊற வைத்து அரைத்து, அதனை தலையில் நன்றாகத் தேய்த்து அரைமணி நேரத்தின் பின் குளிக்கலாம்.

சித்தவைத்தியர்களிடமும் பொடுகை நீக்க பல மூலிகை மருந்துகள் உள்ளன. மேலை நாட்டுக் களிம்புகள், தைலங்கள் போன்றவை பக்க விளைவுகளை ஏற்படுத்தலாம். ஆகவே சித்த வைத்திய முறைகளைப் பின்பற்றுவதே பயன்தரும்.

# தக்காளி– தக்காளி

தக்காளி-பழவர்க்கத்தையும் சார்ந்து நிற்பதுடன் காய்கறி இனத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. சில காலங்களில் சாதாரணமாக மலிவாகக் கிடைக்கும் தக்காளிப் பழங்களை பச்சையாக உண்ணலாம்; அல்லது சாறு பிழிந்து சீனி, சுவைக்கேற்ப எலுமிச்சைச்சாறும் விட்டுப் பருகலாம்.

புற்று நோய்க்கான விஷக் கிருமிகளை எதிர்த்துப் போராடும் ஆற்றல் தக்காளிக்கு இருக்கிறது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். குறிப்பாக புகைபிடிப்பவர்கள் தக்காளிப்பழங்களை அதிகம் பச்சையாகவே சாப்பிடலாம். போக்குவரத்துச் சாதனங்களுக்கும் புகையை அதிகம் சுவாசிப்போருக்கும் தக்காளிப்பழங்கள் உகந்தவை. இதில் விட்டமின் A மற்றும் C ஆகியவை நிரம்பப் பொதிந்துள்ளன. நார்ச்சத்தும் கணிசமான அளவு உண்டு.


**தினமுரசு–அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி**

**தினமுரசு– அருள் ஜுவலர்ஸ்**
**பரிசுக் கூப்பன் இல 16**

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

# தேன்கிண்ணம்

## 'சுத்து' உலா

குப்பி
விளக்கில்
குந்தி இருந்து....
-o-
ஷெல்களுக்கும்
"பூட்ஸ்"களுக்கும்
தெரியாமல்
பங்கர்
பள்ளிகளில்
படித்து....
படுத்து....
-o-
வெள்ளை
உடைகளை
பனங்கொட்டை
சலவை செய்து....
-o-
ஒரு
கொப்பியின் விலைக்கு
ஐந்து
காகிதங்களை
நுகர்ந்து...
-o-
சைக்கிள்களில்
பலமைல்களையும்,
நடந்து சில
கிலோமீட்டர்களையும்
தாண்டி...மீண்டும்
திரும்பி.....
-o-
தடைகளால்
கண்ணீர் மை கொண்டு
விடைகள் எழுதி....
-o-
வெட்டுப்புள்ளியின்
விஷப்பல் தீண்டியும்...
சாகாத ஆச்சரிய
சிறுசுகளுக்கு
தென்புலச்சுற்றுலா
நல்ல
'பரிசு'!!

பாலகமலன், கிழக்கு வளாகம்.

## ஓய்ந்துபோன மானுடம்

'யுத்தம்-'
முச்சந்தி நாற்சந்திகளில்
பொழுதுபோக்கு
பேச்சு!
**
'உயிர்ப் பலிகளின் எண்ணிக்கை-'
கிரிக்கட் ஆட்டத்தின்
ஓட்டங்கள்!
**
'ஆட்டிலெறிகளின்
வேட்டுச்சத்தம்-'
பட்டாசுகளின் ஒலி!
**
'வடக்கு கிழக்கு-'
பலிபீடங்களின்
உறைவிடம்.

இஸ்லாஹிய்யா
எம். ரிஸ்வி.

## கண்ணீர் அருவிகளால் கணிப்பிடப்படும் துயரம்

நிசப்தத்தில்
நிலைத்திருந்த காடு,
குருவிகளின்
துயிலையும் நிம்மதியையும்
பேணிக் கொடுத்தது!
***
கரைகளினூடாக வந்த இருள்,
நதிக்குள் விழுந்து
நதியைப் போர்த்தியது!
***
எனக்கு முன்னால்
போய்த் தேய்ந்திருந்த
பாதச் சுவடுகளைப்
பார்த்தவாறு
எனது பாதங்களும்-அந்த
ஆற்றின் கரையினூடாக
முடிவைத் தேடிப்போகிறது!
***
உனது காதலின்
கடனடைத்து
கடந்து போன-எனது
சுவாசமெல்லாம்
சாபமாகின;
கழிந்த வாழ்க்கை
கண்ணீர் விட்டது!
***
எனது துயரத்தைக் கேட்டு,
நட்சத்திரங்களை இழந்த
இருட்டு வானமும்-
வேர்கள் அறுபடு முடியாத
ஆழ்ந்த பூமியும் கூட
அனுதாபம் கொண்டன!
எனது கண்களுக்கு
ஒளி தரவும்,
எனது கால்களுக்கு
வழி விடவும்
விருப்பம் கூறின!
***
பூக்களின்
வாசம் சுமந்த காற்றோடு
வசந்தம்
வந்து போய்க் கொண்டிருந்தது!
துயரம் நிறைந்த
கனவுகளோடு-என்
கால்கள் நடந்தன!
***
ஆறுதல் நிரம்பிய
உலகுக்குப் போய்ச் சேரும்
காலடிச் சுவடுகளைக்
காண முடியவில்லை!
***
நீண்ட காலமாக
என் இதயத்தில்
அன்பின்
பாத ஸ்பரிசங்கள்
படாத பாதை,
அழிந்து போயுள்ளது!
***
இறந்து போன உனை
வாழ்பவர்களின் மத்தியில்
விசாரித்துப் பார்க்கிறேன்!
எந்தச் சமாதியின் பின்னால்-நீ
மறைந்து வாழ்வாய்?
எந்தப் புதைகுழியைவிட்டு-நீ
எழுந்து வருவாய்?
***
வடக்கிலிருந்து தெற்கிற்கும்
கிழக்கிலிருந்து மேற்கிற்குமாய்
நான் தேடித்திரிந்தாலும்,
நீ கிடைக்கப் போவதில்லை!
எனக்குத் தெரியும்...!
உனையடைய நான்,
ஜென்மத்தைக் கடந்து,
மண்ணறையைத் தாண்டி
வரவேண்டியுள்ளது!
***
எனது துன்பத்தை
நிலவின் ஒளிகொண்டோ,
நட்சத்திர ஒளி கொண்டோ
அளந்து காட்ட முடியாது!
அந்தத் துன்பம்-
கண்ணீர் அருவிகளால்
கணிப்பிடப்படும் தூரம்;
பெருமூச்சுகளால்
அளவிடப்படும் ஆழம்!

பஹீமா ஜஹான்-
மெல்சிரிபுர.

## உயிர்த்த ஞாயிறு

சிலுவைகள்
தினம் தினம்
உதயமாகின்றன.
++
அதில் மனிதம்
என்ற புனிதம்
அறையப்படுகின்றது.
++
அதன் தலைகளில்
பாவங்கள் முட் கிரீடங்களாய்
குட்டப்படுகின்றன!
++
அதன் குருதிகளில்
சோகமும் துன்பமும்
குளிப்பாட்டி குதூகலிக்கின்றன.
++
சைத்தான்களும்
மனிதர் எனும் குட்டிப்பிசாசுகளும்
துள்ளியாடுகின்றன.
++
ஆனால், ஏக்கப்பெருமூச்சுடன்
சிலர் எதிர்பார்க்கின்றனர்-
உயிர்த்த ஞாயிறை.
++

புங்கையூர் புகழேந்தி.

## கிரிக்கெட் அழகி

உன்
பார்வைப் பந்துகளை
மெதுவாக வீசு...!
காதல் விக்கட்டுக்கள்
சரிந்து போகின்றன!

உன்-
ஞாபக ஓட்டங்களை
இனிக் குவித்து(க்)
கொள்ளாதே-என்
இதய அரங்கினில்!

உன்
து(ர)டுப்பு
ஆட்டத்தை-
இனி நிறுத்திக் கொள்!
இல்லையேல்
உன்-
சுழல் புன்னகையால்
கனவுகள் தான்
குவிந்து கிடக்கின்றன-
நம் எல்லைகளையும்
தாண்டிக்கொண்டு...!!

மருதமுனை விஜிலி.

## தோஷம்

கடுமிருட்டாய் நீள்கிறது மாலை;
கண நேர வாழ்வென சுருங்கிற்று
இத்தீவு!
***
பொட்டல் வெளியில்
தனித்துவிடப்பட்ட குழந்தையென
தமிழனே உன் தலைவிதி மாறிற்று!
***
செத்து விழுந்த பிணங்களைக்காவி,
மண்கெல்லி புதைத்தாய்
இனியுன் காயங்களைத் தேற்ற
யாருண்டு?
***
புறாக்களின் சிறகிலிருந்து
பாம்புகள் உதிர்கின்றன;
சமாதானத்தின் தோழன் பாம்புகளாம்!
***
முட்டாளே!
அவர்கள் சொல்வதைக்கேள்...!
ஒரு கட்சியமை...!
பாம்புகள் தோழரெனக் கோஷமிடு!
***
போரினது கொடுக்கினுள்
அகப்படும் உன்னினத்தார்
வாழ்வு செழிக்குமென அறிக்கையிடு!
***
பிறகென்ன...?
உனக்கொரு
நாற்காலி,
அங்கிருக்கும்;
போய்க்குந்து!
***

என்.சுஹா-
கள்-எலிய

## பரிசு மழையில் நனையும் அதிஷ்டசாலிகள்

முரசின் பரிசுமழைப்போட்டிக்கு வந்து குவிந்த கூப்பன் மழையில் மூச்சுத் திணறிப் போனது. அசத்திவிட்டீர்கள் போங்கள். பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் 200 பேரின் பெயர் விபரங்கள் தொடர்ந்து வெளியாகும். முதல் 100 பேரின் பெயர் விபரங்கள் கடந்த வாரங்களில் வெளியாகியிருந்தன. அடுத்த 20 பேரின் பெயர் விபரங்கள் இதோ:

(101) டக்ளஸ் எபிரகாம்
28/5, எலே வத்த ரோட்,
வெளிசற ரோட்- ராகம.

(102) டி.ஏ.புஸ்பராஜ்
42/10, உசைன் எவன்யூ,
மாத்தளை.

(103) மீ.பாத்திமா சிஹாமா
இல.9, சரீப் புறொக்டர் வீதி,
காத்தான்குடி-02.

(104) எம்.ஐ.எம்.நிஸார்
196, பள்ளம்,
மல்வானை,

(105) திருமதி. மே.பி.சௌந்தரநாயகம்
இல.116, பிக்கறின்ஸ் ரோட்,
கொட்டாஞ்சேனை.கொழும்பு-13.

(106) யோ.மதியழகன்
I.D.5A, விகாரை வீதி,
திருகோணமலை.

(107) செல்வி.ஷிபானா சுபைர்
32, பிரதான வீதி,
கலஹா.

(108) ம.பிரசன்னா
21/3, ரிவருடல் ரோட்,
அணிவத்த, கண்டி.

(109) எம்.எஸ்.எஃப் ரியாஸா
60, எலமல்தெனிய,
முறுதகஹமுல.

(110) எம்.ஆர்.ஏ.ரிவ்டி ரியால்
65, மூர்வீதி,
களுத்துறை (தெற்கு).

(111) செ.கதிரவேற்பிள்ளை
பெதஸ்தா டிஸ்பென்சரி,
உடப்பு-6.

(112) மு.முகுந்தன்
வன இலாகா, பசறை வீதி,
பதுளை.

(113) சி.சத்தியசர்வினி
இல.96, குமாரகோவில் வீதி,
கூளாவடி, மட்டக்களப்பு.

(114) திருமதி சாந்தி ஒலிவர்
72, கம்பொல ரோட்,
நாவலப்பிட்டிய.

(115) பா.உதயமலர்
ஆலையடி வேம்பு,
அக்கரைப்பற்று-07.

(116) பொ.நீரஜா
480/92, றொக்சி கார்டன்,
கொழும்பு-6.

(117) ஏ.பி.அலோசியஸ்
36/4, சென் ஜோசப் மாவத்தை,
நீர்கொழும்பு.

(118) இ.மோகனசரன்
43/17, மகால் வீதி,
சிலாபம்.

(119) ரி.சுரேந்திரன்
VIA-F-SO-JACONO-34
PALERMO-90144, ITALY.

(120) வே.செல்வரத்தினம்
14.A, தும்பிரிகிரி ரோட்,
அட்டன்.

(ஏனைய விபரங்கள் அடுத்தவாரம்)

## அந்த நாள் ஞாபகம்

செல்வி ஜெயலலிதாவுடன் இருப்பவர்தான் சோபன்பாபு. கன்னட முன்னணி நடிகர். ஜெயலலிதா வீட்டு நூலகத்தில் அன்று எடுக்கப்பட்ட படம் இது. எம்.ஜி.ஆருடன் பிணக்குப்பட்டுக்கொண்டு சென்ற ஜெயலலிதா சோபன்பாபுவுடன் நட்பாக இருந்தார்.



பின்னர் மீண்டும் எம்.ஜி.ஆருடன் நட்பு ஏற்பட்டதும் சோபன் பாபு ஒதுங்கினார்.

சமீபத்தில் ஜெயலலிதா சார்பாக ஒரு திருமண வீட்டில் சோபன் பாபு கலந்து கொண்டதாக தகவல். மறுபடி மலர்ந்த நட்பு.

## இந்த வாரம் உங்கள் பலன்

(22.06.1997 தொடக்கம் 28.06.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன், புதன். |
| கர்க்கடகம் | - வெள்ளி. |
| சிம்மம் | - இராகு. |
| கன்னி | - செவ்வாய். |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |

★ சந்திரன்- மகரம், கும்பம், மீனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் விரயம், காரியத்தடை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், உயர்ந்த நட்பு. | பி.ப. 1 மணி |
| புதன்- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- பலவித பேறு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் மந்தம், கடன் படல். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- பொருள் இழப்பு, மனக் கவலை. | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- வீண் முயற்சி, பிரயாண மிகுதி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- உயர்ந்த நோக்கம், அந்நியர் சகவாசம். | பி.ப. 2 மணி |
| சனி- பலவித பேறு, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், ஆடம்பர வாழ்க்கை. | பகல் 12 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், இனசன நன்மை. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- உறவினர் பகை, மனக் கவலை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, பண வரவு. | பகல் 12 மணி |
| சனி- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- பலவித பேறு, வீண்குறை கேட்டல். | பி.ப. 1 மணி |
| புதன்- தொழில் பேறு, பயனுள்ள செயல். | பகல் 12 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, கடன் படல். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பொருள் பேறு. | பி.ப. 2 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், கௌரவக் குறைவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- கடன் தொல்லை நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- மன மகிழ்ச்சி, தொழில் விருத்தி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, இனசன நன்மை. | பி.ப. 1 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, அந்நியர் பகை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| புதன்- உறவினர் பகை, வீண் மனஸ்தாபம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- காரியானுகூலம், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| சனி- செலவு மிகுதி, தொழில் மந்தம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, ஆடம்பரச் செலவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பி.ப. 2 மணி |
| புதன் - தொழில் கஷ்டம், அந்நியர் சகவாசம். | பகல் 12 மணி |
| வியாழன்- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | பி.ப. 1 மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், மனக்கவலை நீங்கும். | பகல் 12 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், அந்நியர் சகவாசம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் 11 மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- கடன்தொல்லை நீங்கும், பயனுள்ள செயல். | பகல் 12 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை. அந்நியர் சகவாசம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- இனசன நன்மை, உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பயனுள்ள செயல். | பி.ப. 1 மணி |
| புதன்- காரியானுகூலம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| சனி- தொழில் கேடு, உயர்ந்த எண்ணம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, உயர்ந்த நட்பு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- காரியத் தடை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், மனக்கிலேசம். | பகல் 12 மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், பயனற்ற செயல். | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், அந்நியர் உதவி. | மு.ப. 9 மணி |
| புதன்- இனசன நன்மை, காரியசித்தி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- காரியச் சித்தி, பணச் செலவு. | பகல் 12 மணி |
| சனி- வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக் கவலை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- உறவினர் சகவாசம், காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| புதன்- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | மு.ப. 10 மணி |
| வெள்ளி- கடன்தொல்லை நீங்கும், மன மகிழச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- காரியத்தடை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்

www.padippakam.com





## சைக்கிள்

இரும்பால் செய்த சைக்கிள்-சக்கரம்
இரண்டு கொண்ட சைக்கிள்!
உறுதி மிக்க சைக்கிள்-மிதித்தால்
உருண்டோடும் சைக்கிள்!

வண்ண வண்ண சைக்கிள்-எல்லா
வயதினர் ஓட்டும் சைக்கிள்!
முன் பின் செல்லும் சைக்கிள்-போட்டியில்
முதலில் வெல்லும் சைக்கிள்!

பழகுதற்கெளிதாம் சைக்கிள்-மேடு
பள்ளம் ஏறும் சைக்கிள்!
பழுதே அடையாச் சைக்கிள்-காணப்
பரவசம் ஊட்டும் சைக்கிள்!

காற்றுப் பிடிக்கும் சைக்கிள்-மக்மில்லன்
கண்டுபிடித்த சைக்கிள்!
ஏற்ற விலையில் சைக்கிள்-விரும்பி
எவரும் வாங்கும் சைக்கிள்!

-ஜி.ஜெயச்சந்திரன்-

அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி உரைப்பது கேட்டிரோ!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## கர்வம் கொள்ளாதே!

ஒருநாள் ஒரு காளைமாடு புல்வெளி ஒன்றில் மேய்ந்து கொண்டிருந்தது. அப்போது அந்தப் பக்கமாக ஒரு குட்டித்தவளை ஒன்று வந்து கொண்டிருந்தது.

தற்செயலாக காளைமாட்டின் காலில் மிதிபட்டு குட்டித்தவளை இறந்துவிட்டது. இவற்றை எல்லாம் சிறிது தொலைவில் இருந்த குட்டித்தவளைகள் பார்த்தன.

அந்தக் குட்டித்தவளைகள் தங்கள் தாயிடம் ஓடிச்சென்று தாம் கண்டதைக் கூறின.

"அம்மா! அம்மா! நம்மோடு விளையாடும் ஒரு குட்டித்தவளை, ஒரு காளை மாட்டின் காலில் மிதிபட்டு இறந்துவிட்டது. எமது நண்பனை மிதித்துக் கொன்ற அந்தக் காளைமாடு எவ்வளவு பெரிதாக இருந்தது. தெரியுமா?" என்று ஆச்சரியத்துடன் கூறின.

அதைக் கேட்ட தாய்த்தவளை வீண் கர்வம் கொண்டது. அந்தக் காளையைப்போல் தானும் பெரிதாகிக் குழந்தைகளுக்குக் காட்ட நினைத்தது.

உடனே மூச்சைப் பிடித்து, வயிற்றை உப்பிப் பெரிதாக்கி தன் குழந்தைகளைப் பார்த்து,

"அந்தக் காளை இவ்வளவு பெரிது இருக்குமா?" என்று கேட்டது.

தவளைக்குட்டிகள், தாய்த்தவளையை மேலும் கீழும் பார்த்துவிட்டு,

"இல்லை அம்மா... இன்னும் பெரிசு," என்று சொல்லின. தாய்த்தவளை இன்னும் கொஞ்சம் வயிற்றைப் பெரிதாக்கி,

"இவ்வளவு இருக்குமா?" என்று கேட்டது.



"ம்கூம், இன்னும் பெரிசு, உன் வயிறு வெடிக்கின்ற அளவு இன்னும் பெரிதானாலும் அந்தக்காளையின் உருவத்திற்கு ஈடாக முடியாது," என்று ஒரு குட்டித்தவளை சொன்னது.

அதைக் கேட்ட தாய்த்தவளைக்கு இன்னும் கர்வம் அதிகமாயிற்று. தன் பலம் கொண்ட மட்டும் காற்றை உள்ளிழுத்தது. வயிறு ஊதிக்கொண்டே போனது.

வயிறு ஊதி ஊதி இறுதியில் படீர் என்று வெடித்தது. தனது கர்வத்தினால் உயிரை மாய்த்துக் கொண்டது, தாய்த் தவளை.

## வாரம் ஒரு நாடு



1990 மே மாதம் வடக்கு- தெற்கு யேமன்கள் இணைந்து யேமன் நாடாகின.

### யேமன்

தலைநகர்-சனா
வாணிபத்தலைநகர்-ஏடன்
பரப்பு - 5,31,000 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 1.45 கோடி
மொழி - அரபு
எழுத்தறிவு - 38%
சமயம் - இஸ்லாம்
நாணயம்- றியால்
தனிநபர் வருமானம் - 540 டொலர்

**அமைவிடம்:**
இது அரேபியத் தீபகற்பத்தின் தென் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது.

**வரலாறு:**
1962ல் வடக்கு யேமன் உருவானது. ஏடன் என்றழைக்கப்பட்ட தெற்கு யேமன் பிரிட்டனிடமிருந்து 1967ல் சுதந்திரம் பெற்றுத் தனி நாடாகியது. முன்னர் இதிகாச நாயகியான ஷீபா ராணி யேமனை ஆண்டதாகக் கூறப்படுகிறது.

**பொருளாதாரம்:**
எண்ணெய்வளத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம். விவசாயத்தின் மூலமும் பெருமளவில் வருமானம் கிடைக்கிறது. கோப்பி, பேரீச்சம்பழம், பருத்தி, சோளம் போன்றவை முக்கிய விளைபொருட்கள்.

## பைசா கோபுரம்

உலக அதிசயங்களில் ஒன்றான இத்தாலி நாட்டிலுள்ள பைசா நகரத்தில் உள்ளது, சாய்ந்த கோபுரம். இந்தக் கோபுரம் முழுக்க முழுக்க சலவைக்கற்களால் கட்டப்பட்டது. இதன் எடை 14 ஆயிரத்து 500 தொன்கள்.

இந்தக் கோபுரம் ஒரு நாளைக்கு 2.5 மில்லிமீட்டர் சாய்ந்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், கோபுரம் கட்டப்பட்டுள்ள மண் மென்மையாக இருப்பதுதான்.

இதனால் பைசா கோபுரத்தைச் சாய்ந்து விடாமல் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக இராட்சத சிமெண்ட் தூண்களை 150 அடி ஆழம்வரை இறக்கி கோபுரத்தை மேலும் சாய விடாமல் தடுக்கப் பணிகள் நடந்து வருகின்றன.

இதுதவிர, கோபுரத்தைக் கேபிள் கம்பி மூலம் இழுத்துப் பிடித்து மையப் பகுதிக்குக் கொண்டுவரும் வேலையும் நடந்து வருகின்றது.



பைசா கோபுரத்தைப் பார்ப்பதற்காகத் தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். உலக அதிசயங்களில் ஒன்றாக இது திகழ்வதால் பைசா நகரைச் சுற்றி ஹோட்டல்கள், கடைகள், பூங்காக்கள், கேளிக்கைகள் அதிகரித்து விட்டன. இதன்மூலம் பல கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டு வருகிறது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 28.06.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 198
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 196

**பரிசுக்குரியவர்:**
செல்வி மதிவதனி பரமசிவம்,
த.ம.வித்தியாலயம், டில்லரி ப.கணக்கு, டிக்கோயா.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செல்வி பாத்திமா முப்ராஸா உசைன், மா/ ஆமினா ம.வி.மாத்தளை. | எம்.எ.ப். இஜாஸ் அஹமட், க/ அறபா மு.வி.,வஹரங்கொஹ. |
| செல்வி ஜெகநாதன் பற்றீஷியா பல்லவி, இராமகிருஷ்ண மிஷன் ம.வி., கல்முனை. | பி. தியாகரூபன், ஒட்டரி த.வி., டிக்கோயா. |
| எஸ். உமாசுதன், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. | செல்வி பி.எச். நிமந்தி மகேஸ்சிக்கா, தி/க. அக்போபுர மகா வித்தியாலயம், கந்தளாய். |
| எம்.சபிக், க/ வத்தே கெதர முஸ்லிம் வித்தியாலயம், பொல்கொல்லை. | ஏ. பாத்திமா ஸப்றா, ஆயிஷா பாலிகா மகாவித்தியாலயம், அக்கரைப்பற்று. |
| செல்வன் நிரோகிஷன் இராஜமோகன், அரியாலை, யாழ்ப்பாணம். | கமலநாதன் கவிபிரசாத், அ.த.க. பாடசாலை, பாலையூற்று, திருகோணமலை. |

## தகவல் வந்த நேரம்

கிரேக்கர்கள் கி.மு. 49ம் ஆண்டில் பெர்சியர்களைத் தோற்கடித்த வெற்றிச் செய்தியை ஒரு கிரேக்க வீரர் இடைவிடாமல்



40 கிலோமீட்டர் தூரம் ஓடிச்சென்று தனது நாட்டில் அறிவித்தார். இதன் பின்னர் தான் மரதன் ஓட்டப்போட்டி தொடக்கி வைக்கப்பட்டது.



கி.பி. 1492ல் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தாலும், 5 மாதம் கழிந்த பின்னரே அந்தத் தகவல் தெரிந்தது. கொலம்பஸ் பயணம் செய்த கப்பலுக்கு ஏற்பாடு செய்த ஸ்பெயின் அரசி இஸபெல்லாவுக்கு முதன் முதலாக அமெரிக்காவைக் கண்டுபிடித்த செய்தி அறிவிக்கப்பட்டது. அவருக்கு இந்தச் செய்தி கிடைக்க 5 மாதங்கள் பிடித்தன.



அமெரிக்க விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ரோங் நிலவில் இறங்கி நடந்த போது, அந்தச் செய்தி 1.3 வினாடி நேரத்தில் பூமியை வந்தடைந்தது.

## ஜாக்குவார்

ஜாக்குவார் என்பது பூனைக் குடும்பத்தில் சிறுத்தையைப் போலவே அடையாளம் உள்ள இன்னொரு விலங்காகும். சிறுத்தைப் புலியின் உடலில் காணப்படும் அடையாளத்தைவிட ஜாக்குவாரின் அடையாளம் சற்றுப் பெரியதாகவே இருக்கும்.

வளர்ச்சியடைந்த ஒரு ஜாக்குவார் 80 முதல் 85கிலோ எடை வரை இருக்கும். இவற்றின் இனப்பெருக்கத்திற்கென்று குறிப்பிட்ட காலங்கள் எதுவும் இல்லை. 95 முதல் 115 நாட்களுக்குள் கர்ப்பமடைந்த ஜாக்குவார் குட்டியை ஈனும். ஒரேதடவையில் ஒன்றுக்கு மேற்பட்ட குட்டிகளை ஈனும். அதிகபட்சம் நான்கு குட்டிகள்.

2 1/2 ஆண்டுகளில் ஜாக்குவார் வளர்ந்து பெரியதாகி விடுகின்றது. இவை மரத்தில் ஏறுவதில் வல்லவை. செங்குத்தான மரங்களில் கூட குரங்குகளைப் போல ஏறிவிடும். காலில் உள்ள வளைந்த, கூர்மையான நகங்கள் மரத்தைப் பற்றிக் கொண்டு ஏறுவதற்கு உதவிகரமாக இருக்கின்றன.



## விடுகதைகளும் விடைகளும்

1. கண்ணான தோட்டத்திற்கு முள்ளில்லா வேலி.
அது என்ன?
2. மண்ணுக்குள் நெளிபவன், நீருக்குள் போனால் மீனுக்கு இரை.
அவன் யார்?
3. காட்டுக்குள் இருக்கும் கள்ளக்கிடாவுக்குக் கிள்ளிப்பிடிக்க முடியில்லை.
அது என்ன?
4. வாய் இல்லாதவன் வார்த்தைகள் சொல்வான்.
அவன் யார்?
5. வேலிக்கு அந்தப் பக்கம் வெள்ளைக் குதிரை.
அது என்ன?
6. எடுத்துக் கிழித்தால் நெருப்பு, இல்லையேல் இருப்பு.
அது என்ன?
7. கிணற்றைச் சுற்றி வெள்ளைக்கற்கள்.
அது என்ன?
8. அணில் ஏறாக் கொம்பு, அச்சப்படுத்தும் கொம்பு.
அது என்ன?
9. ஓடிவந்து காலைத் தொட்டவன், திரும்பி ஓடுகிறான்.
அவன் யார்?
10. கல்லைக் கண்டால் தண்ணீரைக் காணோம், தண்ணீரைக் கண்டால் கல்லைக் காணோம்.
அது என்ன?

### விடைகள்

1. இமைகள் 2. மண்புழு
3. பேன் 4. தபால்
5. பருத்தி 6. தீக்குச்சி
7. பற்கள் 8. மாட்டுக்கொம்பு
9. கடலை 10. பனிக்கட்டி

தொகுப்பு: ஏ. நஸ்ரின்.



படிப்பகம்




**இதுவரை** தினேஷ்—மைத்ரேயி தம்பதிக்கு சிறந்த தம்பதி என்று விருது கிடைக்க இருக்கிறது. அத்தகவலை மைத்ரேயிடம் மகிழ்ச்சியுடன் சொல்கிறான் தினேஷ். மைத்ரேயிக்கும் பாஸ்கர் என்ற இளைஞனுக்கும் இடையே இரகசியத் தொடர்பு இருக்கிறது. தினேஷை கொல்ல பாஸ்கருடன் திட்டம் போடுகிறாள் மைத்ரேயி. அப்போது ஒரு போன் வருகிறது. போனில் ஒரு பெண்குரல் மைத்ரேயி— பாஸ்கர் தொடர்பை தெரிந்து வைத்து மிரட்ட மைத்ரேயி திகைத்து நிற்கிறாள். **இனி...**

மைத்ரேயி டெலிஃபோனில் முகம் தெரியாத அந்தப் பெண்ணிடம் வெடித்தாள்.

"இதோ பார்... இது என்னோட குடும்பப் பிரச்சனை. இதுல மூணாம் மனுஷியான உனக்குத் தலையிட உரிமை யில்லை... மைண்ட் யுவர் பிசினஸ்."

டெலிஃபோனில் குரல் சிரித்தது.

"நான் உனக்கு மூணாவது மனுஷியா இருக்கலாம். ஆனா நீயும் நானும் ஒரே இனம். புரியலையா.... பெண்ணினம்... ஒரு பெண் தன் தாலிகட்டின புருஷனுக்கு துரோகம் பண்றதை என்னால பார்த்துக் கிட்டு இருக்க முடியாது... ஒண்ணு நீ திருந்தணும்... இல்லே தண்டிக்கப் படணும். நீ தண்டிக்கப்படறதுல எனக்கு விருப்பம் கிடையாது... திருந்தணும்.... அதுக்குத்தான் ஒரு வாரம் அவகாசம் கொடுத்திருக்கேன். ரெண்டு நாள் கழிச்சு மறுபடியும் ஃபோன் பண்ணும்போது நீ எனக்கு நல்ல பதில் சொல்லணும்."

நாளைக்கு போய்க்கலாம்...."

"ஸாரிங்க..."

"இதுக்கெல்லாம் போய் என்ன ஸாரி சொல்லிக்கிட்டு? போய் ரெஸ்ட் எடு மைத்ரேயி... வயித்துவலி ஜாஸ்தியாயிருந்தா சொல்லு, டாக்டர் வனிதா புவனேஸ்வரிக்கு ஃபோன் பண்ணலாம்..."

"அதெல்லாம் வேண்டாங்க... வழக்கம் போல ஒரு மாத்திரையை சாப்பிட்டு கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்தா போதும்." சொல்லி விட்டு அறையை நோக்கி நடக்க ஆரம்பித்த வாங்கத்தான்...."

"காலையில் வரைக்கும் இந்த டெல்லி பயணத்தைப் பத்தி நீங்க சொல்லவே யில்லை...."

"டெல்லியில் இருக்கிற நம்ம ஏஜெண்ட் இப்பத்தான் உடனே புறப்பட்டு வரும்படி பேக்ஸ் கொடுத்தார். போனா- கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்து உடனே டிக்ளரேஷன் வாங்கிடலாம்."

"போய்ட்டு எப்ப வருவீங்க...?"

"எப்படியும் நாளைக்கு சாயந்தரத்

"அனுப்பிட்டேன்.... வந்துட்டிருப்பான்... பை...த....பை டெல்லியிலிருந்து வரும்போது உனக்கு என்ன வாங்கிட்டு வரட்டும்...."

"எனக்கு ஒண்ணும் வேண்டாம்.... நீங்க சீக்கிரமா வந்தா போதும்..."

"நோ... நோ.... நீ எதையாவது கேட்டுத் தான் ஆகணும். அதை நான் உனக்கு வாங்கிட்டு வரணும்..."

"வேண்டாங்க...."

"ஃபாரீன் சாரீஸ் ஒரு டஜன் எடுத்துட்டு வரட்டுமா?"

"சாரீஸ்தான் வார்ட்ரோப் பூராவும் நிரம்பி வழியுதே. சாரீஸை மறந்தும் எடுத்துட்டு வந்துடாதீங்க...."

"சரி வேற என்ன வேணும்...?"


"நீங்க விடமாட்டீங்க..."

"மாட்டேன் சொல்லு..."

"ஒரு ரெபான் கூலிங்க்ளாஸ்.... புருவங்களை மறைக்காத மாதிரி சின்ன சைஸா வேணும்...."

"அவ்வளவுதானே.... வாங்கிட்டு வர்றேன்...."





# உடைந்த இரவு



மறுமுனையில் ரிஸீவர் வைக்கப் பட்டுவிட்டது. மைத்ரேயி யோசனையாய் ரிஸீவரை வைத்துவிட்டு சோபாவுக்கு வந்து சாய்ந்தாள்.

'யார் இவள்?'

'பரிச்சயம் இல்லாத குரல்!'

'ஒருவேளை வேண்டுமென்றே குரலை மாற்றிப் பேசுகிறாளோ...?'

'இவளை யார் என்று எப்படிக் கண்டுபிடிப்பது...?'

யோசனையில் மூழ்கி தத்தளித்துக் கொண்டிருந்த மைத்ரேயியை தினேஷின் குரல் ஈர்த்தது.

"என்ன மைத்ரேயி... எந்தக் கோட்டை யைப் பிடிக்க இந்த யோசனை..?"

கலைந்தாள்.

"ஒண்ணுமில்லை... அப்படியே உட்கார்ந்துட்டேன். நீங்க குளிச்சாச்சா...?"

"ம்.... ஆச்சு! நான் பாத்ரூமுக்குள்ளே நுழையும் போது ஏதோ ஃபோன் வந்த மாதிரி இருந்தது."

"ஆ.... ஆமா...."

"யார்கிட்டேயிருந்து ஃபோன்....?"

"என் ஃப்ரண்ட் ஒருத்தி..."

"கோயிலுக்கு கிளம்பலாமா...?"

"ம்...."

"என்ன டல்லடிக்கிறே...? நான் கம்பெனியிலிருந்து வந்தபோது இருந்த உற்சாகம் இப்போ மிஸ்ஸிங்..."

"அதெல்லாம் ஒண்ணுமில்லை.... மன்த்லி ப்ரீயட் ஆரம்பமாகிற நாட்கள் இது. வயித்துல லேசா வலி..."

"இதை மொதலிலேயே சொல்லி யிருக்க வேண்டாமோ? கோயிலுக்கு வேண் டாம். வேற எங்கயாவது போலாம்...."

"எங்கேயாவது வெளியே போய்த் தான் ஆகணுமா?"

"உனக்கு சிரமமா இருந்தா வேண் டாம்... போய் ரெஸ்ட் எடுத்துக்க.

மைத்ரேயின் மனதுக்குள் டெலிஃபோன் பேசிய பெண்ணின் குரல் சூறாவளியாய் சுழன்றது.

'உன் கணவரோட காதுக்கு விஷயத்தைக் கொண்டுபோறது தவிர வேற வழியில்லை...!'

'ஒரு வாரம் அவகாசம் கொடுத்திருக் கிறாள்!'

'உண்மையிலேயே விஷயத்தை சொல்லி விடுவாளா?'

'கணவனிடம் விஷயம் போவதற்கு முன் அவள் யார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்!'

மறுநாள் காலை.

பதினொரு மணி.

வேலைக்காரி சமையலறையில் வேலை யாய் இருக்க மைத்ரேயி தன்னுடைய அறைக் கட்டிலில் மல்லாந்து படுத்து சீலிங்கை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பக்கத்தில் இருந்த டெலிஃபோன் கூப் பிட்டது.

ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ..."

மறு முனையில் கணவன் தினேஷ்.

"மைத்ரேயி..."

"என்னங்க....?"

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

"நான் இப்போ அவசரமா டெல்லி கிளம்பிட்டிருக்கேன். ட்ரைவர் இப்போ வீட்டுக்கு வருவான். என்னோட ட்ராவலிங் சூட்கேஸ்ல ரெண்டு செட் ட்ரஸ்ஸை வைச்சு கொடுத்து அனுப்பு..."

"என்ன திடீர் டெல்லி பயணம்...?"

"நாம புதுசா ஆரம்பிக்கப்போற ஷேர் மார்க்கெட் கம்பனிக்கு டிக்ளரேஷன் போடணும். எல்லாத்துக்கும் மேலா பார்க்க வேண்டியவங்களைப் பார்த்து கரன்ஸிக் காத்தை சுவாசிக்க வைச்சாத்தான் கைக்கு சீக்கிரமா டிக்ளரேஷன் வரும்..."

"நாளைக்கு ராத்திரிக்குள்ளே வந்துடு வீங்கள்ள...?"

"வந்துடுவேன்..."

"ட்ரஸ்ஸை எடுத்து வெச்சுடறேன்... ட்ரைவரை அனுப்பிட்டீங்களா...?"

துக்குள்ள ரிட்டர்ன் ஆயிடுவேன்..."

"ரெண்டு செட் ட்ரஸ் போதுமா?"

"போதும்..."

"உங்க கூட வேற யார் வர் றாங்க...?"

"என்னோட பி.ஏ. தான்..."

"என்னங்க..."

"ம்...."

"நீங்க அவசியம் டெல்லிக்குப் போய்த் தான் ஆகணுமா?"

"ஏன்...?"

"பி.ஏ. மட்டும் போகக்கூடாதா...?"

"இது டிக்ளரேஷன் விவகாரம்.... நிறைய ஃபார்மாலிடீஸ் இருக்கு. ஏகப்பட்ட ஃபோர்ம்ஸ்களில் கையெழுத்துப்

"டெல்லிபோய்ச் சேர்ந்ததும் ஃபோன் பண்ணுங்க.... உங்க ஃபோன் காலுக்காக வெயிட் பண்ணிட்டேயிருப்பேன்..."

"அது எனக்குத் தெரியாதா என்ன...? டெல்லி போய்ச் சேர்ந்து ஹோட்டல்ல ரூம் எடுத்ததும் முதல் ஃபோன்கால் உனக்குத் தான்."

மறுமுனையில் தினேஷ் ரிஸீவரை வைத்துவிட மைத்ரேயி யோசனையில் உதட்டைக் கடித்துக் கொண்டே மறுபடியும் படுக்கையில் சாய்ந்தாள்.

கணவன் வெளியூர் போவது மனசுக்கு சந்தோஷமாக இருந்தாலும் அந்த டெலி ஃபோன் பெண் ஞாபகத்துக்கு வந்து வயிற்றைக் கலக்கினாள்.

'அவள் யார் என்பதைக் கண்டு பிடிக்காதவரை மனசுக்கு நிம்மதி யில்லை....'

"அம்மா...."

அறைக்கதவுக்குப் பக்கத்தில் குரல் கேட்டது.

பார்த்தாள்.

வேலைக்காரி,

"என்ன... பொன்னி...?"

"சமையல் வேலையெல்லாம் முடிஞ்சு தம்மா...."

"டைனிங் ரூமை கழுவிவிட்டியா?"

"ஆச்சும்மா...."

"சரி... நீ வீட்டுக்குப் போய்ட்டு மூணு மணிக்கு வா. வரும்போது அப்படியே ட்ரை க்ளீனர்ஸுக்குப் போய் என்னோட துணிகளை வாங்கிட்டு வந்துடு."

"சரிங்கம்மா...." தலையாட்டிவிட்டு நகர முயன்ற வேலைக்காரியை மறுபடியும் குரல் கொடுத்து நிறுத்தினாள்.

"பொன்னி..."

"என்னம்மா....?"

"ஏதோ ஒரு கோயிலுக்குப் போகணும்... ஒரு நாள் லீவு வேணும்ன்னு போனவாரம் கேட்டியே...?"

"ஆமாம்மா!"

"நாளைக்கு வேணும்னா லீவு எடுத்துக்க- போக வேண்டிய கோயிலுக் குப்போய்ட்டு வந்துடு."

வேலைக்காரி வாயெல்லாம் பல்லா னாள்.

"சரிங்கம்மா."

"லீவு ஒருநாள் தான்.... அடுத்த நாள் வேலைக்கு வந்துடணும்."

"அதெல்லாம் கரீக்டா வந்துடு வேம்மா..." தலையைச் சொறிந்து மறுபடி யும் சந்தோஷமாய் இளித்துவிட்டு நகர்ந் தாள். மைத்ரேயி வாசல்வரை போய் கதவைச் சாத்திக் கொண்டு ஹால் சோபாவுக்கு வந்தாள்.

'கணவன் டெல்லிக்கு போவதை பாஸ்கருக்கு தெரியப்படுத்த வேண்டும்...!'

'ஃபோன் செய்யலாமா? இல்லை சாயந்தரம் நேரில் போய்ப் பார்க்க லாமா...?'

யோசனையில் நெற்றியைப் பிடித்துக் கொண்டு சோபாவில் சாய்ந்தாள்.

'எவ்வளவு நேரம்?'

வாசலில் காலிங்பெல் கூப்பிட்டது.

'ட்ரைவர் வந்துவிட்டான் போலிருக் கிறது!'

மைத்ரேயி வாசலுக்கு வேகமாய் போய்த் தாழ்ப்பாளை விலக்கி கதவைத் திறந்தாள்.

வெளியே வாசல்படிகளில் நின் றிருந்தது ட்ரைவர் இல்லை.

ஒரு பெண், தோளில் வானிடி பேக்கும் உதட்டில் புன்னகையுமாய் தெரிந்தாள். **(தொடர்ந்து வரும்)**

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: பி. மகேந்திரதாஸ்.
வயது: 27
முகவரி: 'லவ் நெஸ்ட்' கோட்டைக் கல்லாறு (கி.மா).
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: பௌசர் சலாம்.
வயது: 18
முகவரி: 148/45, காதியாவத்தை வீதி, தர்கா நகர்.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: கே. முருகதாஸ்.
வயது: 23
முகவரி: DUSSELDORFER STR-15, 28327 BREMEN, GERMANY.
பொழுது போக்கு: தொலைக்காட்சி.



பெயர்: விஜிதா.
வயது: 18
முகவரி: 212, என்.சி.வீதி, திருகோணமலை.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: முகமட் புர்ஹான்.
வயது: 20
முகவரி: 20 ஏ, காட்டுமாவடி வீதி, காங்கேயனோடை, ஆரைப்பற்றை.
பொழுது போக்கு: பேனா நட்பு.



பெயர்: எம். நஸ்ருதீன்.
வயது: 26
முகவரி: P.O.BOX-456 DAHRAN AIRPORT- 31932, K.S.A.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: மொகமட் ரபீக்.
வயது: 21
முகவரி: 103/8, அரசடிச் சந்தி, முள்ளிப்பொத்தானை.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம். பலீல் மஜீத்.
வயது: 16
முகவரி: 174, புவலிகட, ஹந்தஸ்ஸ.
பொழுதுபோக்கு: வானொலி.

பெயர்: எஸ். மோகன்.
வயது: 19
முகவரி: 94, கொழும்பு விதி, கண்டி.
பொழுது போக்கு: வானொலி, ரீவி.

பெயர்: ஏ. ராசேந்திரன்.
வயது: 20
முகவரி: கீழியன் குடியிருப்பு, தலைமன்னார்.
பொழுது போக்கு: ரீ.வி., வானொலி.

பெயர்: பி. சயந்தன்.
வயது: 21
முகவரி: WC312.801 E.6TH AVE. VANCOUVER B.C., V5T 1C8, CANADA.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.

பெயர்: றிப்தாஸ் அகமட்.
வயது: 16
முகவரி: சின்னக்குடியிருப்பு, கல்பிட்டி.
பொழுது போக்கு: கிரிக்கெட், பத்திரிகை.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# கனவு மெய்ப்பட வேண்டும்

பிரபஞ்சன்

**இதுவரை**

சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்து வைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப் பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான். பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்துசேர்கிறாள்.

கணேசனும் தேடிவருகிறான். கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள்.

உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்துசேர்கிறாள். பீறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா. கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள்.

சுமதி பழையதை நினைக்கிறாள்.

கணேசனுக்கும் தனக்குமிடையே காதல் மலர்ந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறாள்.

**இனி...**

அம்மா மிகச் சின்ன பெண் மாதிரி வெட்கப்பட்டுக் கொண்டு, காபி, பலகாரம் கொடுத்தாள். சுமதி, அப்பாவுக்குப் பக்கத்திலேயே அமர்ந்து கொண்டிருந்தாள். ஒரு விஷயம்தான் அவளுக்கு இடறிற்று. அப்பாவிடம்கூட ஒரு காலத்தில் உதவி பெற்று, அவருக்கும் ஒரு மாணவனாய் இருந்த கணேசன், அது குறித்து ஒரு மரியாதைக்குக்கூட நினைவு கூராது இருந்தது. சுமதிக்குக் கொஞ்சம் வருத்தமாகவே இருந்தது. அப்பா கடைசிவரை, அந்தப் பேச்சை எடுக்கவே இல்லை.

ஊதுபத்தி எரிந்துகொண்டிருந்தது. அறை முழுக்கக் கொஞ்சம் கொஞ்சமாக மணம் பரவி சுவாசத்தையும், சூழ்நிலையையும் ரம்மியப்படுத்தியது. வெளியே, கல்யாணச் சந்தடி கொஞ்சம் கொஞ்சமாக அடங்கிக் கொண்டிருந்தது. அப்பா, அந்த மாடி அறையின் பக்கம் யாரும் நெருங்காமல் மிக நாசுக்காக விரட்டிக் கொண்டிருந்தார். அம்மாவுக்கு ஏன்தான் இப்படி அதீதக் கூச்சம் வருகிறதோ? கண்ணிலேயே காணப்படாமல் மறைந்தே போய்விட்டாள்.

நேரம் மிகக் கடந்து, நள்ளிரவுக்கு மேல், நண்பர்களையெல்லாம் அவரவர்க்குத் தேவையான வசதிகளைப் பண்ணிக் கொடுத்து, அறைக்குள் நுழைந்தான் கணேசன். சுமதி அப்போதுதான் லேசான உறக்கத்தில் ஆழ்ந்து கொண்டிருந்தாள். அரவம் கேட்டு விழித்தாள். பட்டு வேஷ்டி சரசரப்பில் கணேசன் வந்து கட்டிலில் அமர்வதைப் பார்த்தாள். முந்தின நாளிலிருந்தே உறக்கம் இன்றி ஓய்வு இன்றி இருந்தாள் அவள். எல்லோரிடமும் சிரித்துப்பேசி, அதனாலும், மிகவும் களைத்துப் போய் இருந்தாள்.

பட்டுப்புடவையின் கனமும், நசநசப்பும் தாங்காமல், நைட்டியுடன் இருந்த அவள் எழுந்து அமர்ந்தாள்.

"என்ன, அதற்குள் தூக்கம்?" என்றான் கணேசன்.

"அப்பப்பா! என்ன அலுப்பு போங்க.... இரண்டு நாள் அலுப்பும் களைப்பும், தூக்கமும் உடம்பிலும் கண்ணிலும் அப்பிக் கொண்டிருக்கிறது. நான் என்ன செய்யட்டும்?"

"இது முதலிரவு; மறந்துட்டியா?"

"சீ.... இதைக்கூட மறப்பாங்களா என்ன? ஆனா, நமக்குள் என்ன சாத்திரம், சம்பிரதாயம் எல்லாம்? நாம் எப்போது முடிவு செய்கிறோமோ அப்போதுதானே, அது நமக்கு? ஆகவே, இன்று உறங்குவோம். உங்களுக்கும் களைப்பாய் இருக்கும், ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நாளைக்கு அதைக் கொண்டாடுவோம். என்ன சொல்கிறீர்கள். சரிதானே...?"

அவன் முகம் மாறியது. அவன் சொன்னான்,

"நானும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்; எல்லாம் நீங்கள் வைத்த சட்டமாய் இருக்கிறது! நீங்கள் கல்யாணம் பண்ணி வைத்தீர்கள்! நீங்கள் செலவு செய்திருக்கிறீர்கள். இது உங்கள் வீடு. ஆகவே நீ சொன்னபடிதானே நான் கேட்டு ஆக வேண்டும்?"

அவன் இப்படிப் பேசுவான் என அவள் எதிர்பார்த்திருக்கவில்லைதான்.

அவள் சம்மதமும், அனுசரணையும் இல்லாமல், அவன் அன்று நடந்து கொண்ட முறை சற்றேறக்குறைய ஒரு கற்பழிப்பு மாதிரியே இருந்தது.

அப்படித்தான் ஆரம்பித்தது அவர்கள் இல்லறம்!

"ஏதோ ஒரு தர்மத்துக்குக் கட்டுப்பட்டு, ஒரு இளைஞனும் ஒரு யுவதியும் ஒரு கூரைக்குக் கீழ் இருந்து, ஒருவர் மேல் ஒருவர் அன்பு செலுத்திப் போஷித்து, சந்தோஷம் தந்து, சந்தோஷம் பெற்று சுமைகளைப் பகிர்ந்து கொண்டு, துன்பங்களில் பங்கு கொண்டு, ஒருவரின் ஆதர்சமாக ஒருவர் இருந்து பொழுதைப் பொன்செய்து கொண்டு, பனியில் இளம் வெயிலாய், மழையில் தீயாய், வெயிலில் நிழலாய் இருந்து ஜீவிப்பது அல்லவோ இல்லறம்? அதுவன்றோ அறம்" என்று தானே அப்பா சொன்னார்? நடப்பது எல்லாம் வேறாய் இருந்தது சுமதிக்கு.

கல்யாணத்தன்று மறுநாள், உணவு மேசையில் வைத்து அப்பா சொன்னார்.

"தம்பீ, தனியாக வீடு பார்க்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன்."

"ஆமாம்." என்றான் கணேசன்.

"நீங்கள் தனியாகப் போகவேண்டும் என்று முடிவெடுத்து விட்டால் அது தங்கள் இஷ்டம். ஆனால் என் கருத்தைச் சொல்லி விடுகிறேனே! தனியாக வீடு பார்த்து அட்வான்ஸ் தந்து புதுசு புதுசாக 'பர்னிச்சர்' எல்லாம் போட வேண்டும் என்றால் உங்களுக்கு மிகுந்த செலவாகும். செலவைக் கூடச் சமாளிக்க முடியும் என்றே வைத்துக் கொள்வோமே. இந்த இவ்வளவு பெரிய வீட்டில் நானும் உங்கள் மாமியும், ரெண்டே பேர்தானே! மாடி முழுக்க சும்மா காலியாகத்தானே கிடக்கிறது. நீங்கள் இரண்டு பேரும் அங்கேயே தங்கிக் கொள்ளலாம் என்பது என் வேண்டுகோள். தவிரவும் சுமதிக்கு உடனே புது சூழ்நிலையில் வாழ வேண்டிய பயம், தயக்கம்கூட இல்லாமல் போகும், இங்கிருந்தால். நீங்கள் யோசித்து முடிவெடுங்கள். அவள் உங்கள் மனைவி. எப்படி முடிவெடுப்பீர்களோ, அது தங்கள் இஷ்டம்."

"அதைப் பற்றி நான் என் அம்மா, அப்பாவைக் கலந்து கொண்டுதான் முடிவு சொல்ல வேண்டும்," என்றான் கணேசன், உடனடியாக.

"ஆகா, தாராளமாகச் செய்யுங்கள்!" என்றார் அப்பா.

சுமதிக்குக் கொஞ்சம் சங்கடமாகவே இருந்தது. அவ்வளவு பெரிய இளைஞன். பேராசிரியராக இருப்பவன். தான் எங்கு வாழ்வது என்று கூடச் சுயமாகச் சிந்திக்காமல், பெற்றோர்களின் யோசனையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறானே என்று இருந்தது அவளுக்கு.

ஆனால், அப்படியெல்லாம் ஒன்றும் நேரவில்லை.

கணேசன், ஏற்கனவே, சுமதியின் வீட்டோடு தங்குவது என்று முடிவெடுத்தான்.



அதை அவன் அப்பாவிடம் சொல்லியிருக்கலாம்தான். உடனே மாமனாரின் வார்த்தையையே ஒட்டிக் கொள்வது ஒரு வகை அகௌரவம் என்றும், அவன் நினைத்திருந்தான் என்பதே விஷயம். தவிரவும், சுமதியின் வீட்டோடு தங்கி இருப்பது அவனுக்குப் பொருளாதார லாபம் என்பதே அவன் குறிக்கோளாகவும் இருந்தது. சாப்பாட்டுக்குப் பணம் தரவேண்டிய அவசியம் இருக்காது அல்லவா?

அப்பாகூடச் சொன்னார்.

"எங்கயாவது ஹனி-மூன் போய் வாருங்களேம்மா. உனக்கும் விடுமுறை இருக்கிறது. அவருக்கும் பிரச்சனை இல்லை. ஏற்பாடு செய்யட்டுமா? அவரிடம் கேட்டுச் சொல்...." என்றார். சுமதி கணேசனிடம் சென்று கேட்டாள்.

"ஹனி-மூன் எங்கு போவதாம்?"

"காஷ்மீர் வரை போய்வரலாமே! தமிழ்நாட்டுக்கு கொடைக்கானலும், ஊட்டியும் இருக்கவே இருக்கிறது. எங்கு போகலாம் என்று நீங்கள் விரும்புவீர்களோ அங்கு போகலாம்."

"ஊட்டி, கொடைக்கானல் என்றால் இரண்டாயிரம் ரூபாயாவது ஆகும். காஷ்மீர் என்றால், பத்தாயிரம் ஆகும். காசு வீணாகும். என்னத்துக்கு இந்த ஹனிமூனெல்லாம்?" என்றான் அவன்.

வெகு யதார்த்தமாக அவள் சொன்னாள்:

"காசைப் பற்றித்தானே உங்கள் கவலை? அந்தக் கவலையை விடுங்கள். அப்பா, பணப் பொறுப்பை ஏற்பதாகச் சொல்கிறார். பாருங்கள் கணேசன்! வாழ்க்கையில், மிகவும் அற்புதமான சமயங்களில் ஒன்றல்லவா, தேன்நிலவு? அதை ஏன் நாம் இழக்க வேண்டும்? நமக்கு வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. அதை அனுபவிப்பதில் என்ன தவறு இருக்க முடியும்?" என்று மிக இரக்கத்தோடு கேட்டாள் சுமதி.

அவன் ஒட்டிக்கொள்வான் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அவன் பதில் வேறாக இருந்தது.

"உங்கப்பன் பணத்திமிரைக் காண்பிக்கிறானோ? என்னை ஏதோ பிச்சைக்காரன் என்று நினைக்கிறானோ? என்னிடம் பணம் இல்லாமலா, நான் இதை வேண்டாம் என்கிறேன். இன்னொரு தடவை இது மாதிரிப் பேசினாய் என்றால், நடக்கிற கதையே வேறு மாதிரி இருக்கும். ஜாக்கிரதை."

சுமதிக்கு, யாரோ உடம்பெல்லாம் நெருப்பைவாரிக் கொட்டியது மாதிரி இருந்தது. அப்பாவை 'அவன்' என்று ஒருமையில் உச்சரிக்க முடியும் என்று அவள் நினைத்துப் பார்த்தது கூட இல்லை. அதுவும், தன் கணவனே அப்படி அவரை அழைக்கக்கூடும் என்று வருகையில் அவளால் அது சகிக்கக் கூடாமல் போயிற்று. ஒரு ஆசிரியரை- எறும்புக்கும் தீங்கு நினைக்காதவரை- அதுவும் தன் ஆசிரியரை- தனக்கு வகுப்புக்கு வெளியேயும் ஒரு தந்தை போன்று உதவியவரை அப்படி மரியாதைக் குறைவாக ஒருவர் அழைக்க முடிந்தது எப்படி? எப்படி இந்தக் சுயமை அவனிடம் படிந்தது?

## அத்தியாயம் 16

அவளுக்கு நெஞ்சைப் பிளந்து கொண்டு அழுகை வந்தது.

முந்தானையால் முகத்தை மூடிக் கொண்டு பொங்கிப் பொங்கி அழுதாள் சுமதி.

"என்னடி நடிக்கிறே? ஹனிமூன் போய்க் கூத்தடித்தால்தான் உனக்குச் சரிப்படுமா? அதை இங்கிருந்தே செய்யக் கூடாதா? ஏன் இப்படி அலையறே? பொம்பளையா லட்சணமா அடக்கமா இருக்கப் பழகிக்கோ."

காதைப் பொத்திக் கொண்டாள் சுமதி. அவமானத்தால் கூசிப் போனாள். தேனிலவு என்பது நினைத்த நேரத்தில் எல்லாம் படுத்துக் கொள்வதற்காகவா? முகம் தெரியாத ஊரில் ஆட்டம் போடுவதற்காகவா? என்ன இந்தப் பைத்தியக்காரத்தனம்? அறிந்தோர், அறியாதவர், உற்றார், உறவினர் இடையூறு இல்லாமல் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்கல்லவா? முழுமையைப் பின்னமின்றி உணர்வதற்கல்லவா? சேர்ந்திருக்கும் இல்லறம் குறித்து இடையறாது சிந்தித்து, புதிய புதிய எதிர்காலத் திட்டங்களைத் தீட்டிக் கொள்வதற்கல்லவா? ஒரு இனிய தொடக்கத்தை எந்தவித விலங்குமும் இன்றித் தொடங்குவதற்கல்லவா? இவை ஏன் இந்த மனிதருக்கு விளங்கவில்லை?

சுமதி அழுவதை நிறுத்தினாள். கண்களைச் சுத்தமாகத் துடைத்துக் கொண்டு அவனைப்பார்த்தாள். ஒரு குழந்தையைப் பார்ப்பது மாதிரி பார்த்து மெல்லிசாகச் சிரித்தாள்.

"நீங்கள் தப்பாகப்புரிந்து கொண்டீர்கள். தேனிலவு என்பது அதற்காகவா? நான் அதற்காக ஏங்குவதாகவா நினைக்கிறீர்கள். ஒருபோதும் இல்லை. ஒரு அழகான விஷயத்தை, கண்ணுக்கும் மனதுக்கும் இதமளிக்கும் சூழ்நிலையில் தொடங்கலாம் என்பதற்குத்தானே இந்த மாதிரி அமைப்பெல்லாம். தயவு செய்து அதைப் புரிந்து கொள்ளுங்கள்." மேசையின் அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தவன், சரேலென்று எழுந்தவன், பலத்தை எல்லாம் திரட்டி அவள் கன்னத்தில் அறைந்தான். சுமதி நினைவை எல்லாம் மறந்து நின்றாள். மீண்டும் அவன் அறைந்தான்.

"பதில் பேசாதே....நான் சொல்வதைச் செய்" என்றான் அடிக் குரலில்.

சுமதி அந்த இடத்தை விட்டு நீங்கினாள்.

சுமதியின் கழுத்தில் தாலி ஏறிச் சரியாக இருபத்து நான்கு மணி நேரம்கூட ஆகியிருக்கவில்லை. அதற்குள் கணேசன், அவள் தந்தையைக் குறித்து வசவும், அவளுக்குத் தண்டனையும் வழங்கி விட்டிருந்தான். நேராகக் கிணற்றடிக்குச் சென்றாள். ரயில் நிலைய சிமெண்ட் பெஞ்சுக்கு நிகராக அவளுக்கு ஆறுதல் தரும் மற்றொரு விஷயம் கிணற்றடித் துவைக் கல். அதன்மேல் அமர்ந்தாள்.

வெயில் பாதிக் கிணற்றை ஆக்கிரமித்திருந்தது தான் தவறான ஒரு நபரைத் தேர்ந்தெடுத்துவிட்டோம் என்று அப்போது முதல் முறையாக அவளுக்குத் தோன்றியது.

தன்னைத்தானே நொந்து கொண்டாள். இது எளிதில் மாற்றியமைத்துக் கொள்ள முடியாத தவறாகிவிடுமோ என்று கூட அவள் அஞ்சினாள். தன் அன்பு, அவனை நினைத்து நெஞ்சில் சுரக்கும் அருள், தன் கல்வி, தன் அறிவு எதையும் பொருட்படுத்தாது தன்னை ஒரு மிருகம் மாதிரி அவன் துன்புறுத்துதல் அனைத்தும் அவளை மிகுந்த துயர் கொள்ளச் செய்தது.

அன்று மாலைக்குள் அவன் சுயரூபத்தை அவள் முற்றும் உணர்ந்து கொள்ள முடிந்தது.

(தொடர்ந்து வரும்)

---

# கடி(கு)க் காதலி

அக்குறணை நவ்ராஜி

நேரம் செல்லச் செல்ல அன்பாஸின் பரபரப்புக் கூடிக் கொண்டே போனது. அவனால் இருப்புக் கொள்ள முடியவில்லை. கைக்கடிகாரத்தை அடிக்கொரு தடவை பார்த்துக் கொண்டான்- இன்னும் பத்தே பத்து நிமிடங்கள்- இடைவேளைக்குரிய மணியை அடித்துவிடுவார்கள்.

பத்து, ஒன்பது, எட்டு,...

டிங்... டிங்....

வகுப்பில் உள்ள மாணவர்களைக் காணவில்லை. அதற்காகவே காத்திருந்த அன்பாஸ் அதிபரின் அலுவலகத்திற்கு விரைந்தான். அங்கே, "உங்களுக்கும் கடிதம் இருக்கிறதா என்று பாருங்கள்!" என்ற வாசகங்களுடன் ஆசிரியர் கடித இறாக்கை காணப்பட்டது. அதில் சில கடிதங்கள். துழாவி முகவரி பார்த்தவன் முகத்தில் ஒரு நூறு வோல்ட்ஸ் பிரகாசம்.

கடிதத்துடன்- மனம் நிறைந்த மகிழ்வுடன் ஆசிரியர் ஓய்வறை சென்றவன், சக ஆசிரியர்களின் வளாவளாக்களில் சிக்கிக் கொள்ளாமல் ஓராமாய்ப் போய் அமர்ந்து கொண்டான்.

விரல்கள் படபடவென கடிதத்தை உடைத்துக் கொண்டன... அது அவன் எதிர்பார்த்த அவளின் கடிதம்...

அவள்... ஹுஸைரா.

பத்திரிகை முகவரி ஒன்றால் நட்பாகியவர்கள். இந்த ஒரு வருடத்தில் முகம் தெரியாத நட்புடன் வளர்ந்தவர்கள். அந்த நட்பு இன்று எப்படி மாறி... அவளிடம் விருப்புக் கேட்கும் அளவுக்கு மாறிவிட்டது. அந்த வினாக்களுக்கு விடை அந்தக் கடிதத்தில் தான் இருக்க வேண்டும்.

பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவன் நிலையில் அன்பாஸ். நிச்சயம் அவன் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். துளி கூட அவன் சந்தேகப்படவில்லை. கடிதத்தைப் பிரித்தவன் கண்களை அதன் மேல் மேயவிட்டான். அதில்....

மனம் நிறைந்த அன்பாஸ்...

நலம், நலமறிய ஆவல்....



உங்கள் மடல் என் கரம் கிட்டியது. எப்படி பதில் எழுதுவது என்றே புரியவில்லை. நேரிடையாகக் கூறிவிடத்தான் இதுவரை முயன்று கொண்டிருந்தேன். ஆனால் ஒரு தயக்கம். என் முகம் வெறுத்துவிடும் என்று பயம்.... ஆனால், நீங்களோ.. இவ்வளவு தூரம் வந்து விட்ட பிறகு என்னால்.. எதுவுமே மறைக்க முடியாது.

மனம் படபடத்தது அன்பாஸுக்கு. தொடர்ந்து வாசித்தான்.

"முதலில் என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். ஏன்.... இதுவரை காலமும் நீங்கள் நினைத்து எழுதியது போல் நான் ஒரு பெண் அல்ல! ஆண்; அதிர்ச்சியா? பத்திரிகைகளில் பெண் பெயரில் உலா வந்தேன். எத்தனையோ கடிதங்கள் வந்தாலும் உங்கள் கடிதம் வித்தியாசமானது... அதனால், என்னைக் காட்டிக் கொள்ளாமலே.. நட்புக் கொண்டேன்.... அது இப்படி ஆபத்தில் முடியும் என்று நினைக்கவே இல்லை. உங்களை ஏமாற்றி எழுதியதற்கு மன்னிக்கவும். மீண்டும் கோருகிறேன்....

ஆனால்,

எமது நட்புகள் தொடரட்டும்...

இது என்றும் அன்புடன்

ஹுஸைரா என்ற பெயரில் எழுதிய

ஹுஸைர்.

வாசித்து முடித்த அன்பாஸுக்கு தலைசுற்றியது.



படிப்பகம்

www.padippakam.com

"ஜமுனா மூளைக்காய்ச்சலினால் இறந்துபோனாள். உனக்கு நாங்கள் வேறு பெண் பார்த்துக் கொண்டிருக்கிறோம்." என்று கெங்கனின் அம்மா நாட்டிலிருந்து கடிதம் அனுப்பியிருந்தாள். அந்த வரிகளை அவன் பலமுறை வாசித்தான். அவனது உள்ளம் துடித்தது. உதடு அவனையுமறியாமல் 'ஜமுனா ஜமுனா' என்று உச்சரித்துக் கொண்டிருந்தது. 'ஜமுனா! உன்னையும் என்னையும் என் பெற்றோர்கள் பிரித்துவிட்டனர். உன்னையே நினைத்த உள்ளத்தில் இனி வேறெந்தப் பெண்ணுக்கும் இடமில்லை.' உறுதியாக முடிவெடுத்தான் கெங்கன். இந்த உறுதியான உணர்வுகளுக்கூடாக அந்தப் பழைய சம்பவங்கள் அவனை எட்டிப் பார்த்தன.

* * *

கணேச ஐயக்குருக்கள் அந்த ஊருக்கே ஏன் அந்த மாவட்டத்திற்கே பிரபல்யமான ஒரு பிரமுகர். அங்குள்ள மிகப்பெரிய கோயிலின் தலைமைக் குருக்கள், சமாதான நீதவான், பிரபல சோதிடர் என்று மதிக்கப்படுபவர். அவருடைய மூத்த புதல்வன்தான் கெங்கன்.

நல்ல நிறம், அளவான உடற்கட்டு, உயரமான தோற்றம்- இதுதான் கெங்கன். பருவ வயதில் இதைவிடக் கவர்ச்சியாக இருந்தான். ஆனால் அவனுக்குப் படிப்பு ஏறவில்லை. பத்தாவது வரை படித்துவிட்டு நிறுத்திவிட்டான். இதையிட்டுத் தந்தையும் கவலைப்படவில்லை. இருக்கவே இருக்கிறது அவரின் கோயில்தொண்டு. அந்த வழியையே மகனுக்கும் காட்டலாம் என எண்ணிக்கொண்டார் தந்தை. அதனால் சில மந்திரங்களை பயிற்றுவிக்க முனைந்து கொண்டிருந்தார். கெங்கனுக்கு அதுவும் பிடிக்கவில்லை.

மோட்டார் சைக்கிளில் ஊரைச்சுற்றுவது, ஊரைக்கலக்குவது- இதுதான் அவனுக்கு இனித்தது. தகப்பனின் அந்தஸ்து, பணம், அவனின் தோற்றம் இவைகளை மனதில் வைத்து இளம் பெண்கள் சிலர் அவனை விரும்பினார்கள். அவன் யாரையும் மதிக்கவில்லை. அவனை மாப்பிள்ளையாக அடைவதற்கு அவனின் சொந்தத்திற்குள்ளேயே போட்டி இருந்தது. அவைகளையும் அவன் ஒதுக்கினான்.

ஒருநாள் தங்கையை பாடசாலையிலிருந்து மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வந்தான் கெங்கன். அப்போதுதான் ஜமுனாவைப் பார்த்தான். அசந்துபோனான். அவன் பார்த்தேயிராத அழகு. அழகென்றால் அப்படியொரு அழகு. அவனது கண்கள் அகல விரிந்தன. இவள்தான் எனக்கு எதிர்கால மனைவி என்று அன்றே முடிவெடுத்தான் கெங்கன். அதற்காக முதலில் அவளின் மனதில் இடம்பிடிக்க அலைந்தான். அவளது தோழிகள், உறவுக்காரர்கள் இவர்களைப் பாலமாக வைத்து முயற்சிகள் தொடர்ந்தன.

## அப்போதுதான் ஜமுனாவைப் பார்த்தான்– அசந்து போனான்.



# கெங்கா-ஜமுனா

களுவாஞ்சிக்குடி யோகன்
— அவுஸ்திரேலியா —

ஜமுனா எதற்கும் அசையவேயில்லை, தோல்விதான் வெற்றியின் முதற்படி என்பார்கள். கெங்கன் பலபடிகளிலும் தோல்வியே கண்டான். இருந்தும் இந்த விஷயத்தில் அவன் சளைக்கவில்லை. ஜமுனாவிற்கு இறுதியாக ஒரு கடிதம் எழுதினான்.

'உமக்காக நான் எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன். நீர் நாளை எனக்கொரு சாதகமான பதிலைத்தரவேண்டும். இல்லாவிட்டால் என் இறப்பிற்கு நீரும், உம்மீதுள்ள காதலும்தான் காரணமென்று கடிதம் எழுதிவைத்துவிட்டு எனது மோட்டார் சைக்கிளில் அதிவேகமாக வந்து உமது பாடசாலை மதிலுடன் மோதுண்டு இறந்து கிடப்பேன். இது சத்தியம்.'

எழுதிவிட்டு அவளின் தோழிமூலம் சேர்ப்பித்தான். "இறந்து கிடப்பேன்" என்ற வசனத்தைக் கண்டதும் அவள் இளகிவிட்டாள். அன்றிலிருந்தே ஜமுனா அவன் வசமானாள். பிறகு தனிமையான சந்திப்புக்கள் தாராளமாக நிகழ்ந்தன. அவர்கள் காதல் வளர்ந்துகொண்டு வந்தது. வளர்ந்து வந்த காதல் கெங்கனின் வீடுவரையும் வந்தநேரம், அவர்கள் இடத்தில் இளைஞர்கள் நடமாடமுடியாமல் நாட்டு நிலமை உக்கிரமடைந்துகொண்டு வந்தது.

மகனை இனியும் அங்கே வைத்திருப்பது உசிதமல்ல என்று பெற்றோர் முடிவெடுத்தனர். "நிலமை தணியும்வரை நீ வெளிநாடு போயிரு கெங்கன்" என்றாள் தாய். அம்மாவுடன் மனம் விட்டுக் கதைப்பவன் தனது காதலையும் வெளிப்படுத்தினான். "எங்களுக்குத் தெரியும், ஏழையென்றாலும் ஜமுனா நல்ல பெண், அவள் உனக்கு மனைவிதான்! ஆனால் இப்போது அல்ல; உனக்குப் பொறுப்பு வரவேணும்; பொருத்தமான வயது வரவேணும். அதுவரையும் நீ வெளியில போயிரு. நாட்டு நிலமை சீரானதும் நீயிங்கு வரலாம். அல்லது நாங்களே ஜமுனாவை அங்கு அனுப்பி வைக்கிறோம்." தாய் மகனுக்கு நல்லவைகளைச் சொன்னாள்.

கெங்கன் ஜமுனாவிடம் ஓடினான். அவளுக்கும் இந்த முடிவு நல்லதாகவே பட்டது. "இன்னும் நான்கு வருடத்தில் படிப்பை முடித்துவிட்டு காத்திருக்கிறேன்" என்று அவள் வழியனுப்பினாள்.

தந்தையுடன் தலைநகரில் நின்று சுவிஸ்நாடு வந்து சேர்ந்தான் கெங்கன். சுவிஸ் வந்த கெங்கனுக்கு தானாகவே பொறுப்பும் வந்து சேர்ந்தது. மூன்று வருடத்திற்குள் நிறையவே உழைத்தான். தங்கைகளுக்குப் போதுமான பணம் சேர்த்து அனுப்பினான். பெற்றோருக்கு மகன் செய்ய வேண்டிய அத்தனை கடமைகளையும் செய்து முடித்தான். நான்கு வருடங்கள் நான்கு நிமிடங்களாய் மறைந்தன. அப்போது ஜமுனாவைத் தனக்கு மனைவியாகப் பேசி அனுப்பும்படி பெற்றோருக்குக் கடிதம் எழுதினான்.

அந்த நேரத்தில்தான் அவனுக்குத் தாயின் பதில் கிடைத்தது.

'மகனே! ஜமுனாவின் சகோதரி ஒரு கிறிஸ்தவ இளைஞனுடன் ஓடிவிட்டாள். இதனால் அந்தக் குடும்பத்திற்குள் பெண் எடுப்பது எமக்குக் கௌரவக் குறைவு. எமது சொந்தங்களே எம்மை ஏளனமாகப் பார்க்கும். அப்பா தலை நிமிர்ந்து நடமாட முடியாமல் போய்விடும். இதனால் நாங்கள் உமக்கு வேறு இடத்தில் பெண் பார்க்கலாமென்று யோசனை...!' என்று தாய் தொடர்ந்திருந்தாள். கெங்கன் நிலைகுலைந்து போனான்.

'ஜமுனா தான் என் மனைவி! எனக்கு வேறெந்தப் பெண்ணும் வேண்டாம்!' என்று பல கடிதங்கள் கெஞ்சி எழுதினான். ஆனால் பலன்தான் எதுவும் கிடைக்கவில்லை.

இனி இந்த விஷயத்தில் பெற்றோரை நம்புவதில்லை என முடிவு பண்ணினான். ஜமுனாவைக் கொழும்பிற்கு வரும்படியும், அங்கிருந்து எதுவித தடங்கலுமில்லாமல் சுவிஸுக்குக் கூட்டிப்போகலாம் என்றும் அவளுடன் கடிதமூலம் தொடர்பு கொண்டான். அவளிடமிருந்து பதில் வந்தது.

'உங்களின் வீட்டுக்காரர் என்னை மருமகளாக்க மறுத்துவிட்டனர். இதனால் அம்மாவிற்கு ஏற்கெனவே இருந்த நோய் அதிகரித்து விட்டது. இப்பொழுது அவளிற்குத் துணை என்னைத் தவிரவேறு யாருமில்லை. வீட்டில் பொருளாதார நிலைமையும் மோசமாகி விட்டது. இவைகளை நினைக்க எனது தலையும் அடிக்கடி கொதிக்கின்றது.

'சிறுபிள்ளை வேளாண்மை வீட்டுக்கு வராது' என்பார்கள். அப்படித்தான் எனது நிலையும். யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியில் வந்து அலுவல்கள் பார்ப்பதற்கு அனுபவம் இல்லை. அதைவிட இப்போது யாழ்நகரை விட்டு வெளியேறுவதென்பது அசாத்தியமான விஷயம். இதனால் நீங்கள்தான் ஒரு முடிவெடுக்க வேண்டும். என்றைக்கிருந்தாலும் எனது உயிர் உங்களுக்கே!' இப்படி எழுதியிருந்தாள் ஜமுனா.

வாசித்த கெங்கன் கண்ணீர் விட்டான். இனிமேல் இந்த வெளிநாடு வேண்டாம், என முடிவு பண்ணினான்.

ஆனால் இத்தனை காலமும் உழைத்த பணமெல்லாம் வீட்டுக்கு அனுப்பியாயிற்று. 'கொஞ்சம் பணத்துடன் போனால்தான் சொந்தக்காலில் நின்று சுயமாக வாழலாம். அதற்கு ஒரு வருடம் இங்கிருந்து உழைத்துக் கொள்வோம் என்று செயல்படத் தொடங்கினான்.

இந்த முடிவை ஜமுனாவிற்கும் அறிவித்து ஆறுமாதங்கள் ஓடிவிட்டன. இந்த நேரத்தில்தான் அவளின் உயிர் பிரிந்துவிட்டது என்று இடியாக வந்தது சேதி.

இனி யாருக்காக உழைக்கவேணும்? எதற்காக இந்தப் பாடு பட வேணும்? என்று நினைக்கையில் உள்ளம் குமுறியது. பெற்றோரை நினைக்க வெறுப்பு வெறுப்பாயிருந்தது.

'என் ஜமுனா இவர்களுக்கு என்ன பாவம் பண்ணினாள். அவளின் சகோதரி அவளுக்குப் பிடித்த துணையைத் தேடிக் கொள்வதில் என்ன தவறு? அதில் இவர்களுக்கென்ன கௌரவக் குறைவு இருக்கிறது. இந்த வறட்டுக் கௌரவத்தால் இன்றைக்கு ஒரு உயிர் அழிந்து சொந்த மகனின் வாழ்க்கையும் சீரழிந்துவிட்டதே! இனி யாருக்காம் பெண் பார்க்கிறார்கள்!' என்று சினந்தவன்,- காகிதம் எடுத்து இரண்டு வரியில் பதில் எழுதினான்.

'நான் உயிருடன் இங்கிருப்பது பிடிக்கவில்லையென்றால் நீங்கள் எனக்குப் பெண் பார்க்கலாம்.' -கெங்கன். ■

---

# மதிப்பு

## "உங்க உடையில் மாறுதல் வரும்வரை நான் உங்களுடன் எங்கும் வரமாட்டேன்"

ரூபராணி

எவ்வளவுதான் முயற்சித்தாலும் அரவிந்தின் மனதிலிருந்து அனுவை அகற்ற முடியவில்லை. அவள் அடித்த சிலையாக அவன் மனதில் உட்கார்ந்திருப்பது சுகமா- சுமையா என்று கூடத் தெரியாமல் திண்டாடினான் அரவிந்த். மூன்று முடிச்சுப்போட்டு மூன்று மாதமாவதற்குள் அனுவின் விருப்பு வெறுப்புகள் அவனுள் ஆலவிருட்சமாய்க் கிளைபரப்பி இருந்தது.

கொண்டாட்டங்கள், பார்ட்டிகள் மனதை மகிழ்விக்க, இறுக்கங்களிலிருந்து நெகிழ எவ்வளவு அவசியம் என்று அவன் எண்ணினான். அரவிந்த் அவனுடைய கம்பனி நடத்திய அலுவல் பார்ட்டி ஒன்றில் கலந்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தான். தன்னுடன் பார்ட்டிக்கு வரமறுத்த அனுவை எண்ணியதும் ஊசி முனையாய் உடலெங்கும் குத்தல்கள்.

விரைந்து வந்த காரை அரவிந்த் அவன் வீட்டுப் போட்டிக்கோவில் நிறுத்திவிட்டு மாடிப்படிகளில் மளமளவென்று ஏறி மாளிகைபோல் இருந்த அந்த வீட்டுக்குள் நுழைந்தான். அது அவனுக்குச் சூனியமாகப் பட்டது. பார்வையால் அனுவை எங்கும் தேடினான்.



'ஓ அவள்தான் ஃபோன் செய்துவிட்டு அவள் டடி வீட்டுக்குப் போய்விட்டாளே!' அரவிந்த் நெற்றியைத் தேய்த்துக் கொண்டான். அவனுக்குத் தனிமை அமைதி, எதுவுமே பிடிக்காது. அவனொரு சங்கீதப் பிரியன். வாத்தியங்கள் வாசிப்பது அவனுக்குக் கைவந்த கலை.

உடை மாற்றிக் கொண்ட அரவிந்த் சிட்டி பாபுவின் வீணை இசையை வீடு முழுவதும் பரவவிட்டான். படுக்கை அறையில் இரவோடு போராடிய அரவிந்தால் தூங்கமுடியவில்லை. அனு அவனுக்குள் வாதாடினாள்.

"அனு என்னோட பார்ட்டிக்கு வர்ரியா?"

"மாட்டேன். மாட்டேன்."

"நீ மிஸிஸ் அரவிந்த்! மறந்திட்டியா?"

"நீங்க சொல்லித்தான் அது எனக்குத் தெரிகிறது."

வீணை இசை பட்டென்று நின்று போகிறது.

அனுவின் குரல் ஓங்கி ஒலிக்கிறது.

"உங்களோடு சேர்ந்து போய் என் புருஷன் என்று சொல்லி நான் அவமானப்படணுமா?"

"நீ என்ன சொல்கிறாய்?"

அவள் அவசரப்பட்டாள், "உங்கட வேட்டி உடை சகிக்கல, எங்க குடும்பத்தின் மானம், மரியாதை எல்லாமே போகுது!"

"அப்போ வேட்டி உனக்கு இழுப்பமாய்ப் போச்சு இல்ல? உன்னோட கௌரவம், மதிப்பு எல்லாமே கால் சட்டைக்கு மட்டுந்தானா? ஒருவனின் படிப்பு, திறன், குணம் இவற்றுக்கெல்லாம் மதிப்பே இல்லை என்கிறாயா?"

"ஒரு ஆளைப்பார்த்தவுடன் தெரிவது அவனுடைய தோற்றந்தான். அதுதான் உடை. மற்றதெல்லாம் கண்ணுக்குத் தெரியாத சங்கதிகள். உங்க உடையில் மாறுதல்வரும் வரை நான் உங்களுடன் எங்கும் வரமாட்டேன்! கால்சட்டை, மேல்சட்டை, சப்பாத்து, ரை- ஐ மீன் நீங்கள் ஒரு ஜெண்டில்மனாக.."

முதல்நாள் நினைவுகள் வெறுப்பை உமிழ்ந்த வேகத்தில் அரவிந்த் தூங்கிப் போனான்.

அரவிந்த் சாதாரண குடும்பத்தில் பிறந்த ஒரு பட்டதாரி. உழைப்பால் உயர்ந்து பொறுப்பு வாய்ந்த நிறுவனத்தில் வேலை தேடிக் கொண்டவன். அழகும் குணமும் அவன் உடமைகள். ஆனால் சற்று வித்தியாசமானவன்.

அன்றும் இன்றும் அவனுடையில் (வேட்டி) எதுவிதமாற்றமும் இல்லை. அந்த நிறுவனத்தில் அரவிந்த்மீது எல்லோருக்கும் ஒரு அலாதிப்பிரியம். அவன் ஒரு பாடகனுங்கூட. அவன் குரலில் தென்றலின் சுகமும் தேனின் இனிமையும் கலந்திருக்கும். அதில் தன்னை இழந்தவள்தான் அங்கு வேலை பார்க்கும் அனுஷா. அவள்தான் அனு.

அரவிந்த் இல்லாமல் தன்னால் வாழ முடியாது என்ற முடிவுக்கு வந்தாள் அனு. பிரபல வழக்கறிஞர் கௌரிசங்கரின் ஏக புத்திரி அவள். அரவிந்த்திடம் தனக்குள்ள ஈடுபாட்டை அவரிடம் வெளிப்படுத்தினாள். தாயில்லாப் பெண்- அவளுடைய விருப்பத்துக்குச் சுவர் எழுப்ப அவர் விரும்பவில்லை.

கலியாணம் முடிந்து மூன்று மாதங்களாகிவிட்டன. கௌரிசங்கரின் எண்ணப்படியோ அனுவின் வெறித்தனமான விருப்பப்படியோ அரவிந்த்தின் உடைமாறவில்லை. மனமும் மாறவில்லை.

ஜில் என்ற குளிர்காற்று செல்லமாக அரவிந்த்தின் உடலைத் தழுவியது. பக்கத்து வீட்டுசங்கர சர்மா வீட்டின் சுப்பிரபாத இசை துல்லியமாகக் கேட்டது.

அனுவின் ஞாபகம் அரவிந்த்தை மாம்பழத்து வண்டாகக் குடைந்தது. கண் விழித்துச் சோம்பலை முறித்தவன்,

'சே, என்ன உலகம்?

உள்ளமா உடையா முக்கியம்?

உடைக்காக என்னை மதிக்கும் ஒரு பெண் என் மனைவியா?' அலுத்துக் கொண்டான். அரவிந்த் என்ன நினைத்தானோ தொலைபேசி எண்களைச் சுழற்றினான்.

"ஹாய் அனு...!"

மறுமுனையில் உம் கொட்டியவள் அனு.

"நீ இல்லாம.. ரொம்ப டள்ளாருக்கு நீ எப்பவர்ரே?"

"தெரியாது."

"என்னை எனக்காக மதித்து எப்போ வர்ரியோ அப்போதான்... நீ என் மனைவி!"

தொலைபேசி துண்டிக்கப்பட்டது.

வாழ்க்கை துண்டாடப்படுவதற்கு அரவிந்த்துக்கு அற்பமாகப்பட்ட காரணம் அனுவுக்குப் பூதாகாரமாகத் தெரிகிறது. ■

---

# யுத்தம் + தேசம்

## "விடு...! எனக்கென்ன... எங்கே, எவர் செத்தா எமக்கென்ன...? நேரங்காலம் வந்தா போய்த்தானேயாகணும்...!"

ஷர்மிளா இஸ்மாயில்

"நேற்று நடந்த மோதலில் இரு தரப்பிலும் பலத்த உயிர்ச்சேதம். பொது மக்கள் ஐவர் பலி. பலர் படுகாயம்."

பத்திரிகைச் செய்தி வாசித்து கவலையில் ரகு மனம் பதைத்தான். என்ன சாபமிது? யார் செய்த பாபம் இது?

யோசித்தான். உயிர்கள் பிரிவதும் உடல்கள் வீழ்வதும் சாதாரண நிகழ்வாகிய அவலம். மனிதாபிமானம் நிரம்பிய அவன் நெஞ்சம் துன்ப அலைகள் மோதலால் நெட்டுயிர்த்தது.

சிரித்துக் கொண்டே வந்தான் ரிஷி, நண்பன். "என்னடா, மூஞ்செல்லாம் ஒரு மாதிரியிருக்கு? ஐயாவுக்கு என்ன பிரச்சனை? ஆசைக் காதலி அண்ணான்னு சொல்லிட்டாளா? இல்லை அலுவலக பிரச்சனையா?"

"சும்மாயிருடா. இங்க பாரு. அந்த பேப்பர் நியூஸ். பாரு. எத்தனை உயிர்கள் வீணா மண்ணாயிருக்கு பாரு... எத்தனை பெரிய இழப்பு? எந்தத் தரப்பானாலும் இழக்கப் படுவது மனிதம். எதுக்காக இது? என்ன முடிவு தான் வரப் போகுது- இப்படியே தொடர்ந்தா...?" ரகு ஆதங்கமாய் மெல்லிய குரலில் அங்கலாய்த்தான்.

ரிஷி பெரிதாய்ச் சிரித்தான். "ஓ... இதுவா? இதுதான் வழக்கமான செய்தியாச்சே! யுத்தம்னா அப்படித்தான். எங்கேயோ அடிச்சிக்கிறாங்க. யாரோ சாகறாங்க. நாம எதுக்குப்பா அலட்டிக்கணும்?"

"அப்படியில்ல ரிஷி. இது எங்க நாடு. யுத்தம் நடக்கறது உள்நாட்டுல. வேற எங்கேயோ இல்ல. சாகறது வேற யாரும் இல்ல. எங்களோட உடன் பிறவாத சகோதரர்கள். எத்தனை வயதான அம்மாக்களின் மகன்கள்; பெண்களின் கணவன்கள்; சகோதரர்கள்; இளம் பிஞ்சுகளின் அப்பாக்கள்; வாழ வேண்டிய உயிர்கள்...."

"ஸ்.... போதும்டாப்பா உன் லெக்சர்ஸ். விடு! எனக்கென்ன? எங்க, எப்ப, எவர் செத்தாலும் எமக்கென்ன...? நேரங்காலம் வந்தா போய்த்தானேயாகணும்...! வா வெளியில போய் வருவம்!" புறப்பட்டார்கள்.

"இது சரியில்ல ரிஷி. மனசுல கொஞ்சம் ஈரம் வேணும். மனிதாபிமானம் வேணும். நம்மால யுத்தத்த நிறுத்திட முடியாது தெரியும். ஆனாலும் மனசளவிலாவது பிரார்த்தனை பண்ணும் மனுசத்தன்மை வேணும். நீ என்னடான்னா..." ரகுவின் குரலில் சிறிது ஆத்திரம் பிரதிபலித்தது.

"இப்ப என்னை என்ன செய்யச்சொல்கிறாய்? கண்ணீர்விட்டு அழட்டுமா? இல்ல புலம்பிக்கிட்டே ஒரு மூலைல உட்கார்ந்து துக்கம் கொண்டாடணுமா? சும்மாயிருப்பியா? மனிதாபிமானம், கருணை அது இதுன்னு பெரிய பெரிய வார்த்தையெல்லாம் சொல்லி என் மூளையைக் குழப்பிடாத. சாகறவங்க சாகட்டும். அடிக்கிறவங்க அடிக்கட்டும். எப்படியோ போகட்டும். வா நாம ஜொலியா படம் பார்க்கலாம்."



ரிஷி ரகுவின் வார்த்தைகளை அலட்சியம் செய்து தன் பாட்டில் சிரித்தான்.

வரும் வழியில் "தினமுரசை"சைக் கண்டு வாங்கி விரித்தான் ரகு. "இருவர் பலி", "யாழில் படை-புலிகள் மோதல்" தலைப்பை உரக்க வாசித்து மீதியை வாசிக்கமுற்படுகையில் ரிஷி பிடுங்கினான்.

"ஆஹா...லைலா துரத்தப்பட்டார். ஜொள்ளு விடும் மாமா... தைரியமான சங்கவி... பிரபு நக்மா..." என சினிமாப்பகுதியை வாசித்து புல்லரித்துப் போனான்.

"நீயே வெச்சுக்க பேப்பர. நான் போறேன்...!" ரகு அவனைவிட்டுவிட்டு நகர்ந்தான்.

"இருடா... நானும் வரேன். டவுனுக்குப் போய் வருவம். வீட்ல போய் என்ன பண்ணப் போறே? திரும்பவும் யுத்தம், பலி அது இதுன்னு உளறப்போறியா?" ரிஷியின் குரலை அலட்சியப் படுத்திய ரகு போய் விட்டான். டவுனுக்குப்போகும் பஸ்ஸில் ஏறினான் ரிஷி.

"இன்று மாலை நடந்த குண்டு வெடிப்பில் சுமார் நூறுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.... பலர் உயிர்ச்சேதம்." பதைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் டி.வி. செய்தியை ரகு.

"ரகு. உன்னோட ஃப்ராண்ட் ரிஷியும் குண்டு வெடிப்புல மாட்டிக்கிட்டானாம். பெரியாஸ்பத்திரியில சேர்த்திருக்காங்களாம். வா போகலாம்!" பக்கத்துவீட்டு அங்கள் பெரிதாய் அலறியபடி ஓடி வந்தார்.

கண்ணீருடன் பார்த்தான் ரிஷி. "ஏ.... ஏண்டா இப்படி நடந்துச்சி? நான் யாருக்கு என்ன பாவம் செய்தேன்? என் கால் போயிடிச்சே! இ...இனி வாழ்ந்தா என்ன? செத்தா என்ன?" ரகுவுக்கு அழுகை வந்தது. என்னமாய்ச் சிரித்துக் கொண்டு போனவன். இப்போ?

"எ...எத்தன பேர் துடிச்சி விழுந்தாங்க... ஒரே ரத்தம். சிவப்பு சிவப்பாய்.... சிதறின உடல்களும் உயிர்களும்... ஐயோ.. நான் பார்த்தேனே... ரத்தம், சதை, கைவேறா.... கால் வேறா... தலை வெடிச்சி.... மூளை வெளியே....ஐயோ....அம்மா... எதுக்காக இப்படி செய்தாங்க? சொல்லு ரகு... சொல்லு... இந்தக் காலில்லாம நான் இனி எப்படி..... எப்படி...?" ஓவென அழுதான் ரிஷி. புலம்பினான்.

சொல்லிக் கொள்ளாமல் வடிந்த கண்ணீரோடு நண்பனைத் தேற்ற வார்த்தைகளில்லாது ரகு மௌனமாய் அமர்ந்திருந்தான்.

"எங்கேயோ நடக்கிறது யுத்தம். நமக்கென்ன?" என்ற ரிஷிக்கு இப்போது என்னதான் சொல்லப் போகிறான் ரகு? ■

www.padippakam.com

# அவசிய அச்சம்

தருவது ரசிகன்

இலக்கிய நயம்



நிலைக் கண்ணாடி முன்னால்
நின்று பார்த்தாள்.

வாலிபரை வதைக்கும் வனப்பு
வயோதிபருக்கும் சறுக்கும் மனம்.

பருவம் இளம் பருவம்
உருவம் எழில் உருவம்
வேரில் பழுத்த பலா-விழிகளில்
வேலைப் பழிக்கும் உலா.
அவள் பலரை வதைக்கும் கனா!

"காணக்கிடைக்காத கனி
கையில் கிடைத்தால் இன்பம் தனி"
வாலிபர் உதடுகள் முணுமுணுக்கும்.

"ஒற்றப்படாத உதடுகள்
ஒட்டிக் கொள்ளாதா ஒரு நாளேனும்?"
இளவரசன்கூட ஏங்கியிருக்கிறான்.

"யாரும் கட்டிக்கொள்ளாத கனிமரம்
'வாரும்' என விழி கொட்டி அழைக்காதா?"
'பாரும்' என சுவை பழகத் தராதா?
'தீரும்' என தாகம் தீர விடாதா?"
யாரோ ஒரு கவிஞன் உருகினான்.

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி-உன்
விழியும் எழிலும் மல்லுக்குறுதி"
எவனோ ஒரு குறும்பன் கல்லெறிந்தான்.

எத்தனை விழிகள்-
அத்தனையிலும் வழியும் ஏக்கம்!

எட்டி எட்டி பார்த்தவர் பலர்
'எட்டாதாயின்
வெட்டெடன மற'ந்தாரில்லை.
எட்டி நின்று
கொட்டினர் வசை!

"அந்தப் புரங்களை
அலங்கரிக்கும் சுந்தரி" என்றனர்.
"வெள்ளிப் பணம் கண்டால்
பல்லிளிக்கும் பாவை" என்றனர்
"பட்டு மஞ்சங்களில் மட்டுமே
தோகை விரிக்கும் சொகுசுக்காரி"
என்றனர். ஏளனம் செய்தனர்.

அழகாய் பிறப்பது
அத்தனை பாவமா?

அழகாய் இருப்பதில்
இத்தனை கெடுதியா?

"எட்டிப் பார்த்தும்
கிடைக்காத எரிச்சல்.
புளித்த கனி என்று
புழுதிவாரித் தூற்றும் நரிகள்
தட்டிவிடடி புறங்கையால்"
தோழி சொன்னாள் சமாதானம்.

நிலைக்கண்ணாடி முன்
நின்று பார்த்தாள்.
தன்னைத் தானே ஒரு தங்கநிலா
தன் விழிகளால் உண்டு பார்த்தது!

'அழகாய்த்தான் இருக்கிறேன்'
சின்னதாய் கர்வம் மூக்கு நீட்டியது!

"அழகு ஒரு வலை
ஆடவர் அதில் சிக்கும் மீன்கள்!"
கூடாத தோழி ஒருத்தி குறி சொன்னாள்.

"மனம் உள்ளவரைதான்
மலருக்கு மரியாதை!
கனி உள்ளவரைதான்
தாங்கும் கொடிக்கு மரியாதை!
பணம் உள்ளவரைதான்
மனிதருக்கே இங்கு மரியாதை!"
தோழி பொடி போட்டாள்.

"என்னதான்
நீ சொல்கிறாய் தோழி?"

"குளம் வற்றியபின்
பறவைகள் நாடி வராது.
எழில் வாடியபின்
ஆண்கள் கண்கள் நம்மேல் பாயாது!"

"ஏன் பாயவேண்டும்
ஏன் நாம் ஏங்கவேண்டும்?"

"காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
கண்ணே நீ அதை கற்றுக்கொள்!"

தோழி சொன்னது
புரிந்தபோது அச்சம் வந்தது!

"போகாத வழிதன்னில்
போனால் சூழுமடி பழி!"

"போகாத வழி என்று ஏதுமில்லை
போவதுபோல் போய் வந்தால்
பழி என்று ஏதுமில்லை!"

'கரைப்பார் கரைத்தால்
கல்லும் கரையும்' பழமொழி.
கரைந்தாள். கனிந்தாள்.
எறிந்தாள் வலை!

மன்னன் வந்தான்
முடி அகற்றி.
அவள் மடியில் தலை புதைத்தான்!

"குடிகாக்கும் கோமகன்
என் மடியில்!"
கர்வம் அவள் சிரமேறியது.

மறுநாள்
தளபதி வந்தான்;
"நீயே கதி" என்றான்!

"படை நடத்தும் கரங்கள்
என் இடை நடுவே சரணம்!"
கர்வம் சிரத்தில் ஆடியது.

இளவரசன்
துள்ளும் காளையாய் வந்தான்.
"உண்டா இல்லையா?"
முதலில் இடை ஆராய்ச்சி.
"உண்மையா? பொய்யா?"
பின்னர் எழில் எடை ஆராய்ச்சி!

"இளவரசன் இங்கே
களவரசனாய் கிடக்கிறான்.
நாளைய மன்னன்
இன்று என் அடிமையாய் புரள்கிறான்!"
பிடிபடாத கர்வம் பிளிறியது!

"வேண்டாம் தோழி
வினையை நீ விதைக்காதே."
நல்லொரு தோழி நன்னெறி சொன்னாள்.

"வினையல்ல இது
விளையாட்டு!
அலைபாயும் ஆடவர் மனதை
வலை வீசிப் பிடிக்கும் விளையாட்டு!"

"பயமறியாத பருவமடி
பார்த்து நட
முள்மேலே கிடக்கிறாய்
பட்டுத்துணி நீ
கெட்டுக் கிழிந்தால்
கொட்டும் பழிச்சொல்!"

"அஞ்சுவேன் என்றா நினைக்கிறாய்
அடி போடி
கொஞ்சுவேன்-கூடிக் குலவுவேன்
கெஞ்சுவேன் அல்லேன்
மஞ்சத்தில் பலரை கெஞ்ச வைப்பேன்!"

"அகம்பாவம்-ஒரு நாள்
அய்யோ பாவம் ஆகச் செய்யும்."
தோழி சென்றுவிட்டாள்.

வந்தது நாள் அன்று,
தந்தது நோய் ஒன்று.

யவனம் சென்ற இளவரசன்
கவனம் இன்றி ஆடியதில்
புவனம் வெறுக்கும் நோயொன்று
பொல்லா நோயாய் தொற்றியது.
மருந்தில்லா நோய் அதனை
அவளுடன் கொஞ்சவந்த இளவரசன்
மஞ்சத்தில் வைத்துக் கொடுத்துவிட்டான்.

உடல் வாடியது.
ஒரு கூடாகியது!
எழில் தேய்ந்தது. இருள் சூழ்ந்தது.

நன்னெறி சொன்ன தோழி
காணவந்தாள் நேரில்.

"அஞ்சாமல் இரு தோழி
நோயை வென்றுவிடலாம்!
மன உரம்தானடி
மகத்தான மருந்து!"

"ஐயோ போடி
எனக்கு பயமாயிருக்கிறதடி!"

தோழி சிரித்தாள்.
"என் நிலை கண்டு
ஏளனமா?"

மறுத்தாள் தோழி
"இல்லையடி
அஞ்சுவதற்கு நீ அஞ்சவில்லை
அஞ்சக்கூடாத நேரத்தில்
அஞ்சிக் கலங்கலாமா?"

"என்னடி சொல்கிறாய்?"

"நானல்ல தோழி
நம் திருவள்ளுவரும் சொன்னாரடி
"அஞ்சவேண்டியதைக் கண்டும்
அஞ்சமறுப்பது அறியாமை"
எதற்கெடுத்தாலும் அஞ்சுவது
கோழைத்தனம் தோழி!
எதற்கு அஞ்சவேண்டும்.
என்று தெரிந்திருப்பது விவேகம்!"

**"அஞ்சுவ தஞ்சாமை பேதமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்"**
குறள்-428, அதிகாரம்-43

## ஸ்போர்ட்ஸ்

# விக்கெட் 300

மேற்கிந்தியத்தீவு வேகப்பந்து வீச்சாளர் கேர்ட்லி அம்புரோஸ் 300 டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்திய 12வது வீரர் என்ற பெருமையை அடைந்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள இலங்கை அணியுடன் நடந்த முதலாவது டெஸ்ட் போட்டியில், முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை வீழ்த்திய தன் மூலம் இந்த இலக்கை எட்டினார் அம்புரோஸ்.

33 வயதான அம்புரோஸ் 300 விக்கெட்டுக்களை வீழ்த்திய 4வது மேற்கிந்தியத்தீவு வீரர். இவருக்கு முன்னர் மல்கம் மார்ஷல் (376), கொட்னி வோல்ஷ் (332), லான்ஸ் கிப்ஸ் (309) ஆகிய மூன்று மேற்கிந்தியத்தீவு வீரர்கள் 300 விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்கள்.

1988ம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராகத் தனது முதல் பந்து வீச்சைத் தொடங்கிய அம்புரோஸ், 71வது டெஸ்ட் போட்டியில், தனது சொந்த மைதானமான செண்ட் ஜோன்ஸ் மைதானத்தில் இந்த இலக்கை எட்டினார். இவர் 35 தடவைகள் 5 விக்கெட்டுக்களை சாய்த்திருக்கிறார்.



உலக அளவில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் இந்தியாவின் கபில் தேவ் (434). இவரை அடுத்து றிச்சர்ட் ஹாட்லி, இயன் பொத்தம், பொப் வில்லிஸ், ட்ருமன், டென்னிஸ் லில்லி, இம்ரான்கான், வாசிம் அக்ரம் ஆகியோரும் 300 விக்கெட்டுக்களைக் கடந்துள்ளனர்.

# பிரசாத்துக்கு விருது!

இந்தியாவின் மிதவேகப்பந்து வீச்சாளர் வெங்கடேஷ் பிரசாத் 1996-97ம் ஆண்டிற்கான சியட் சர்வதேச விருதைப் பெறுகிறார்.



சியட் தரப்பட்டியலில் 92 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் இருக்கிறார் பிரசாத். இவருக்கு அடுத்தபடியாக 85 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தில் வாசிம் அக்ரம் இருக்கிறார்.

கடந்த வருடம் மே மாதம் இங்கிலாந்தில் நடைபெற்ற போட்டிகள் தொடக்கம் இந்த வருடம் மே மாதம் மேற்கிந்தியத்தீவுடன் நடந்த போட்டிகள் வரை இந்த விருதுக்காகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்த ஒரு வருட காலத்தில் பிரசாத் 15 டெஸ்ட் போட்டிகளில் 55 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். 5 முறை 5 விக்கெட்டுக்களை எடுத்துள்ளார். அதேபோல் 30 ஒருநாள் போட்டிகளில் 48 விக்கெட்டுக்களையும் சாய்த்துள்ளார்.

பிரபல முன்னாள் கிரிக்கெட் வீரர்களான சுனில் கவாஸ்கர், கிளைவ் லொய்ட், இயன் சப்பல் ஆகியோர் பிரசாத்தை சிறந்த வீரராகத் தெரிவு செய்தனர்.

1995-96 முதல் சியட் நிறுவனம் சிறந்த கிரிக்கெட் வீரர்களின் பட்டியலை தயாரித்து வருகின்றது. இந்த நிறுவனத்தால் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்டு முதலில் விருது பெற்றவர் பிரையன் லாரா.

# சிந்தியா பதில்கள்

**★ படை நடவடிக்கைக்கு பாகிஸ்தான் உதவுகிறதாமே- உண்மையா?**

எஸ். பகீரதன், கொழும்பு-04.

உதவுவதேயில்லை என்று முற்றாக மறுத்தால் சுப்பர் பொய்! 'வெற்றி நிச்சயம்' நடவடிக்கைக்கு நேரடியாக உதவவில்லை என்று சொன்னால் ஏற்கலாம்! எல்லாவற்றையும்விட ஆச்சரியம், மறுப்பில் காட்டிய தீவிர வேகம்!

★

**★ தமிழ்-முஸ்லிம் கட்சிகளின் ஒன்றுபட்ட கருத்தைக் கேட்கிறதே ஐ.தே.கட்சி?**

வி. தில்லைநாதன், கொழும்பு-12.

ஒன்றுபடமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் கேட்கிறார்கள். தப்பித்தவறி ஒன்றுபட்டால் வேறொரு கொக்கி தேடுவார்கள்.

★

**★ ஸ்ரீறிமணியின் பதவியைப் பறித்தது நியாயமா?**

எம். பசீர், ஏறாவூர்.

எதிரணியாகச் செயற்பட்டுக்கொண்டு, ஆளும் அணிக்குள் இருக்க அம்மணி ஆசைப்படுவது மட்டும் நியாயமுங்களா!

★

**★ தமிழ் சினிமா உலக தொழில் நுட்ப முன்னேற்றம் பற்றி என்ன நினைக்கிறீர்? ஹொலிவூட்டை மிஞ்சிவிடுவோமா?**

எஸ். எல்.கபூர், கந்தளாய்.

தொழில் நுட்பத்தில் மிஞ்சுகிறார்களோ இல்லையோ, தொடும் நுட்பங்களில் ஹொலிவூட்டையே மிஞ்சிவிடுவார்கள்.

★



தேவயாணி, விக்னேஷ்-'காதலி'

**★ பி.பி.சி. போன்ற வெளிநாட்டுத் தொலைக்காட்சிகளுக்கு இலங்கைச் செய்திகளை ஒளிபரப்ப உள்ள தணிக்கை நீக்கப்பட்டுள்ளது. ஏன் இந்த திடீர் முன்னேற்றம்!**

சி. ஜெகதீஸ், திருமலை.

முன்னேற்றம் என்றால் சந்தோசம்தான். எனக்கென்னவோ வெகுஜன தொடர்பு அமைச்சு மாற்றம் தொடர்பான சந்தேகங்களை கழுவும் முயற்சிபோலத் தெரிகிறது. அதற்காக தர்மசிறியர்தான் தடைபோட்டிருந்ததுபோல ஓர் எண்ணம் ஏற்படச்செய்திருப்பது வருத்தத்துக்குரியது. ஏதோ அவர் கடும்போக்காளர் என்பதால் மாற்றப்பட்டது போல் அல்லவா இருக்கிறது. ஆனால் கதைவேறு என்பது விரைவில் தெரியவரும் என்று நினைக்கிறேன்.

★

**★ 'சியாராம்' கோப்பை யாருக்குச் சேரும்? இந்தியா உலக சாதனை படைத்தது உண்மையா?**

செல்வி கே. இந்துமதி, கண்டி.

தாமதமான கேள்வி என்பதால் பதில் ரெடி. பாகிஸ்தான் கிளப்பிக்கொண்டு டாட்டா காட்டிவிட்டுப்போய்விட்டது. 'சியாராம்' கோப்பைக்கான ஒருநாள் போட்டிகள் சர்வதேச ஒருநாள் போட்டிகளின் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. ஆதலால் சாதனை பற்றிய பேச்சுக்களுக்கே இடமில்லை.

★

**★ டியர் சிந்தியா! அசாருதீனை தற்காலிகமாக நிறுத்திவைத்தது சரியா?**

பி. சிவகணேஸ், மட்டக்குளி.

ரஜினி முதல் கலைஞர் கருணாநிதிவரை தப்பு என்கிறார்கள். ஆனால் 'சியாராம்' கிண்ண இறுதிப்போட்டியில் அசார் ஏமாற்றி விட்டாரே. நான்கு ரன்களுடன் 'குட்பை' சொல்லிவிட்டாரே! அப்படி என்ன அவசரம் அசார்?!

★

**★ அன்புள்ள சிந்தியா! பாகிஸ்தான் வீரர் சயீத் அன்வர் ரன்னர் வைத்து ஆடியது சரியா?**

ஜி. பிரகாஷ், மாத்தளை.

'அதில் ஒரு தவறும் கிடையாது' என்பது இந்திய முன்னாள் கப்டன் ஸ்ரீகாந்த் சொல்லியுள்ள அபிப்பிராயம்!

★

**★ அடடே... அடடேமார்க் கதை ஒன்று சொல்லுங்கள்! சிந்தியா?**

ஏ. லோரன்ஸ், காலி.

சமீபத்தில் படித்த தகவல்- இது நடந்தது அமெரிக்காவில்.

விவாகரத்துக் கோரி கணவர்மீது வழக்குத் தொடுத்தார் ஒரு பெண். காரணம் ருசிகரம்.

"என் கணவர் இரவில் கிச்சு கிச்சு மூட்டுகிறார்!" என்பதுதான் மனைவியின் குற்றச்சாட்டு.

கணவரும் விடவில்லை; தன் தரப்பு வாதத்தை எடுத்துப்போட்டார்:

"கிச்சு கிச்சு மூட்டினால் அவள் சிரிக்கிறாள். கணவன் தன் மனைவியைச் சிரிக்க வைப்பதில் என்ன தவறு?"

உடனே மனைவியின் சட்டத்தரணி எழுந்தார்:

"கிச்சு கிச்சு மூட்டும்போது சிரிப்பது மகிழ்ச்சியினால் அல்ல; அது கூச்சத்தால் தோன்றும் உதடுகளின் நெகிழ்ச்சி மட்டுமே. எனவே அது சிரிப்பே அல்ல அல்ல. அது ஒரு தொல்லையே!" என்றார் சட்டத்தரணி.

நீதிபதி மனைவியின் சட்டத்தரணியின் வாதத்தை ஏற்று தீர்ப்பு வழங்கினார். (கிச்சு கிச்சு மூட்டும் கணவர்கள் ஜாக்கிரதை!)

★

**★ அன்றைய காதல், இன்றைய காதல் ஒப்பிடுக?**

ஆர்.பி. சுரேன், மட்டக்களப்பு.

முன்னர் அதிவேகக் காதல் தூதுக்கு புறாதான் இருந்தது. இப்போ தொலைபேசி போன்ற தொழில்நுட்ப முன்னேற்றங்கள் லவ் பரிவர்த்தனை செய்கின்றன.

ஒரு சின்ன ஜோக்:

ஓர் இளம்பெண்ணின் தந்தை அவசரம் அவசரமாக தன் மகளிடம் சொன்னார்: "அந்த ஸ்டெத்தை எடு, மருத்துவப் பெட்டியை எடு, எமர்ஜென்ஸி கோல். யாரோ போனில், நான் உடனே வராவிட்டால் இறந்துவிடுவேன் என்று சொல்கிறான்"

பெண் நிதானமாகச் சொன்னாள்:

"அப்பா அந்தப் ஃபோன் எனக்கு வந்ததுதான்!"

★

**★ இந்திய கிரிக்கெட் அணியில் வினோத் காம்ளி நிலைப்பாரா?**

கே. கன்னன், ஜா-எல.

சியாராம் கிண்ணப் போட்டியில் விளாசல் மன்னராக வெற்றிநடை போட்டிருக்கிறார். அந்த நடை தொடர்ந்தால் அசைக்க முடியாது.

★

**★ போட்ட படங்களையே ஒளிபரப்புகிறதே சுயாதீன தொலைக்காட்சி?**

திருமதி மாலா, கொழும்பு-11.

உள்ளது போதாதென்று, அரசுமீது தமிழ்பேசும் மக்களுக்கு வெறுப்பு ஏற்படுத்தும் முயற்சிகளில் ஒன்றை திறம்படச் செய்துகொண்டிருக்கிறார்கள்! ஒரு கமிஷன் போட்டு சுயாதீன தொலைக்காட்சிக்குள் உள்ள அரச விரோதிகளை ஆராய்ந்தால் என்ன? மகஜர் கொடுக்கவேண்டும்! ரூபவாகினியில் 'மீண்டும் கோகிலா' நல்ல படம்!



மந்த்ரா

**★ டியர் சிந்தியா! பிரபு-மந்த்ரா விவகாரம் உண்மைதானா?**

எஸ். வசீகரன், நீர்கொழும்பு.

பஞ்சும் நெருப்பும் பற்றிக்கொள்ளுமா என்று சந்தேகம் வரலாமா வசீ? அதுவும் பயங்கரமான பஞ்சு! நெருப்பும் லேசுப்பட்டதா என்ன?!

★

**★ மாணவர்கள் தவறு செய்ய யார் காரணம்?**

வி. சுசிலா, மன்னார்.

சில சமயங்களில் பெற்றோர்களும்தான்!

கணக்குப் பரீட்சையில் ஃபெயிலான மகனை அழைத்துக்கொண்டு ஆசிரியரிடம் போனார் தந்தை.

"ஏன் என் பையனை ஃபெயில் ஆக்கினீர்கள்?"

"உங்கள் பையன் மண்டு. ஒரு சின்னக் கணக்குக் கொடுத்தேன் அதையே சரியாகச் செய்யவில்லை! உன்னிடம் இரண்டு வாழைப்பழம் இருக்கிறது. நான் இரண்டு தருகிறேன். இப்போது மொத்தம் எத்தனை இருக்கும்? என்று கேட்டேன்: அவன் "மூன்று" என்கிறான்."

தந்தை சொன்னார்:

"அவன் ஒரு வாழைப்பழத்தை தின்றிருப்பான். அவனுக்கு வாழைப்பழம் என்றால் உயிர். அந்த வாழைப்பழத்தின் விலை என்ன இருக்கும்? 50 சதம் இருக்குமா? இதோ 50 சதம். என் மகனை முதலில் பாஸ் செய்ய வையுங்கள்."



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 88

## படைகளின் அணிவகுப்பு

இராஜகுமாரன்

இராமபிரான் இளையபெருமாளாகிய இலக்குவனைத் தன் அருகே அழைத்து, வானரப் படைத்தளபதிகளை ஒன்று கூடுமாறு அழைக்கும்படி கூறினார். பெரும் சமுத்திரம்போல் கண்ணுக்கெட்டிய தூரம்வரை பரந்திருந்த வானர சேனையின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று அவ்வப்பகுதித் தானைத் தலைவர்களை அழைத்துவர இலக்குவன் உரிய ஏற்பாடுகளைச் செய்தார்.

ஆஞ்சநேயர் அப்போது இராமபிரானின் நிழலைப்போல் நின்றிருந்தார். அவரிடம், "மாருதியே! இலங்காபுரிக் கோட்டையின் மேற்குத்திசை வாயிலை ஒட்டிய பகுதியை நீர் பொறுப்பேற்க வேண்டும், இப்பணிக்கு வேண்டிய படைவீரர்களைத் தெரிவு செய்ய



வேண்டியது உமது பொறுப்பு. மேற்குக் கடலே அவ்வாயிலின் அரணாக உள்ளது." என்றார். ஆஞ்சநேயரும் இராமபிரானின் தாளினைத் தொட்டுவணங்கி அப்பணியினை ஏற்றுக்கொண்டார்.

அப்போது சுக்கிரீவன், அங்கதன், விபீடணர், ஜாம்பவன் போன்ற அனைவரும் அங்கு வந்துசேர்ந்தனர். ஏனைய தானைத் தலைவர்களும் இராமபிரானின் கட்டளையை எதிர்பார்த்து அங்கு வந்து குழுமிவிட்டனர். தன்னுடைய கருணை பொங்கும் விழிகளால் அனைவரையும் நோட்டமிட்டவாறு, "தானைத் தலைவர்களே! இலங்கை வளநாட்டை ஆக்கிரமிக்க வந்தவர்களல்ல நாம்; அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டவே நாம் இங்கு வந்திருக்கிறோம். ஆகவே அக்கிரமம் செய்யும் நோக்கம் எழவேகூடாது. அரக்கப் படைகள் ஆயுத வலிமை கொண்டவர்கள். வில், வேல், வாள், ஈட்டி போன்ற கொடிய ஆயுதங்களைக் கொண்டு அவர்கள் நம்மீது தாக்குதல் தொடுக்கக்கூடும். அத்தகைய ஆயுதங்கள் எம்மிடம் மிகவும் சொற்பமாகவே உள்ளன. கற்களையும் மரம் தடிகளையும் கொண்டுதான் எமது வீரர்கள் போர் புரிந்தாக வேண்டும். வைராக்கியத்துடன் நேர்மையான நிலைப்பாடுகளைக் கொண்ட நாம் நிச்சயம் வெற்றிபெறுவோம் என்பது திண்ணம், எமது வீரர்கள் தைரியத்தை இழக்காமல், வேண்டிய உற்சாகம் தந்து வழி நடத்த வேண்டியது உங்கள் பொறுப்பு!"

இவ்வாறு இராமபிரான் சிற்றுரை கூறி முடித்த பின்னர் சுக்கிரீவனை அழைத்து, "நண்பனே! உமது படைகளுடன் நீர் எப்போதும் என் அருகிலேயே இருக்க வேண்டும்," என்றார். தென்திசை வாயிலுக்குத் தன் படையுடன் செல்லுமாறு வாலி மகன் அங்கதனைக் கேட்டுக்கொண்டார். நீலன் என்ற வீரனை தனக்குரிய பெரும் படையுடன் கிழக்கு வாயிலை நோக்கிச் செல்லுமாறு பணித்தார்.

இவ்வாறு படை அணிகளை பல்வேறு திசைகளுக்கும் செல்லுமாறு கூறிவிட்டு, விபீடணரை அழைத்து பல்வேறு திசைகளுக்கும் செல்லும் வீரர்களை அவ்வப்போது சென்று பார்வையிட்டு, அவர்களுடைய தேவைகளைக் கவனிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

### மீண்டுமொரு ஆலோசனை

தனது அரண்மனையில் இருளில்- பெரும் மனப் போராட்டத்துடன் இருந்த இராவணன், இரவு இரண்டாம் சாமத்தின் போது கதவுகளைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். அப்போது அங்கிருந்த காவலன் ஒருவன் இராவணன் முன்பு வந்து வணங்கி, சார்த்தூலன் என்ற ஒற்றன் வந்திருப்பதாகத் தகவல் தெரிவித்தான். அவனைத் தன்னிடம் அனுப்பி வைக்குமாறு கூறிய இராவணன், மீண்டும் அதே அரண்மனைக்குத் திரும்பிச் சென்றான். அப்போது அவ்வரண்மனை விளக்குகளை சேடிமார் ஏற்றிக்கொண்டிருந்தனர். பாதிவிளக்குகளே ஏற்றப்பட்டிருந்தன. அதுவே போதும் என்ற தோரணையில் சேடியரைச் சைகை மூலம் வெளியே செல்லுமாறு பணித்தான். அவர்களும் அங்கிருந்து ஓடிச் சென்றனர். சார்த்தூலன் இராவணனின் தாள் பணிந்து எழுந்தான். அவன், வானரப்படைகள் அணிவகுத்து, இலங்கைக் கோட்டையின் சகல பகுதிகளையும் முற்றுகையிடச் செய்யப்பட்ட ஏற்பாடுகளை இலங்கை வேந்தனிடம் ஒன்றும் ஒளியாமல் கூறினான்.

சார்த்தூலன் கூறியவற்றைக் கேட்டதும் இலங்கை வேந்தனுக்கு மேலும் பன்மடங்கு கோபம் பொங்கி எழுந்தது. ஏனைய விபரங்களைப் பற்றிய தகவலைவிட, தன் தம்பி விபீடணனைப் பற்றிக் கூறியவற்றால்தான் அவன் சினம் பன்மடங்கு அதிகரித்தது. தன் பற்களை நறநறவென்று கடித்தான். அதனாலெழுந்த ஒலி அம்மாளிகையின் தூண்களில் பட்டு எதிரொலித்தது.

உடனடியாக அமைச்சர்களையும் தானைத் தலைவர்களையும் அம்மாளிகையில் வந்து கூடுமாறு அழைத்தான் இராவணன். அவர்களும் வந்து சேர்ந்தனர். அவர்கள் மத்தியில் பேசும் போது இராவணன், "நீங்களெல்லாம் பெரும் வீரர்கள்! எத்தனையோ போர்களில் வெற்றியீட்டி சாதனை படைத்தவர்கள்! தேவேந்திரனையும் அவனுடன் வந்த தெய்வீக சக்தி படைத்த வீரர்களையும் வென்று அசுர இனத்துக்கே பெரும் புகழீட்டித் தந்தவர்கள்! இவ்வாறு வீரவரலாறு படைத்த உங்கள் இனத்தை வேரோடு அழிக்கவென- கேவலம்-இரு மானிடப்பதர்கள் இலட்சக் கணக்கான வானரப் படைகளுடன் வந்திருக்கின்றனர். வானரங்கள் நமது கோட்டை மதில்களைச் சுற்றி வளைத்து நம்மைத் தாக்கும் நோக்குடன் வந்து சேர்ந்துவிட்டார்கள், ஆனால் நமது பெரும் வீராதி வீரர்கள்- சூராதி சூரர்கள் இன்னும் தூங்கி வழிந்து கொண்டிருக்கிறார்கள். நம்மத்தியில், நம் எதிரிகளை- தெய்வீக சக்தி படைத்தவர்கள் என்றும் கடவுளரின் அவதாரம் என்றும் போற்றிப் புகழ்ந்த வண்ணம் பலர் இருக்கவே செய்கின்றனர். குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பினைப் போல் என் கூடப் பிறந்தவனே அந்த எதிரிகளுடன் கைகோர்த்து நம்மை எதிர்க்கத் துணிந்து நிற்கிறான்!

### "துரோகிகள் வெளியேறட்டும்!"

உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன்! நம் எதிரியைப் புகழ்ந்து வாழ்த்துப் பாடிக்கொண்டு இங்கு எம்மத்தியில் எவரும் இருக்கவேண்டாம்! அவர்களுக்கு நான் தண்டனை தருவதற்கு முன் அவர்களாகவே வெளியேறிவிடட்டும்! ஏனையோர் இங்கிருந்து- இப்போது நான் என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனைகளைக் கூறுங்கள்!"

இவ்வாறு ஆக்கிரோஷத்துடன் இராவணன் கூறியதும் மாபெரும் வீரனான நிகும்பன் எழுந்தான்." அர்ப்ப குரங்குப் படைகளைக் கண்டு, பல போர்க்களங்களிலே வெற்றி ஈட்டிய நமது பெரும்படை, கோழைகளைப்போல் அச்சங்கொள்ளலாமா? நம் இனத்துக்கே அவமானம். அந்தக் குரங்குகள் எந்த ஆயுதங்களையும் கனவில் கூடக் கண்டிருக்கமாட்டா. எமது படைகளுக்கு இருக்கும் பயிற்சி முறைகளையும் அவை கற்பனையில் கூடக் கண்டிருக்கப் போவதில்லை. ஆகவே வானரப்படையுடன் வந்து-எம்படையினைத் துச்சமாக மதித்துப் போரிட வந்த அந்த நரர்களுக்கு நல்ல பாடம் புகட்டி அனுப்புவதே ஒரே வழி!" என்று நிகும்பன் கூறினான்.

இராவணனின் தாய்மாமனான மாலியவான், அப்போதும் அந்த மண்டபத்தின் ஒரு மூலையில் அமர்ந்திருந்தான். இராவணனின் எச்சரிக்கையை செவிமடுத்தும் அம்மண்டபத்தைவிட்டகலாமலிருந்த அந்த முதியவர் மீண்டும் எழுந்து, "சிறந்த பாதுகாப்பு அரண் செய்யப்பட்ட இலங்கை மாநகருக்குள் ஏற்கனவே தன்னந்தனியாக ஒரு குரங்கு வந்து விளைவித்த தீங்குகளை எம்மில் எவரும் எண்ணிப்பார்க்கவே இல்லை! எமது அசுரப் படைகளில் பல்லாயிரம் பேரை அந்தக் குரங்கு தனித்தே நின்று கொன்று குவித்தது. இராவணா! உன் மகனையே அந்த வானரம் கொன்றுவிட்டது. பிரதான தளபதிகள் ஐவரையும் மாய்த்துவிட்டது. அழகு சிந்தும் இலங்காபுரியின் பெரும் பகுதியைத் தீமூட்டி எரித்து எழிலைக் குலைத்தது. ஒரேயொரு குரங்கே இத்தனை தீங்குகளையும் செய்திருக்கிறது என்றால் இலட்சோப இலட்சம் குரங்குகளைக் கொண்ட அந்தப் படை எத்தகைய தீங்குகளைச் செய்யப்போகின்றனவோ தெரியாது.

### "இனத்தைக் காப்பாற்று!"

இராவணா! உன்மீதும் நம் இனத்தின் மீதும் கொண்ட மாறாத வாஞ்சையினால் மீண்டும் உன்னை வேண்டிக் கேட்கிறேன்! எனக்கு நீ எத்தகைய தண்டனையைக் கொடுத்தாலும் அதற்காக நான் அஞ்சப்போவதில்லை. கற்பின் இருப்பிடமான அந்தச் சீதையை இராமனிடம் ஒப்படைத்துவிடு. இதனால் நீ மட்டுமல்ல- நம் இனமே அழிவிலிருந்து காப்பாற்றப்படும். இதைவிட வேறு எதுவும் எமைக் காக்கப் போவதில்லை!"

இவ்வாறு மாலியவான் கூறிமுடித்ததும் இராவணன் தன் இருக்கையிலிருந்து இறங்கி வேகமாக மாலியவானை நெருங்கி, "இன்னும் என் முன்னே நிற்கும் துணிவு உனக்கு எப்படி வந்தது? என் தாய்த் தெய்வத்துக்காகவே உன்னை இன்னும் உயிரோடு விட்டு வைத்திருந்தேன்!" என்று கூறிய இராவணன் உறையிலிருந்த தன் வாளினை உருவி எடுத்தான். மாலியவானின் தலை அவனுடைய உடலிலிருந்து ஒரே வீச்சில் வெட்டி வீழ்த்தப்படப் போகிறது என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தனர். மாலியவானும் அதனையே எதிர்பார்த்து தன் இரு கண்களையும் மூடியபடி நின்றிருந்தான். ஆனால் உருவிய வாளை அருகே இருந்த ஒரு பாரிய தூணின் மீதே இராவணன் வீசினான், அத்தூண் இரண்டு துண்டுகளாக நிலத்தில் வீழ்ந்தது. அம்மண்டபமே பூகம்பத்தில் பட்டுக்கொண்டது போல் நடுங்கியது. அவையிலுள்ளோர் அனைவரும் அதிர்ச்சியடைந்தவர்களாக இருக்க, இராவணன், "ஏய் யாரங்கே? இந்தக் கிழவனை இழுத்துச் சென்று பாதாளச் சிறையில் தள்ளுங்கள்!" என்று கத்தினான். வெளியே காவலுக்கு நின்ற இரு வீரர்கள் ஓடோடிவந்து மாலியவானை இழுத்துச் சென்றனர்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 86**

**சரியானவிடை:- மாலியவான்.**

1. எஸ்.சசிகுமார், சாரதா தியட்டர் எதிரில், செங்கலடி.
2. எம்.மஹிந்தன், மன்னார் றோட், வவுனியா.
3. வி.சுகன்யா, போல்கொல்ல றோட், உடதலவின்ன.
4. ஸ்ரீ.வைஷ்ணவி, விகாரை வீதி, திருகோணமலை.
5. கு.சரவணபவன், பஸல்ஸ் லேன், வெள்ளவத்தை, கொழும்பு-6.

**போட்டி இல. 88** கேள்வி:- ஆஞ்சநேயர் எத்திசை வாயிலுக்குச் செல்ல வேண்டும்?

ஜூன். 28 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி-இல.88, தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# மனச்சாட்சி பேசுகிறது

காதிலை பூ கந்தசாமி

தமிழ்க்கட்சித் தலைவர்களின் மனச்சாட்சி பேசுமா? என்று கேட்டிருந்த வாசகர் கடிதமொன்றைப் படித்தார் காதிலை பூ கந்தசாமி. யார் இந்த வாசகர்? மனச்சாட்சி இல்லையென்றோ நினைத்தார் எனத் துடித்தார் கந்தசாமியார். விளைவு இதோ;-



மனச்சாட்சி:
கண்போன போக்கிலே
கால் போகலாமா
கால் போன போக்கிலே
மனம் போகலாமா?
மனம் போன போக்கிலே
மனிதன் போகலாமா?
மனிதன் போன பாதையை
மறந்து போகலாமா?

தமிழ்க் கட்சிகள்: யாரப்பா நீ? ஏனப்பா எங்களைப் பார்த்துப் பாடுகிறாய்?

மனச்சாட்சி: ஹா ஹா ஹா நான்தான் மனச்சாட்சி.

தமிழ்க் கட்சிகள்: அப்படியா, பேஷ் பேஷ், எங்கே இருந்து வருகிறீர்?

ம.சா: உங்களுக்குள் இருந்துதான் வருகிறேன்.

த.க: மனச்சாட்சி என்று யாரும் எங்களுக்குள் இருந்ததாகவே ஞாபகம் இல்லையே. யாரிடம் சொல்கிறீர் கதை. அடையாள அட்டை இருக்கிறதா?

ம.சா: ஹா ஹா ஹா அட்டை, மட்டை, குட்டை! நீங்களெல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். நீங்கள் பேசிப் பேசிப் போடுவதெல்லாம் முட்டைகள். உங்கள் கைகளில் இருப்பது அட்டைக் கத்திகள். அதனால் கிடைக்காது வெற்றிகள்!

த.க: (மூத்த தலைவர் ஒருவர் ஆவேசமாக எழுகிறார்) யார் இந்த மனச்சாட்சி? இதனிடம் இருந்து உடனே தேவை மீட்சி! வன்முறை என்பது எமக்குப் பிடிக்காத காட்சி! வன்முறையைத் தூண்டும் விதமாக பேசுவதால் மனச்சாட்சி கேட்கவேண்டும் மன்னிப்பு! அதுவும் இப்போதே, இந்த நொடியே!

ம.சா: மூத்த தலைவரே! முன்தோன்றிய முழக்க அண்ணலே! கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடிக்கு முடிசூட்டவே அவதரித்தோம் என்று சொல்லாமல் சொல்லி வாக்குகளை அள்ளிப்போன வாக்குறுதி வள்ளல்களே! வெறிகொள் தமிழர் புலிப்படை அவர் வெல்வார் என்பது வெளிப்படை, மறவர் படைதான் தமிழ்ப்படை, குலமானம் ஒன்றே அடிப்படை என்று பாடிய உணர்ச்சிக் கவிஞனை உச்சிமுகர்ந்த உத்தமர்களே! கவிஞன் எழுதியதை மனப்பாடம் செய்து நம்காதுபட உரத்து கர்ஜித்த சிங்கங்களே! பாலஸ்தீன விடுதலை இயக்கம்போல் இங்கும் உருவாகும், அது வானை அதிரவைக்கும் என்று பேசி மேடையை அதிரவைத்து கரகோசம் வாங்கி காதுகள் அதிரவைத்த கண்ணியவான்களே! உங்களுக்கா பிடிக்கவில்லை வன்முறை? உங்களுக்கோ சகிக்கவில்லை போர்முறை?

மூத்த தலைவர்: அதையெல்லாம் கேட்க யார் நீர்? அப்போதுதான் நம்கூட நீர் இருக்கவே இல்லையே! நமக்குள் நீர் இருந்திருந்தால் நாம் அப்படி பேசியிருக்கவே மாட்டோமே!

ம.சா: ஹா ஹா ஹா அப்போது நான் மௌனமாக இருந்தேன்!

மூ.த: காரணம்?

ம.சா: ஹா ஹா ஹா துரோகி என்று உங்களால் தூற்றப்படாமல் இருப்பதற்காக!

த.க: (மூத்த தலைவர் மௌனமாக இருக்க, ஏனையோர் பேசுகின்றனர்) ஐயாவை குற்றம் சொல்கிறீர் ஒ.கே. நாங்களும்தானே ஆயுதம் ஏந்தி அடிபட்டோம்!

ம.சா: ஹா ஹா ஹா கொக் கொக் கொக் ஹா ஹா ஹா.

த.க: என்ன சிரிப்பு?

ம.சா: இது அனுதாபச் சிரிப்பு!

த.க: ஏன் அனுதாபம்?

ம.சா: நீங்கள் ஆயுதம் ஏந்திய காலத்தைவிடவும் அதைச் சொல்லியே கையேந்திக் கொண்டிருக்கும் காலம்தான் அதிகம் என்று நினைத்தேன், அதுதான் சிரித்தேன். இன்று உங்கள் நிலை அனுதாபத்துக்குரியதுதானே!

த.க: (ஒரு புத்திசீவி எழுகிறார்) முட்டாள்! போட்ட முதலைவிட மும்மடங்கு இலாபம் பெறுகிறோம், நாமா அனுதாபத்துக்குரியவர்கள்?! ஸ்ருப்பிட் ஐ.சே.ஸ்ருப்பிட்!

ம.சா: சபாஷ்! எப்போதாவது ஒருமுறை உங்களை அறியாமலேயே உண்மை பேசிவிடுகிறீர்கள். அதுசரி அண்ணர் யாருங்க?

த.க: யார் இவரா? ஹா ஹா ஹா... பில் கிளின்ரனின் ஃப்ரெண்ட். எலிசபெத் ராணிக்கு இங்கிலீஸ் ரியூசன் எடுத்தவர். கனடா பிரதமருடன் டின்னர் சாப்பிட்டவர்.

ம.சா: பேஷ்-பேஷ். நடந்து வந்த பாதையை மட்டுமல்ல உங்களை நம்பிவந்தவர்களையும் முட்டாள்களாக்கி கொண்டிருக்கிறீர்கள்?

த.க: அபாண்டமான குற்றச்சாட்டு. ஆதாரம் உண்டா உம்மிடம்?

ம.சா: நிறையவே உண்டு!

த.க: உதாரணம்?

ம.சா: பந்தா-பகட்டு-பதவி மிடுக்கு என்பவற்றின்மீது நீங்கள் கொண்டுள்ள மோகம்! கோட்டு-சூட்டு-பூட்சு என்பவற்றுக்கு நீங்கள் காட்டும் மட்டற்ற மரியாதை! சூட்டு, டேஸ்ட்டு என்று எல்லாமே மாறிப்போய்விட்ட உங்கள் நடைமுறைகள்!

த.க: அரசியல் என்றால் இப்படித்தானிருக்கும், நீர் கண்டுகொள்ளவேண்டாம்!

ம.சா: அரசியலில் சேறும் உண்டு, சோறும் உண்டு. நீங்கள் சேறையெல்லாம் சோறு என்று சொல்லி உண்டுகொண்டிருக்கிறீர்கள்!

த.க: அழுக்கையுண்டு தடாகத்தை சுத்தப்படுத்தும் மீன். நாமும் அப்படித்தான் என்று வைத்துக் கொள்ளுமேன்!

ம.சா: தென்னிலங்கை அரசியலின் அழுக்கை உண்டுவிட்டு, தீந்தமிழர் அரசியலில் அல்லவா அதனைக் கக்கிக் கொண்டிருக்கிறீர்கள்! செந்தமிழர் அரசியலையல்லவா அசுத்தமாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்!

த.க: எங்களை என்ன செய்யச் சொல்லுகிறீர்?

ம.சா: ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்று தெரிந்த பின்னரும் தனித்தனியாக ஏன் பிரிந்து நிற்கிறீர்கள்?

த.க: கொள்கை முரண்பாடு?

ம.சா: ஹாஹாஹா... கொள்கை தலைவராக இருப்பது. ஒன்றாகிவிட்டால் அதில் வரும் உங்களுக்குள் முரண்பாடு. அதுதானே இருக்கின்றன பல கட்சிகள்!

த.க: இல்லையில்லை வேறு முரண்பாடுகளும் இருக்கின்றன.

ம.சா: என்னப்பா முரண்பாடு? நேற்று அங்கிருந்தவன் இன்று இங்கிருக்கிறான். இங்கிருந்தவன் அங்கிருக்கிறான்! தரம் என்ன- தராதரம் என்ன? ஓடிவருகிறவனை வரவேற்கிறீர்கள்! சமூகவிரோதிகளையும் அணைத்துவைத்திருக்கிறீர்கள்! சாவுக்கிராக்கிகளை வேட்பாளர்களாக்குகிறீர்கள்! யார் தலைவர் என்பதை வைத்துத்தானே இன்று இயக்க வேறுபாடு தெரிகிறது! இயக்கப் பெயரும், தலைவர் பெயரும் இல்லையென்றால் எல்லா இயக்கமும் ஒன்றுபோல்தானே இருக்கிறது! கொள்கை ஒன்றுதான், அது எப்படியாவது இயக்கம் நடத்துவது! இயக்கவிதி ஒன்றுதான், அது எவரையும் உள்ளே இழுத்துகொள்வது! பின்னர் என்ன முரண்பாடு?

த.க: என்னப்பா செய்வது, வேட்பாளர் பட்டியலை நிரப்ப ஆட்கள் வேண்டாமா?

ம.சா: எல்லா இயக்கத்திலும் எண்ணிப்பார்த்தால் ஏதோ கொஞ்சம் போராளிகள் தேறுவார்கள். அதனால் நீங்கள் எல்லாம் ஒன்றாய் சேர்ந்தால் திறமையானவர்களுக்கு உள்ள பஞ்சத்தால் தீயவர்களை வளர்ப்பதையாவது நிறுத்தலாம் அல்லவா?

த.க: (பலர் ஒரே சமயத்தில் எழுகிறார்கள்)
அதுதான் சரியான யோசனை.
அதுதான் நல்ல யோசனை
அதுதான் உகந்த யோசனை.

ம.சா: சபாஷ் உங்களுக்குள் ஒரு தலைவரை தெரிவு செய்ய உங்களால் முடியுமா?

த.க: (தலைவர் தெரிவில் மோதல் உருவாகி அடிபிடிப்பட்டு இரத்தம் சிந்துகிறார்கள். சட்டைகள் கிழிகின்றன!)

ம.சா: ஹா ஹா ஹா
ஹா ஹா ஹா
இப்போது புரிகிறதா கொள்கை முரண்பாடு எதுவென்று? இப்போது புரிகிறதா ஒற்றுமைக்கு தடை என்னவென்று? ஹா ஹா ஹா



நீங்கள் சொன்ன வார்த்தைகள்
காற்றோடு போகும்
நீங்கள் சொன்ன கொள்கைகள்
கனவோடு போகும்
உருவான பதவிகள்
ஒரு நாளில் போகும்
அப்போது உண்மைகள்
ஒருவேளை புரியும்!



படிப்பகம்



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பல வாடிக்கையாளர்களின் பெரு விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில் எமது புதிய கிளை:-
105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06
580230


# நீரும் — நிலமும்







ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657


← முரல் மீன் சால சாதாரணமாக நம்நாட்டில் வெப்பவலயப்பகுதிகளில் உப்பு நீர் ஏரிகளில் காணப்படுபவைதான். இருப்பினும் இவை கடல்களில் அதிக ஆழமில்லாத பகுதிகளை ஒட்டி வாழக் கூடியவையே! இவை விலாங்கு குடும்பத்தைச் சேர்ந்தவை. இலகுவில் பிடிகொடாமல் தப்பிவிடும் ஒருவரை விலாங்கு என்று கூறுவதுண்டு. இந்த முரல் மீனும் சுலபமாக அகப்படாமல் தப்பிக்கொள்ளும். முரல் மீனில் 12 வகை உள்ளன. 20 முதல் 35 சென்ரி மீட்டர் வரை வளரக்கூடியவை. நீளத்துக்கேற்ற உடல் பருமன் இவற்றுக்குக் கிடையாது. முதுகுப்பகுதி மட்டும் சற்றுப் பருத்திருக்கும். நீளமான தலையும் வாலும் உள்ளன.

எதிரியிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள மணலுக்குள் சுலபமாகவும் வேகமாகவும் தன் பின்பகுதி உடலை நுழைத்துக்கொண்டு முகப்பகுதியை மட்டும் வெளியே வைத்துக் கொண்டு நோட்டமிடும். எதிரி மறைந்ததும் உடலை மணலுக்குள்ளிருந்து மீள எடுத்துக் கொள்ளும். (இதனை கோழை மீன் என்று அழைக்கலாமோ)

நீளமான தனது உடலை மண்ணுள் புதைத்துவிட்டு கண் மற்றும் வாய் ஆகியவற்றுடன் முரல் மீன் ஓய்வெடுக்கும் காட்சிதான் இது. ■

# மகாசுவர்





← உலகிலேயே மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட மிகமிகமிக நீளமானது சீனப் பெருஞ்சுவராகும். உலகின் ஏழு அதிசயங்களில் பிரமாண்டமானதும் இதுதான். மகா மகா மகா நீளங்கொண்ட இச்சுவரை பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் தங்கள் கைகளினாலேயே கட்டினர். இயந்திர சாதனங்கள் எதுவும் பயன்படுத்தப்படவில்லை. இப்பணியில் ஆயிரக்கணக்கானோர் பலியாகினர்.

கிறிஸ்துவுக்கு முன் 400ம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட இப்பணி பகுதி பகுதியாக கிறிஸ்துவுக்குப்பின் 1600 வரை தொடர்ந்தது. மொத்தம் 2000 வருடங்கள் பிடித்தன. தொடர்ச்சியாக கட்டுமான வேலைகள் நடைபெறவில்லை. எதிரிகள் நாட்டுக்குள் புகுந்து சீனாவை ஆக்கிரமிக்காமல் தடுப்பதற்காகவே அக்கால மன்னர்கள் இச்சுவரைக் கட்ட ஆரம்பித்தனர்.

இச்சுவரின் அடித்தளம் பெரும்பாலான பகுதிகளில் 7.5மீட்டர் அகலமாகவும் சுமார் 7.5 மீட்டர் உயர்ந்து மேல்பகுதி 4.6 மீட்டராகவும் உள்ளது. சமதரை, மலைப்பாங்கான பிரதேசம், பாலைவனம் ஆகிய பல்வேறுபட்ட நில அமைப்புகளினூடாக இச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

அந்நாட்களில் பாதுகாப்புக் காரணங்களுக்காக இச்சுவர் அமைக்கப்பட்ட போதும் இன்றுள்ள நிலையில் பாதுகாப்புக்காரணங்களுக்காக இது பயன்படவில்லை. இருப்பினும் உலக அதிசயங்களுள் ஒன்றான இந்த நீண்ட சுவரைக் கண்டுகளிக்க வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் ஏராளமாகச் செல்கின்றனர். பிரதான சுவரும், கிளைச்சுவர்களுமாக சீனப் பெருஞ் சுவர் கட்டப்பட்டுள்ளது.


பிரதான சுவரின் நீளம் எவ்வளவு தெரியுமா? 3460 கிலோமீட்டர். அதாவது 2150 மைல்கள். கிளைச்சுவர்களின் நீளம் 3530 கிலோமீட்டர். மைல் கணக்கில் பார்த்தால் 2195 மைல்கள்.

யாழ்ப்பாணத்திலும் தற்போது மினிசீனச் சுவர்கள் உள்ளன. நீண்ட தூரத்துக்கு படையினர் அமைத்துள்ள பாதுகாப்பு அரண்களைத்தான் (பண்ட்) சொல்கிறோம். பாதுகாப்புச் சுவர் கட்டும் யோசனையை சீனாதான் முதலில் அறிமுகம் செய்ததோ?! ■

# மணல் கோட்டை

↓ 'மணல்கோட்டை கட்டாதே' என்று சொல்லக் கேட்டிருப்பீர்கள். ஏன் கட்டக்கூடாது என்று முயன்று பார்த்தார் ஒருவர். கட்டி முடித்தார்.

படத்தில் கம்பீரமாக காட்சியளிப்பது கற்களால் கட்டப்பட்ட கோட்டையல்ல. அசல் மணல் கோட்டையேதான். வெனிசுலா நாட்டைச் சேர்ந்த சிற்பி ஒருவர்தான் இதனை தத்ரூபமாக அமைத்துக் காட்டியிருக்கிறார்.



இந்த மணல் கோட்டையைப் பார்க்க ஏராளமான கூட்டம் திரண்டதாம். வெனிசுலா கடற்கரையில்தான் இதனை உருவாக்கியிருந்தார். கூட்டம் கூடியதைக் கண்டதும் சிற்பிக்கு ஒரு பக்காவான யோசனை தோன்றியது. இதனைப் போல பல மணல் கோட்டைகளைச் செய்து விற்பனைக்கு வைத்தாராம். மளமளவென்று விற்பனையாகி விட்டன. உதிராமல் சிதறாமல் இருக்கக்கூடியதாக மணல் கோட்டைகளை எப்படிக் கட்டுகிறார் என்ற இரகசியத்தை மட்டும் சொல்ல மறுக்கிறார். நல்ல வருமானம் சேர்கிறது. இரகசியத்தை உடைத்தால் தொழிலுக்குப் போட்டி வந்துவிடுமோ என்ற பயம்.

வளரும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும். வளர்ந்த பிள்ளைகளும் மண் விளையாட்டில் ஜமாய்க்கலாம். ■

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

திருகோணமலையைச் சேர்ந்த உதயானந் கொன்செட்டா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வி **உதேஸ்னி** தனது முதலாவது பிறந்தநாளை 10-06-97 அன்று கொழும்பில் உள்ள தனது அப்பம்மா வீட்டில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.



— உதேஸ்னி —

இவரை அன்பு அம்மா, ஆசைப் பெரியப்பா, பெரியம்மா, அப்பப்பா, அப்பம்மா, இமமம்மா குடும்பத்தினர், சுரேஸ் சித்தா, ரமேஸ் சித்தா, சுஜி அத்தை, லூக்காஸ் பப்பா குடும்பத்தினர். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல இயேசுக் கிறுஸ்துவின் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க வென வாழ்த்துகின்றனர்.

# 'எனக்கும் இடமுண்டு'

→ சவ்ரோவ் கங்குலி-இந்திய கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவராகிவிட்டார். இந்த உயரத்தை எட்ட கங்குலி கடந்துவந்த பாதை ஒன்றும் மலர் படுக்கையல்ல. அணியில் இவரை சேர்த்ததற்கே கடும் கண்டனங்கள் எழுந்தன. கர்வம் பிடித்த கல்கத்தாக்காரர் என்றெல்லாம் விமர்சிக்கப்பட்டார்.

கடந்த ஆண்டு இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் கங்குலிக்கு தன்மீதான அவதூறுகளை விளாச ஒரு வாய்ப்புக்கிடைத்தது. டெஸ்ட் போட்டியில் தொடர்ச்சியாக இரண்டு சதம் போட்டார். அவர் பதம்பார்த்தது பந்துகளை மட்டுமல்ல, தன்மீதான அவதூறுகளையும்தான். இங்கிலாந்து சுற்றுப்பயணம்தான் கங்குலியை அணியின் தூண்களில் ஒருவராகத் தூக்கி நிறுத்தியது.

அதன்பின்னர் மற்றொரு விமர்சனம் 'கங்குலி டெஸ்ட் போட்டிகளுக்கு மட்டுமே' இலாய்க்கு! என்றனர். தன்னம்பிக்கையுடன் ஆடி அந்த விமர்சனங்களையும் அடித்து நொறுக்கினார். இப்போது ஒருநாள் போட்டிகளில் டெண்டுல்கரின் ஜோடியாக களத்தில் இறங்கி பிரகாசிக்கிறார். அண்மையில் இந்தியாவில் மூன்று நாடுகளுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் டெண்டுல்கருக்கு கைகொடுத்து நின்றதுடன் சதம் போட்டும் அசத்தினார் கங்குலி.

சிறந்த துவக்க ஆட்டக்காரர்கள் இல்லையென்பது இந்திய அணிக்கு நீண்டநாள் குறை. அக்குறையை தொடர்ந்தும் தாக்குப்பிடித்து கங்குலி தீர்த்துவைத்தால் இந்திய அணி ரசிகர்களின் அமோக பாராட்டு அவருக்குத்தான். ■







இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காலிந்த 15ஏன், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்லவா, நாவலவில் உள்ள சமஸ்ல அச்சகத்தில் ஜூன் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்